தெய்வப் புலவர்

# திருவள்ளுவர்

[நாடகம்]

ஆசிரியர் :

நாரண - துரைக்கண்ணன்

"ஜீவா"

ஜீவோதயம் பிரசுரம்

சூளைமேடு, : : சென்னை-24.

முதல் பதிப்பு . ஜூலை, 1971.
உரிமையனைத்தும் ஆசிரியருக்கே.

விலை: ரூபாய் நான்கு

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் உதவியுடன்
வெளியிடப்படுகிறது.

# Daiva Pulavar Tiruvalluvar

A great play based on biographical sketch of
Tiruvalluvar

by

NARANA DURAIKANNAN
"Jeeva"

JEEVOTHAYAM, MADRAR-24.

Printed at Novel Art Printers, Madras-14.

# சாற்றுக்கவி

## அருள் மொழி அரசு
## திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

நேரிசை வெண்பா

தெய்வப் புலவர் திருவள் ளுவர்சரிதை
மெய்வண்ண மாக விளம்பினரால்- உய்வுபெற
நாரணது ரைக்கண்ண நற்புலவர் நாடகமாய்
காரணங்கள் காட்டிக் கனிந்து.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

நாரண துரைக்கண் ணெனும் நற்பெரும் புலவர் கோமான்
தாரணி தழைக்குமாறு தவப்பெரும் முனிவர் ஞான
வாரண மான வாய்மை வள்ளுவர் சரிதை தன்னை
பூரண மாகத் தந்தான் புத்தமு தென்ன வாழி!

## முத்தமிழ் வல்ல நல்லோர்!
## மூத்தவர் ஜீவா வாழ்க!
## நாடக ஆசிரியர் கவிஞர் எஸ். டி. சுந்தரம்

வையகத்துப் பொதுமறையாம் வாழ்வின்ப வழிவகுத்த
அய்யன்எம் வள்ளுவரின் அன்பு நெறி வாழ்க்கைதனை
வையத்து முக்கனிபோல் கண்டறிந்து எல்லோரும்
உய்யவொரு நாடகமாய் உருவாக்கினர் ஜீவா!

ஜீவியத்தைச் சீராக்கும் செந்தமிழில் கதைபலவும்
ஓவியத்தைப் போல்எழுதி உள்ளத்தைக் கவரும்ஒரு
காவியத்து எழுத்தாளர் கலைமகுப் பத்திரிகை
பூவியலில் வல்லவர்நற் பூரணத்தை நாடுபவர். 2

பூரணஞானம் பெற்றுப் பொலிவுறத் தமிழர்வாழ்வில்
காரண காரியங்கள் கலையொளி பெருகிச்சேர
ஆரணம் பலபயின்ற ஆன்றநற் கதைகள் கூறும்
நாரணதுரைக் கண்ணர்தாம் நல்லவர் நம்மில்மூத்தோர். 3

மூத்தநல் மரபினோடும் முன்புள்ள புதுமைச்சோலை
பூத்திடும் கதைகளோடும் புரையிலா நாடகங்கள்
யாத்திடும் ஆற்றலோடு அழகுநூல் பலபடைத்த
நாத்திறக் கவிஞர்இந்த நாடெல்லாம் அறிந்த நல்லோர்! 4

அறிந்தவர் தம்மைக்கண்டால் அன்பினில் உருகும்உள்ளம்
செறிந்தவர்; ஜீவாஎன்னும் சிறப்புடைப் பெயரில்சேவை
புரிந்தவர், நாற்பதாண்டாய்ப் பைந்தமிழ்ப் பயிரே செய்து
பெருந்தமிழ்த் தோட்டம்கண்ட பண்ணையார் வாழ்க! வாழ்க! 5

பண்ணைகள் வைத்தாலென்ன? பலன்எல்லாம்
நாட்டுக்கேதான்
பெண்ணையின் ஆற்றில் நன்கு பெருகிடும் வெள்ள மெல்லாம்
மண்ணிதை வளமேசெய்யும் மாருத மழையைப் போல
எண்ணத்தைப் பொழியும்இந்த எழுத்தாளர் இனிது வாழ்க! 6

வாழ்கஇவ் வள்ளல் தந்த வள்ளுவர் நாடகத்தை
வாழ்கின்ற தமிழர் வாங்கி வளம்பெற மேடை யேற்றி
யாழிசை இனிமையோடு எல்லோரும் காணுமாறு
எழிசைக் கலைஞர்செய்தால் இந்நாடு நன்றிகூறும். 7

# சிறப்புரை

## மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
(முதலமைச்சர், தமிழ்நாடு அரசு)

உலக மக்கள் பலரின் உள்ளம் கவர்ந்த திருவள்ளுவர் வாழ்க்கை பற்றியறிய, தக்க வரலாற்றுச் சான்றுகள் எதுவுமில்லை. இடைக்காலத்தே எழுந்த கதைகளையே நம்மில் பலரும் இன்று படித்து வருகிறோம். அண்மையில் நாவலர் எஸ். எஸ். பாரதியார் அவர்கள், வழங்கி வந்த கதைகளில் காணப்பட்ட இழிந்த இயல்புகளைத் தன் வாக்கு வன்மையால் மாற்ற முயன்றார். திருவள்ளுவரை அரசரின் 'உள்படு கருமத் தலைவர்' எனத் திறம்பட மணிமேகலை போன்ற இலக்கிய ஆதாரங்கள் கொண்டு நிறுவினார்.

'தெய்வப்புலவர் திருவள்ளுவர்' என்னும் இந்நூல் வள்ளுவர் பற்றி கர்ணபரம்பரையாக வழங்கி வரும் பழங்கதையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஒரு நாடக நூல்; எனினும் திருக்குறளின் கருத்துக்களைத் திருவள்ளுவர் வாழ்க்கையில் பல இடங்களில் காட்டி அதற்கேற்பக் கதை புனைந்து நாடகத்தை நடத்திச் செல்லுகிறார் ஆசிரியர். பிள்ளைப் பருவமாகிய பள்ளிப் பருவத்திலேயே பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கருத்தை வள்ளுவர் பேச்சின் வாயிலாக ஆசிரியர் காட்டுகிறார். வாசுகியார் தலைமையமைச்சரின் மகள்—அவள் பால் வள்ளுவர் காதல் கொள்ளல்—திருமணம்—முதனாள் இரவு—வீரர்களோடு பொருது வெற்றி பெறல்—வேலையினின்று விலகி நெசவு மேற்கொள்ளல் போன்ற புதிய நிகழ்ச்சிகள் பல நாடகத்தில் புகுந்துள்ளன. சிவனார் திரு நடனம், ஏலேலசிங்கன், கொங்கணன் கதை, பழையமுதுக்கு விசிறி கொணரச் செய்தல், உண்ணும் முன் ஊசியும் நீரும்

வைத்தல், கிணற்றிலே குடத்தை அப்படியே விட்டு வரல் போன்ற கற்பனைகளையும் ஆசிரியர் தழுவி நாடகத்தை நடத்திச் செல்லுகிறார்.

காட்சி பதினொன்றில் வள்ளுவரும் வாசுகியும் இரவிலே சந்திக்கின்றனர். அக்காட்சியில், அவர் தம் இன்ப உரையாடலிலே, 'யான் நோக்குங்காலை நிலன் நோக்கும்:' 'தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்', 'பாலொடு தேன் கலந்தற்றே, 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து' 'மலரினும் மெல்லிது காமம்' போன்ற காமத்துப் பாலிலுள்ள குறட்பாக்களின் சொல்லும் கருத்தும் மிளிர்கின்றன.

பொறுமையை அளவிட வந்த ஒருவன் துணியைக் கிழித்து வள்ளுவரிடம் விலை கேட்கிறான். துணிந்து அவன் கன்னத்தைச் சுவை பார்க்கிறது அவரது கை. அப்போது தான் செய்த செயல் தக்கதே என்பதைக் 'கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்' என்னும் குறளால் திருவள்ளுவர் விளக்குவது போன்றவை நாடகத்தின் சுவையை மேலும் மிகுத்துக் காட்டுகின்றன. கிள்ளுவன், அவன் மனைவி பூதகி ஆகியோர் நகைச்சுவைக்காக இடையிடையே தோன்றுகின்றனர். திருடர்கள் ஏலேலசிங்கரது இல்லத்தே திருடவருதலும், தங்கக் கட்டியை மீனவர் கொண்டு வந்து தருதலும் நாடகத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.

பத்திரிகை உலகிலும், இலக்கியத் துறையிலும் தமக்கெனை ஓரிடத்தைப் பெற்றுள்ள பழம்பெரும் எழுத்தாளர் திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கள் நாடகத் துறைக்கு அளிக்கும் இந்நூல் படிக்கத் தக்கது; நடிக்கத் தக்கது. அவரது எழுத்துப்பணி மேன்மேலும் தமிழ் மக்களுக்குப் பயன்படுவதாக.

27—4—71.

மு. கருணாநிதி

## வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

திருக்குறள் உலகம் போற்றும் நூலாக விளங்குகிறது. நாள் ஆக ஆக அதன் புகழும் பயனும் பெருகி வருகின்றன. பல பல மொழிகளில் அது ஏறி வருகிறது. அதைப் பற்றிய ஆராய்ச்சிகளும் விரிந்து வருகின்றன. சாதி, சமயம், இனம், இடம், காலம் என்ற வேறுபாடுகளைக் கடந்து அதன் ஒளி நிலவி வருகிறது. திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களும் பல்வகை உரைகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன.

ஆயினும் திருவள்ளுவரைப் பற்றிய உண்மை வரலாறு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. அவரைப்பற்றி வழங்கும் கதைகளுக்குக் குறைவே இல்லை. அவர் இன்ன காலத்தினர், இன்ன இடத்தில் வாழ்ந்தவர், இன்ன சாதியினர், இன்ன சமயத்தினர் என்று வரையறையாகக் கூறமுடியாத நிலையில் இருக்கிறோம் என்றாலும், திருவள்ளுவர் என்றாலே பெரும்புலவர், தெய்வப்புலவர், மகாமேதாவி, மெய்ஞ்ஞானி என்ற எண்ணமே நம் உள்ளத்தில் தோன்றுகிறது.

என்னுடைய உழுவலன்பர் திரு. நாரண-துரைக்கண்ணன் அவர்கள் திருவள்ளுவர் வரலாற்றை நாடகமாக்கித் தந்திருக்கிறார். திருவள்ளுவரைப் பற்றி வழங்கும் நிகழ்ச்சிகளையும் திருக்குறளையும் தம்முடைய கற்பனையையும் கலந்து காட்சிகளை உருவாக்கி இந்த நாடகத்தைப் பின்னியிருக்கிறார்.

திருவள்ளுவர் ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்த குழந்தை என்பதும், அவர் பிறந்தவுடனே தாய் தந்தையர் அவரை விட்டுப் பிரிந்தனர் என்பதும், அவர் வாசுகியை மணந்தார் என்பதும், மயிலாப்பூரில் அவர் நெய்தல் தொழில் செய்து வந்தார் என்பதும், அவரிடம் தேவர்கள்வந்துஇறைவனுடைய ஊர்த்துவ தாண்டவ இரகசியத்தை உணர்ந்தனர் என்பதும், அவருக்கும் ஏலேலசிங்கருக்கும் நட்பு உண்டாயிற்றென்பதும்,

ஏலேலசிங்கர் கடலில் இட்ட பொற்கட்டி மீண்டும் அவரை அடைந்தது என்பதும், வாசுகி கொங்கணவரின் செருக்கை அடக்கினார் என்பதும், வாசுகி கிணற்றில் பாதி இழுத்த குடத்தையும் கயிற்றையும் அப்படியே விட்டு வர அவை அப்படியே நின்றிருந்தன என்பதும், வள்ளுவர் வேட்டியைக் கிழித்தவனுக்குத் தண்டனை கொடுத்து அறிவு வரச்செய்தார் என்பதும், அவர் உண்ணும் போது ஊசியையும் நீரையும் அருகில் வைத்துக் கொண்டு உண்டார் என்பதும், திருக்குறளை சங்கப்பலகை ஏற்றுக்கொண்டது என்பதும் ஆக வழங்கிவரும் கதைகளைத் தழுவி அமைத்துக் கொண்ட பகுதிகள், திருவொற்றியூரில் யாகத்தை நிறுத்தியது நக்கண்ணனைத்திருத்தியது என்பவை திருக்குறள் கருத்தைத் தழுவி அமைத்த காட்சிகள். திருவள்ளுவரும் வாசுகியும் மனம் ஒன்றிய காதலில் ஈடுபடும் காட்சியில் திருக்குறட் கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன. திருவள்ளுவர், தொண்டைமான் இளந்திரையனிடம் உள்படு கருமத்தலைவராக இருந்து பிறகு அரசியலை வெறுத்து நெய்தல் தொழிலை மேற்கொண்டதாக அமைத்துள்ள கற்பனை சுவைக்கத்தக்கது. கிள்ளுவன், பூதகி என்ற இரண்டு பாத்திரங்களைப் படைத்து இந்த நாடகத்தில் உலவ விட்டிருக்கிறார் ஆசிரியர். அவர்கள் இந்த நாடகத்தில் நகைச்சுவை மணக்கும்படி செய்கிறார்கள்.

ஒவ்வொரு காட்சியும் சுவையுள்ள உரையாடல்களுடன் விளங்குகிறது. நாடகத்தின் முடிவில் திருவள்ளுவரின் மதிப்புக்குரிய உருவமும் வாசுகியின் கற்புத் திருவுருவமும் படித்த மக்களின் உள்ளத்தில் பதியும்படியாக அமைந்துள்ளது.

அன்பர் திரு நாரண துரைக்கண்ணனுடைய கற்பனையையும், பழமையும், புதுமையும் இணைத்துச் சுவைபட காட்சிகளை அமைத்திருக்கும் பாங்கையும் பாராட்டுகிறேன்.

இத்தகைய நூல்கள் இன்னும் பலவற்றை எழுதி இந் நூலாசிரியர் புகழும் பயனும் பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

9—5—71 கி. வா. ஜகந்நாதன்

## முத்தமிழ்க் கலை வித்தகர்
## அவ்வை தி. க. ஷண்முகம் எம். எல். சி. அவர்கள்

ஆசிரியர் திரு நாரண- துரைக்கண்ணன் அவர்கள் என் அன்புக்கும், பெரு மதிப்புக்குமுரிய நண்பர். பழம் பெரும் எழுத்தாளர்.

'ஆனந்தபோதினி', 'பிரசண்ட விகடன்' ஆகிய இலக்கிய ஏடுகளின் ஆசிரியராக விளங்கிப் புகழ் பெற்றவர்.

நெஞ்சையள்ளும் நாவல்கள், நீதியை வலியுறுத்தும் சிறு கதைகள், நாட்டுக் குழைத்த நல்லவர்களின் வரலாறுகள், நற் பயன் தரும் நாடகங்கள் ஆகிய பல்வேறு இலக்கியச் செல்வங்களைத் தமிழுலகுக்குத் தந்த இலக்கிய மேதை.

இவருடைய 'உயிரோவியம்' எங்கள் நாடக மேடைக்குப் பெருமை சேர்த்த நாடகங்களிலே ஒன்ருகும். தாய் மொழியாகிய தமிழின் மேல் இவருக்குள்ள ஆழ்ந்த பற்றும், சமுதாய முற் போக்கிலே இவர் கொண்டுள்ள சீரிய எண்ணங்களும், இவர் படைத்த இலக்கியங்களிலே ஒளி வீசுவதைக்காணலாம்.

'தெய்வப் புலவர் திருவள்ளுவர்' இவரது அருமையான படைப்புகளிலே ஒன்ருகும். இந்நாடக நூலைப் படைத்ததன் மூலம் ஆசிரியர் நமது பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியராகிருர்.

தமிழ் மறையாகிய திருக்குறளுக்கும் அதனை இயற்றிய திருவள்ளுவப் பெருமானுக்கும் தனிச் சிறப்புக் கிடைத்துள்ள இன்றைய சூழலில் ஆசிரியரின் 'திருவள்ளுவர்' நாடக நூல் வெளி வருவது பெருமைக்குரியதாகும்.

திரு. நாரண - துரைக்கண்ணன் அவர்கள் புலவர் புராணம், விநோதரச மஞ்சரி முதலிய பழைய நூல்களின்

அடிப்படையிலேயே இந்நாடகத்தைப் படைத்திருக்கின்றார். ஆசிரியரின் நீண்ட கால அனுபவமும் கற்பனையும் நாடகத்திற்கு மேலும் மெருகூட்டி யிருக்கின்றன.

செவிவழிச் செய்தியாக நம் தாய்மார்கள் உள்ளத்தில் பதிந்துள்ள தெய்வீக நிகழ்ச்சிகள் எதையும் ஆசிரியர் ஒதுக்கி விடவில்லை. அவற்றிற்கு மேலும் மெருகூட்டி உள்ளத்தில் பதியுமாறு காட்சிகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

நாடகத்தின் நகைச் சுவைக்காக ஆசிரியர் படைத்துள்ள கின்னுவன், பூதகி ஆகிய பாத்திரங்கள் நகைச் சுவையினை விரும்புவோருக்கு மகிழ்ச்சி யூட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

திரு. நாரண - துரைக்கண்ணன் அவர்களின் 'திருவள்ளுவர்' நாடகம் நாடெங்கும் மேடைகளில் நடிக்கப் பெற்றுப் புகழ் பெற வேண்டும் என்ற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியரின் இந்த நற்பணியைத் தமிழுலகம் நல்ல முறையில் வரவேற்று ஆதரிக்க வேண்டுமென்பது என் வேண்டுகோள்.

13-5-71

தி. க. ஷண்முகம்

# தந்துரை

உலகப் பேரறிவாளர்களிடையே நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் பலவகைகளில் தனித்து நின்று பெருமை பெறத் தக்க தகுதி வாய்ந்தவர்கள். அவர்கள் இயற்றியுள்ள அறிவு நூல்கள் இகவாழ்வுக்கு மட்டுமல்லாமல் பரம்பொருளை அடைவதற்கும் வழிகாட்டுபவை; நம் நாட்டு மக்களுக்கு மட்டுமேயன்றி, உலக முழுவதிலுமுள்ள எல்லா மக்களுடைய வாழ்க்கைக்கும் விளக்கந் தந்து உயர்த்துபவையாகும். ஆகவேதான், உலக இலக்கிய வரிசையில், நம் மொழியில் உள்ள இலக்கியங்கள் ஈடு இணையற்றவையாக விளங்குகின்றன. இவ்விதம் உலக இலக்கியங்களுக்குள் ஒப்பற்ற நிலையில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் செழுமை மிக்க நம் இலக்கியச் செல்வங்களில் உலகம் உள்ளளவும் நிலைபெற்று நிற்கத் தக்க அறிவு நூல்களை ஆராய்ந்து பார்க்கும் போது நம் அகக்கண் முன்னே முன்னணியில் வந்து நிற்பவை இரண்டு. ஒன்று திருக்குறள்; மற்றொன்று பகவத்கீதை. இவ்விரு பெரு நூல்களும் விவிலிய வேத நூலான பைபிளைப் போலவே, உலகில் வழங்கி வரும் பெரும்பாலான மொழிகளில் ஆக்கப்பட்டுப் பயிலப்பட்டு வருகின்றன.

இவற்றிலுங்கூட, திருக்குறள் உலகிலுள்ள எல்லா இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகப் பொது நீதியைப் போதிப்பதால் 'உலகப் பொதுமறை' என ஒரு முகமாக உலகப் பேரறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. தத்துவ ஞானத்தை உணர்ந்து கொள்ள விரும்புவோர் கீதையைச் சிறந்த ஒன்றாகப் போற்றுகின்றனர்.

இல்வளவு சிறப்புமிக்க அறிவு நூல்களைச் செய்த நல்லாசிரியர்களைக் குறித்து அறிந்து கொள்ள உலகம் அவாவி நிற்கிறது. ஆனால், பிற நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல; நம் நாட்டு

மக்களுக்குக் கூட இவர்களைப் பற்றிய உண்மையான வரலாறு களைச் சொல்லும் நிலையில் நாம் இல்லை. ஏனெனில், முற்காலத்தில் பெரியோர்கள், பெரும்புலவர்களுடைய வரலாறுகளைக் கூடக் குறித்து வைக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை குறித்து வைத்திருந்து அவ்வரலாறுகள் கால வெள்ளத்தில் மறைந்து போயிருக்கலாமோ என்று ஊகிப்பதற்கும் இடமில்லை. ஆகவே, திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்; கீதையைத் தந்தவர் வேதவியாசர் என்று சொல்லும் அளவில்தான் நாம் இருக்கிறோம். அதற்குமேல் விவரமாக வாழ்க்கை வரலாற்றை விவரிக்க நம்மால் இயலவில்லை.

இவ்விரு பெரும் அறிஞர் பெருமக்களுக்கு மட்டுமல்ல; வான்மீகி, காளிதாசன், கம்பன், பவபூதி, திருத்தக்கதேவர் முதலிய காப்பியப் புலவர்களுக்கும் கவிஞர்களுக்கும் நல்லிசைப் புலவர்களுக்கும் கூடச் சரியான வரலாறு கிடைக்கவில்லை. ஆகவே, வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் மக்களிடையே வழங்கிவரும் செவிவழிச் செய்திகளையும் கதைகளையும் வைத்துத் தான், பண்டைக்காலப் புலவர்கள், கவிஞர்கள், அரசர்களுடைய சிறப்புக்களை அறிந்து போற்ற வேண்டியிருக்கிறது. வரலாற்று ஆராய்ச்சி அறிஞர்கள், பண்டைப் புலவர்கள், மன்னர்களுடைய வாழ்க்கையுண்மைகளை ஆராய்ந்து அறிவதற்குக் கூட, இச் செவிவழிக் கதைகளைத் தான் அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

திருவள்ளுவருடைய உண்மையான வரலாற்றை அறிந்து கொள்ள அறிஞர் பெருமக்கள் பலர் சென்ற நூற்றாண்டிலிருந்து ஆராய்ச்சி மூலம் முயன்று வருகின்றனர். ஆனாலும், அவர்களுடைய ஆராய்ச்சியெல்லாம் போதிய அளவு பயனளிக்கவில்லை.

தென்னிந்திய கல்வெட்டு ஆராய்ச்சி மூலம் தமிழ்மன்னர்கள், புலவர்கள், வள்ளல்கள் சிலருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் ஓரளவு கிடைத்திருக்கின்றனவே யொழிய, தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்ற பெரும் புலவர்களுடைய வர

லாறுகள் ஒரு சிறிதும் கிடைக்கவில்லை. அவர்கள் வாழ்ந்த காலம் தான் ஓரளவு கணிக்கப்பட்டிருக்கிறது. அதிலுங்கூடப் பெரும்பாலும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. பலதிறப்பட்ட கருத்துக்கள் பெருகிக் குழப்பந்தான் அதிகமாகியிருக்கிறது. இதற்குக் காரணம் நடுநிலையில் நின்று ஆராய்ச்சி நூல் செய்வோர் மிக அருகியிருப்பதுதான். பெரும்பாலோர் தாங்கள் ஒன்றை ஆராய்ச்சி செய்வதற்கு முன், அது பற்றித் தாம் முன்னதாகவே ஒரு முடிவு செய்துகொண்டு அக்கருத்துக்கு ஏற்ப ஆதாரங்களைத் தேடிக் காட்ட முயல்கின்றனர்.

திருவள்ளுவரைப்பற்றி வந்துள்ள ஆராய்ச்சி முடிவுகள் பெரும்பாலும் இவ்வித நிலையில்தான் இருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் தங்களுக்குள் முன்கூட்டியே உருவாக்கிக் கொண்டுள்ள தங்கள் கருத்துக்களை நிலைநிறுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பதாலேயே, இதில் ஒரு தெளிவு ஏற்படவில்லை என நான் வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

திருவள்ளுவர் தொண்டை நன்னாட்டில் திரு மயிலாப்பூரில் பிறந்து வாழ்ந்தவர்; ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தவர்; வாழ்வில் பெரும்பகுதி நெசவுத் தொழில் செய்து வந்தவர் என்பவற்றை என்ன காரணத்தாலோ தென் தமிழ்நாட்டு அறிஞர் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. 'இப்பக்கம் மாதாநு பங்கி மருவு புலச் செந்நாப் போதார் புனற் கூடற்கு அச்சு' என்று நல்கூர் வேள்வியார் பாடியுள்ள ஒன்றே முக்கால் அடியை ஆதாரமாக வைத்துக் கொண்டு திருவள்ளுவர் மதுரைக்குரியவர் என நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றோர் தங்கள் கருத்தை நிலைநாட்ட முயல்கின்றனர். மற்றுஞ்சிலர் காவிதிப்பாக்கம் வேளாளக் குடியிலிருந்து வாசுகியை மனைவியாகக் கொண்டிருப்பதைக் காட்டி திருவள்ளுவர் வேளாளர் மரபில் பிறந்தவர் என்றும், நாஞ்சில் வள்ளுவனை நினைவுபடுத்தி வள்ளுவன் பெயர் ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி அரச குடியில் தோன்றியவர் என்றும் வலியுறுத்திச் சொல்ல முயன்றிருக்கின்றனர்.

மக்களிடையே தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் செவிவழிச்செய்திகளே யன்றி, திருவள்ளுவ மாலை, திருக்குறள் சிறப்புப்பாயிரங்கள் ஆகியவைகளில் குறிப்பிடப்படும் வாழ்க்கைக்குறிப்புகள், ஞானமிர்தம் என்ற நூலில் கூறப்படும் கதை, கபிலர் அகவல் விவரிக்கும் கதை, சமண சமயத்தவரிடையே வழங்கும் கதை, புலவர் புராணம் ஆகியவை வாயிலாக, திருவள்ளுவருடைய வாழ்க்கை வரலாற்றை ஓரளவு அறிய முடிகிறது. மேற்குறித்தவற்றில் பெரும்பாலானவை திருவள்ளுவர் ஆதிக்கும் பகவனுக்கும் மகனாகப் பிறந்தவர், நெசவுத் தொழில் புரிந்தவர், மயிலையில் வாசுகியுடன் வாழ்ந்தவர் என்பவற்றை ஒப்புக்கொண்டிருக்கின்றன. ஞானமிர்த உரைக் கதைதான் யாளிதத்தன் என்பான் ஆதி என்ற சண்டாளிப் பெண்ணைக் கூடிப் பெற்ற ஏழு பிள்ளைகளில் திருவள்ளுவர் ஒருவர் எனக் கூறுகிறது. சமணர் கூறும் வரலாற்றில் மட்டும் கரமுண்டன் என்ற வைசியனுக்கும், சீமதி என்னும் பெண்ணுக்கும் மகனாகப் பிறந்த ஏலாச்சாரி என்பவரே திருக்குறளை இயற்றி அவருடைய மாணவரான திருவுள்ளம் நயினாரிடந் தந்து சங்கத்தில் அரங்கேற்றுமாறு கட்டளையிட்டுச் சென்றார். அதன்படி திருவுள்ளம் நயினார் சங்கப் புலவர் செருக்கடக்கித் திருக்குறளை அரங்கேற்றியதால், காலப்போக்கில் திருவள்ளுவ நாயனார் திருக்குறளைப் பாடினார் என வழங்கலாயிற்று என்று கதையளக்கப் பட்டிருக்கிறது.

திருக்குறள் வாயிலாக, நாம் அறியும் திருவள்ளுவரின் மதி நுட்பமும் உலகியல் அறிவும் செல்வக் குடியில் பிறந்து வளர்ந்த ஒருவருக்குத்தான் இருக்கமுடியும் என்று அவரை அரச மரபினர், வேளாளக் குடியினர் என நிலைநாட்ட முயன்ற அறிஞர்கள் முடிவு செய்திருக்கின்றனர். இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நுண் மாண் நுழை புலம் மக்களாய்ப் பிறந்த எல்லோர்க்கும் இயற்கையாக இருக்கக்கூடியது. மேதைமை உயர் குடியிற் பிறந்த ஒரு சிலர்க்கே உரியது எனக் கூறுவது பொருந்தாது. அத்துடன், கீழ்நிலையிலுள்ளோர் தன் முயற்சியால் மேல் நிலைக்கு உயர்ந்தார் என்பதில் தான் சிறப்

பிருக்கிறது. இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டே நான் பிறக்கும் போதே அநாதையாய் விடப்பட்ட திருவள்ளுவர் அரிதின் முயன்று அறிவிலும் ஆற்றலிலும் வளர்ந்து வாழ்வில் உயர்ந்தார்; பிறர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நின்றார் என்று கூறும் கேள்வி வழிக்கதையையே பெரிதும் என் நாடகத்துக்கு அடிப்படையாகக் கொண்டேன். திருவள்ளுவர் என்றவுடனே நீண்ட காலமாகத் தமிழ் மக்களின் உள்ளங்களில் நிலைபெற்றுப் பசுமையாக இருந்து வரும் கதைக் கருவைப் பெரிதும் பயன்படுத்தி திருவள்ளுவரின் பேருருவை-இந்நாடக மூலம் காட்டப் பெரு முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், பகவனைப் பார்ப்பனனாகவும் ஆதியைப் புலைச்சியாகவுங் கொள்ளாமல், பகவனை முக்கோல் ஏந்திந் திரிந்த அந்தணத் துறவி என்றும், ஆதியை நற்குடியொன்றில் பிறந்த நங்கை என்றும் கொண்டு இவ்விருவருடைய காதல் வாழ்வில் பிறந்த மக்களில் ஒருவரே திருவள்ளுவர் என என் நாடகத்தில் நிலைநாட்டியிருக்கிறேன். அத்துடன் வள்ளுவர் காஞ்சி மன்னனிடம் உட்படு கருமத் தலைவராய்ச் சில காலம் இருந்தார் என்றும் பின் அரசியல் சூழல் பிடிக்காமல் அப்பதவியிலிருந்து விலகி நெசவாளரானார் என்றும் பொருத்தமாகக் கற்பித்துக் காட்சிப் படுத்தியிருக்கிறேன்.

திருவள்ளுவர் திருமயிலையில் பிறந்து வளர்ந்தவர் என்பதற்குத் தான் அதிக ஆதாரமிருக்கிறது. மயிலையில் திருவள்ளுவர்க்கென ஒரு கோயில் இருப்பதொன்றே போதிய சான்றாகும். இது சில நூற்றாண்டுகளுக்கு முன்தான் கட்டப்பட்டது என்று சொல்லி ஒதுக்கிவிட முடியாது.

திருவள்ளுவரின் மனைவியான வாசுகி காவிதிப் பாக்கத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது காவிரிப்பாக்கம் எனத் தற்போது வழங்கி வரும் ஊரில் வாசுகி வாழ்ந்து வந்த குடில் முதலியனவும், அவர் பெயராலும், அவருடைய தந்தையார் பெயராலும் வீதிகள், இடங்களும் இருப்பதிலிருந்து அறியலாம்.

திருவள்ளுவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என அறுதியிட்டுக் கூறியுள்ள என்னுடைய பேராசிரியர் மறைமலையடிகளார் 'கபிலர் அகவல்' கதையை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கிறார். "சங்க காலப் புலவரான கபிலர் கூறிய கதையில் பிறழ்ச்சி யொன்றுமில்லை; சொற்போக்கு, பொருள் வளம், நடை முதலியவற்றை ஒப்பிடுவோர்க்கு இவ்வகவல் சங்க காலத்ததே என்பது புலனும்; ஆகையால், இதன்கண் கூறப்படும் உண்மைகள் கொள்ளத் தக்கனவே" என்று அவர் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார். அத்துடன் அவர், "தம்மை ஈன்றெடுத்த தாய் தந்தையரை ஒழுக்கத்திற் சிறந்த ஆசிரியர் போற்றுவதற்காகவே 'ஆதி பகவன்' என்ற இரு சொற்களையும் திருக்குறளில் முதற்கண் வைத்தார்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார். 'திருவள்ளுவருடைய மனைவியின் பெயர் பாப்பம்மை அல்லது நாகம்மை என்றிருந்திருக்க வேண்டும். இத் தமிழ்ப் பெயர் பின் வாசுகி என வடமொழியாக்கப்பட்டிருக்கலாம்' என அவர் கருதுகிறார். அதுபோலவே 'வழித்துணைவர் என்ற தந்தையார் பெயர் மார்க்க சகாயர் என மாற்றப்பட்டிருக்க வேண்டும்' என்று அவர் கருதுகிறார். 'மனைவாழ்க்கை, நெசவு நெய்து வாழ்ந்தது முதலிய யாவும் உண்மையோ பொய்யோ என்று துணிந்து கூறுதற்கில்லை' என்றுந் தெரிவித்திருக்கிறார்.

எனவே, நான் மறைமலையடிகளார் போன்ற அறிஞர்கள் நடுநிலையில் நின்று ஒப்புக் கொண்ட செய்திகளை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான், இந் நாடகத்தை உருவாக்கியிருக்கிறேன். கற்பனைக் கதைகள் என நிச்சயமாகத் தெரிந்தும், 'காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்' என்ற அடிப்படையில் வாழ்ந்த வாசுகியின் கற்பின் திறனை மங்கையர் உள்ளங்களில் பதிய வைப்பதற்காகவும் நாடக அரங்கில் சுவை சேர்த்து காண்போர் உள்ளங்களைக் கவர்வதற்காகவும் சில காட்சிகளை அமைத்திருக்கிறேன்.

மற்றப்படி, நாடகத்தின் பிற்பகுதியில் வரும் காட்சிகள் பலவற்றை, திருக்குறள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே அமைத்திருக்கிறேன். இவற்றில் திருவள்ளுவர் கள்ளுண்டல், பிறன் மனை விழைதல், உயிர் பலி கொடுத்தல் போன்றவற்றைக் கண்டித்திருக்கிறார் எனக் காட்டியிருக்கிறேன்.

கற்புடைத் தெய்வமாக ஆக்கி நாடகத்தில் வாசுகிக்கும் உயர்ந்த இடந் தந்திருக்கிறேன். மனைவியின் இறுதி வேண்டுகோளின்படி திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளை, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றி ஆறுதல் பெறுவதாகக் காட்சியமைத்து நாடகத்தை முடித்திருப்பதை அறிஞர்கள் கவனிக்க வேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் விளையாட்டாகத் திருவள்ளுவர் வரலாற்றை இதே பெயரில் எழுதி வெளியிட்ட நான் இப்போது இந்நாடகத்தை எழுதுவதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டேன். திருவள்ளுவருடைய பெருமையையும் திருக்குறளின் தனிச் சிறப்பையும் பரப்புவதற்காகத் தங்கள் கால முழுதும் அரும்பாடு பட்டு வந்த என் இயற்றமிழாசிரியர் திருக்குறள் விளக்கம் குப்புசாமி முதலியார், தமிழ்ப் பெருங்கடல் மறைமலையடிகளார் ஆகியவர்களின் அன்புக்குரிய மாணவன் என்ற முறையில் அவர்களுக்குப் பெருமை தரும் முறையிலேயே இந்நாடகத்தை இயற்றியிருப்பதாக நான் எண்ணுகிறேன்.

நான் இந் நாடகம் எழுதுவதற்கு மூலகாரணமாக இருந்த அன்பு நண்பர் இராச நாயகத்தை என்னால் மறக்க முடியாது. இவர் டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவில் முக்கிய நடிகராயிருந்து புகழ்பெற்றவர். அவர்களுக்கு உறவினருமாவார். நடிகவேள் எம். ஆர். இராதா நாடகங்கள் நடத்துவதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்த காலத்தில் துணிந்து அவருடைய நாடகக் குழுவை சென்னை மாநகருக்குக் கொண்டு வந்து ‘இரத்தக் கண்ணீர்’’ முதலிய நாடகங்களைப் பிரபலப்படுத்தியவர். சங்கரதாச சுவாமிகள்

நாடக சபை என்ற பெயரால் சொந்தமாக நாடகக் குழு வொன்றை ஏற்படுத்தி 'வள்ளலார்' நாடகம் முதலியவைகளை நடத்தி வருபவர்.

எத்தனையோ இன்னல் இடையூறுகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் பொருட் படுத்தாமல் நல்ல நாடகங்களை நடத்துவதிலேயே நாட்டங் கொண்டவரான நண்பர் இராச நாயகம் 1969-ம் ஆண்டில் ஒரு நாள் என்னிடம் திருவள்ளுவர் வாழ்க்கையை நாடகமாக்கித் தரவேண்டுமென்றும் அதை நல்ல முறையில் நடத்திப் பெயர் பெற விரும்புவதாகவும் நட்புரிமையுடன் வற்புறுத்திக் கேட்டு கொண்டார். அவர் ஏற்கனவே, வள்ளலார் நாடகத்தை எழுதித் தருமாறு கேட்டுத் தராமல் போய்விட்டேன். 'நீங்கள் எழுதித் தராததால் தான் நான் வேறொருவரைக் கொண்டு எழுதி நடித்தும் வெற்றி பெறவில்லை' என என்னைப் பார்க்கும் போதெல்லாம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். ஆதலால், இம் முறை அவர் வேண்டுகோளைக் கண்ணோட்டமின்றிப் புறக்கணிக்க முடியவில்லை. அத்துடன், என் அன்புக்குரிய நண்பரான பிரபல நாடக ஆசிரியர் ரா. வேங்கடாசலம் இராச நாயகத்துக்காகப் பரிந்து வந்து என்னை எழுதித் தருமாறு வற்புறுத்தலானார். நான் இதுவரை டி.கே. எஸ். சகோதரர்களின் நாடகக்குழுவுக்குத் தவிர, எத்தனையோ பேர் கேட்டும் வேறு யாருக்கும் நாடகம் எழுதித் தந்ததில்லை. இதனால் கலைவாணர் போன்றருடைய மன வருத்தத்துக்குக் கூட நான் ஆளானதுண்டு. இது நண்பர் இராச நாயகத்துக்குத் தெரியும்.

ஆகவே, தயக்கத்துடன் நான், 'எழுத முயற்சிக்கிறேன்' என்றேன். அடுத்த வாரமே அவர் 'ஜீவா எழுதும் திருவள்ளுவர் நாடகம் கவிஞர் வில்லி புத்தனின் பாடல்களுடன் வெகு விரைவில் அரங்கேறப் போகிறது' என்று அச்சடித்த விளம்பரத் தாளுடன் நண்பர் வில்லி புத்தனையும் அழைத்துக் கொண்டு என்னைப் பார்க்க வந்து விட்டார். இனி அவரிடமிருந்து தப்ப முடியாது என்று எண்ணி, உடனே

நாடகத்தை எழுதுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவிட்டேன். ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை ஆராய்ந்து பார்த்து விட்டு நாடகத்துக்கு ஓர் உருக் கொடுத்து எழுதி முடிப்பதற்கு நாலைந்து மாதமாய் விட்டது. அதற்குள் இராச நாயகம் வழக்கம்போல் வாழ்க்கைச் சோதனைக்குள்ளாய் விட்டார் என்று நண்பர் ரா.வே., கவிஞர் தேவிதாசன் ஆகியோர் மூலம் அறிந்தேன். அவர் நேரில் என்னைப் பார்க்கக் கூசிக் கடிதங்கள் வாயிலாக நம்பிக்கை யூட்டிக் கொண்டிருந்தார்.

'நண்பர் நடத்தும் போது' நடத்தட்டும். எழுதியதை நூல்வடிவில் கொண்டு வந்து விடுங்கள்' என நண்பர் எஸ். டி. எஸ். யோசனை கூறினார். அதன்படி தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் பொருள் உதவியைப் பெற்று இந்நாடகத்தை நூல் வடிவில் கொண்டு வந்திருக்கிறேன். இவ்வகையில் மேற்படி சங்கத்தின் செயலாளர் சுந்தரம் அவர்களுக்கும் பிற உறுப்பினர்களுக்கும் என் நன்றியை இச்சமயத்தில் தவருமல் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

முக்கியமாக, தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு நான் மிகவும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என் நாடகத்தைப் படித்துப்பார்த்து உங்கள் மேலான கருத்தைத் தெரிவிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டதும் கலைஞர் அவர்கள் தம்முடைய பல அவசர அரசாங்க அலுவல்களுக்கிடையே என் நூலை முற்றும் படித்து முடித்துச் சிறப்புரை எழுதியுதவியதை எம்மொழியால் பாராட்டுவேன்?

கலைஞரவர்களைப் போலவே என் நாடகத்தை ஊன்றிப் படித்து தங்களுடைய கருத்துக்களை வழங்கியுள்ள வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும் முத்தமிழ்க்கலை வித்தகர் தி.க. சண்முகம் அவர்களுக்கும் என் நன்றி உரியதாக.

அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார், கலைமாமணி கவிஞர் எஸ். டி. சுந்தரம் ஆகியவர்கள் என்னை

வாழ்த்தி வழங்கியுள்ள வாழ்த்துப் பாக்கள் என் வாழ்வை வளமாக்க உதவும் என நம்புகிறேன்.

காந்தீயச் செல்வரும், தொழில் மேதையுமான பொள்ளாச்சி தந்த புனிதர் நா. மகாலிங்கம் அவர்கள் தமது இராமலிங்கர் பணி மன்றம் வாயிலாக, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகச் சென்னை மாநகரிலும், பொருளாட்சி புரியும் கோவையிலும் திருவள்ளுவர், வள்ளலார், காந்தி ஆகியவர்களை நினைவு கூரும் வகையில் முப்பெரும் விழா ஒன்றை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார். அவருடைய இச்சீரிய தொண்டு என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது.

மாணவப் பருவத்திலிருந்தே என்னுடைய இலக்கியங்களை ஆர்வத்துடன் படித்துப் பாராட்டி வருவதோடு, தாம் கலந்து கொள்ளும் எழுத்தாளர் மாநாடுகள், இலக்கியக் கூட்டங்களில் மறவாமல் என் இலக்கியப் பணியை உளமாரப் பாராட்டி வரும் மேதகு நண்பர் நா. மகாலிங்கம் அவர்கள் எனக்குப் புரவலருமாயிருந்து வருகிறார். அத்தகைய நண்பர் சிறப்பாக நடத்தி வரும் ஒப்பற்ற முப்பெரும் விழாவைப் பாராட்டும் வகையில் நான் இந்நாடக நூலை அவருக்கு உரிமையாக்கி என் பேரன்பையும் பெருமதிப்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக என்னுடைய இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளித்து ஊக்குவித்து வரும் தமிழ் கூறும் நல்லுலகம் இந்நாடகத்தையும் ஏற்றுப் போற்றும் என நான் நம்புகிறேன்.

''ஜீவோதயம்''<br>சென்னை-24.

நாரண - துரைக்கண்ணன்<br>28-6-71.

# நாடக மாந்தர்கள்

| | |
|---|---|
| தெய்வப்புலவர் திருவள்ளுவர் | |
| வாசுகியம்மையார் | திருவள்ளுவர் மனைவி |
| ஏலேலசிங்கர் | ,, நண்பர் |
| ஆதி | ,, தாய் |
| பகவன் | ,, தந்தை |
| துள்ளுவன் | வளர்ப்புத் தந்தை |
| மரகதம்மாள் | வளர்ப்புத் தாய் |
| தொண்டைமான் இளந்திரையன் | தொண்டை நாட்டு மாமன்னன் |
| திருமூலர் | திருவள்ளுவரை ஆட்கொண்டவர் |
| ஔவைப் பிராட்டியார்<br>இடைக்காடர் | அரங்கேற்றத்துக்குத் துணைபுரிந்த புலவர்கள் |
| இறையனார்<br>நக்கீரர்<br>உருத்திரசன்மர் | சங்கப் புலவர்கள் |
| உக்கிரப்பெருவழுதி | பாண்டி நாட்டுப் பேரரசன் |
| கிள்ளுவன் | |
| பூதகி | கிள்ளுவன் மனைவி |

மற்றும் பலர்.

வரலாறு நிகழ்ந்த இடங்கள் :

திருமயிலை, காஞ்சி மாநகர், மதுரைத் தமிழ்ச் சங்கம்.

# இந்நூலாசிரியர் எழுதிய வேறு நூல்கள்

## நாடகம்

உயிரோவியம்
மாணிக்கவாசகர்
திருவருட்பிரகாச வள்ளலார்
சீவகநம்பி
அசலிகை காதல்
புலிக்குப் பிறந்தது...!
தீண்டாதவர் யார்?
குமரி முதல் காஷ்மீர் வரை
சதுரங்கம்
பந்த பாசம்

## நாவல்

உயிரோவியம்
இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?
யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?
காதலனா? காதகனா?
தாசி ரமணி
நடுத்தெரு நாராயணன்
சீமான் சுயநலம்
கோகிலா
தியாகத் தழும்பு
வேலைக்காரி
வேடதாரி
புதுமைப்பெண்
தும்பைப் பூ
தரங்கிணி

## சிறுகதைகள்

பார்வதி
அழகாம்பிகை
சபலம்
தேவகி
மேனகா
ஹம்ஸாநந்தி
ஜீவாவின் சிறுகதைகள் —1
ஜீவாவின் கதைகள் —2

# தெய்வப்புலவர்

# திருவள்ளுவர்

## களம்—1.

### காட்சி—1

காலம்: நண்பகல்
இடம்: திருவல்லிக்கேணி
உறுப்பினர்: ஆதி, பகவன்

(ஆதியும் பகவனும் திருவல்லிக்கேணி பக்கமாக நடந்து வருகின்றனர்.)

ஆதி: என்னால் இனி ஓரடிகூட எடுத்துவைக்க முடியாது; நாதா!

(இடுப்பைப் பிடித்துக் கொண்டு தள்ளாடி நிற்கிருள்.)

பக: இன்னும் கொஞ்சந் தூரந்தான், ஆதி! சில தப்படிகள் நடந்து தென்னந் தோப்பைக் கடந்து விட்டால், ஊர் தான். அதோ தெரிகிறது பார் கோபுரம். அதுதான் நாம் போய் தங்கப்போகிற கபாலீச்சுரம். சிறிது சிரமம் பாராமல் மெல்ல நடந்து வா.

ஆதி: பொழுது சாய்கிறபோது கூடப் பகலவன் இப்படிப் பொசுக்குகிருனே! தாகத்தால் நா வரள்கிறது, நாதா! கொஞ்சந் தண்ணீர் கிடைத்தால்......

(பகவன் கேணி நோக்கிப் போகிறார். ஆதி மாமரத்தின் கீழ் அமர்கிறாள்.)

ஆதி : (இடுப்பை இரு கரங்களால் பிடித்துக் கொண்டே மரத்தின் மீது மெல்லச் சாய்ந்தவாறு) அம்மா! (கண்ணை மூடுகிறாள்.)

(பகவன் கேணியிலிருந்து கமண்டலத்தில் தண்ணீர் முகந்து கொண்டு திரும்புகிறார்.)

பக : (கமண்டலத்தை நீட்டியவாறு) இந்தா ஆதி! தண்ணீர் குடித்துக் கொஞ்சங் களைப்பாறு.

(ஆதி ஆவலோடு கமண்டலத்திலிருந்த தண்ணீரைக் குடிக்கிறாள்.)

ஆதி : அப்பா! எவ்வளவு ஆறுதலாயிருக்கு?

(பகவன் பக்கத்திலமர்ந்து களைப்பாய் அயர்ந்திருக்கும் ஆதியின் முகத்தின் மீது விழுந்திருக்கும் கூந்தலைத் தன் வலக்கையால் ஒதுக்கிவிட்டு மேல் உத்தரீயத்தால் அவளுக்கு விசிறி அயர்ச்சியைப் போக்க முயல்கிறார்.)

பக : (மெல்ல) ஆதி! ஆதி!

ஆதி : (திடுக்கிட்டுக் கண் விழித்து) ஊம்.

பக : என்ன சிந்தனை? ஆதி!

ஆதி : வழியில் என்னைப் பார்த்தவர்கள் என்னென்ன வெல்லாம் பேசி ஏளனஞ் செய்தார்கள்; கேட்டீர்களா?

பக : உன்னை மட்டுமா? என்னையுந்தான் பழித்தார்கள், ஒழுக்கங் கெட்ட பிராம்மணனென்று.

ஆதி : இதற்கு என்ன செய்வது? நாதா!

பக : உலை வாயை மூடினாலும் மூடலாம். ஊர் வாயை எப்படி மூடுவது?

ஆதி : நம் தாம்பத்திய வாழ்வைத் தொடக்கத்திலிருந்தே இந்தச் சமூகம் பலவிதமாகப் பழித்துப் பேசி வருகிறது. சமூகக் கட்டுப்பாடு செய்யவும் முயன்று வருகிறது. இந்தக் கெடுபிடியில் சிக்காமல் தப்பிக்கத்தானே என்னவோ? நீங்களும் ஓரிடத்துந் தங்காமல் ஊர் ஊராகச் சுற்றுகிறீர்கள் என்னையுங் கூட்டிக்கொண்டு.

பக : (சிரித்து) நான் இந்தச் சமூகத்துக்குப் பயந்து ஓடிக்கொண்டிருக்கிறேன் என்கிறாய்! அப்படித்தானே! நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா?

ஆதி : எங்கு போனாலும் நாம் செய்த வினை தொடர்ந்து வரும் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது போல முன்பின் முகமறியாதவர்கள் கூட நம்மைக் கண்டதும் என்னவோ தவறாக நினைத்து ஏளனமாக இழித்துப் பேசுகிறார்களே? நாதா!

பக : நீ கருப்பாகவும் நான் வெளுப்பாகவும் இருப்பதனால் அவர்களுக்கு என்னவோ போல் தோன்றுகிறதாக்கும். (சிரிக்கிறார்.)

ஆதி : சிரித்துச் சிரித்துப் பேசிச் சிக்கலை மறைத்து விட்டால் நம் சங்கடம் நீங்கி விடும் என்பது உங்கள் எண்ணமா? நாதா! இந்தச் சிரிப்பும் இங்கிதப் பேச்சுந்தான் என்னை உங்கள் வசமாக்கி இப்படிச் சந்தி சிரிக்க வைத்திருக்கு. இது போதாதென்று இப்போது......ஏழாவது பேறு வேறு வாய்த்து என் வேதனையை அதிகமாக்கி வருகிறது.

பக : ஒன்பது மாதத்தைக் கழித்து விட்டாய் சுமந்து. இன்னுஞ் சிலநாள்தான். இதற்குப் போய்...... கொஞ்சம் பொறுத்துக்கொள்; ஆதி!

ஆதி : நிறை வயிறுடன் என்னைப் பார்ப்பவர்கள் பேசும் பரிகாசப்பேச்சு என்னை வாள் கொண்டு அறுக்கிறது. நாதா! உயிரை மாய்த்துக் கொள்ளலாமா என்றுகூட ஓரொரு சமயம் உணர்ச்சி மேலோங்குகிறது. வயிற்றில் வளருங் குழவியை நினைத்ததும்..................

பக: ஆதி! நீ இப்படி யெல்லாம் பேசப்படாது. (வாயைப் பொத்துகிறார்.)

(இச்சமயம் யாரோ சிலர் அப்பக்கம் வருகின்றனர். அவர்களுடைய காலடியோசை கேட்டதும் விதிர்ப்புற்ற ஆதிபகவனிடமிருந்து விலகி உட்காருகிறாள். வழிப்போக்கர்கள் ஏளனமாக நகைக்கின்றனர்.)

மக் 1: இந்தக் கண்ணராவியைப் பாரையா? பட்டப் பகலிலேயே ஜோடி கொஞ்சுது.

மக் 2: நாலு பேர் நடமாடுகிற இடத்தில் வெட்கமில்லாமல் இதுகள்.........தூ!

மக் 3: ஜாதி கெட்ட ஜன்மங்களுக்கு எப்படி ஈன மானம் இருக்கும்?

மக் 4: சின்னஞ்சிறுசுகள் என்றாலுங்கூட போனால் போகுது என்கலாம் பருவக்கோளாறு என்று எண்ணி. நடுவயதை நெருங்கி நிற்கிற இதுகளுக்கு இன்னும் என்ன சல்லாபம் வேண்டியிருக்கு?

மக் 2: மீசை நரைச்சாலும் ஆசை நரைக்கல்லே முனிபுங்கவருக்கு.

மக் 3: அவரு என்ன செய்வாரு? பொம்பிளேக்கல்ல இருக்கணும் புத்தி.

மக் 1: சாதிக்கேற்ற புத்தி; குலத்திற்கேற்ற ஆசாரம் என்பாங்க. பள்ளு பறைகளெல்லாம் கொழுத்துத் திரியுதுங்க.

மக் 3: காமத்துக்கு கண் இல்லேபோல.

மக் 1: என்ன இருந்தாலும் இந்தப் பிராம்மணனுக்கு இப்படிப் புத்தி போகக்கூடாது.

மக் 2: இந்த வயசிலேகூட அவள் பிள்ளைத்தாய்ச்சியாய்த் தானிருக்கிறாப் போலிருக்கு.

மக் 3: ரிஷி பிண்டமில்லே?

மக் 1: உலகம் ரொம்பக் கெட்டுப்போச்சு; ஐயா!

மக் 2: கலிகாலம் இல்லையா?

(வாய்க்கு வந்தவாறு பேசிக் கொண்டே போகிருர்கள். இதுகேட்டு ஆதி குமுறிக் குமுறி அழுகிருள். பகவன் என்ன சொல்வ தென்று தெரியாமல் திகைத்திருக்கிருர்.)

ஆதி: கேட்டீர்களா? இப்பவாயினும் காதில் விழுந்ததா ஊரார் பேசும் பேச்சு.

பக: ஊர் வம்பு பேசும் உலுத்தர்களை யெல்லாமா ஊரார் என்கிருய்?

ஆதி: எல்லாஞ் சேர்ந்துதானே ஊர் எனப்படுகிறது.

பக: நாம் ஒழுங்காக வாழ்க்கை நடத்தி வரும் வரை யாருக்காகவும் அஞ்ச வேண்டியதில்லை. ஆதி!

ஆதி: உங்களுக்கு இருப்பதுபோல் எனக்குத் தைரியமில்லையே! நாதா!

பக: நம்மைப்பற்றி இந்த மனிதர்களுக்கு என்ன தெரியும்? வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏதோ உளறிவிட்டுப் போகிருர்கள். ஆண் பெண் ஓரிடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது குற்றமா? ஒழுங்கீனமா? சகோதர சகோதரிகள்—ஏன்? தாய் தநயர்கள் தனியாகப் பேசிக் கொண்டிருந்தால் கூடச் சந்தேகிக்கிற சமூகந் தானே இது!

ஆதி: நீங்கள் எப்படியோ சமாதானந் தேடி மனந் தேறிவிடுகிறீர்கள். என்ருல் முடியவில்லையே!

பக: பொதுவாக மற்ற மக்களிலிருந்து நாம் எல்லாவற்றிலும் வேறுபட்டிருக்கிரேம். நம்முடைய பெயர்கள் அவர்கள் கேள்விப்படாதது. நிறமோ ஒன்றுக் கொன்று ஒத்த

தாயில்லை. நடையுடை பாவனைகளோ சொல்ல வேண்டி யதில்லை. நம் விஷயமெல்லாமே பிறருக்குப் புதிராகவும் விசித்திரமாகவும் இருக்கு.

ஆதி : நானுயினும் ஊரோடு ஒட்டிப் பழகத் தெரிந்து கொண் டிருக்கணும். நீங்கள் என்னை ஓரிடத்தில் சில நாட்களா யினும் நிலையாக விருந்து வாழவிட்டால்தானே!

பக : சதா பேத புத்தியோடு பழகும் இந்தச் சமுதாயத்தின் சங்காத்தமே நமக்கு வேண்டாம்; ஆதி!

ஆதி : வேற்றுமையையே வளர்த்துக் கொண்டிருக்கும் இந்த விபரீத சமூகத்தில்தானே நாமும் தோன்றினோம்? அதை அறவே விட்டு விட்டு நாம் எப்படி வாழ முடியும்? நாதா!

பக: பகவன் என்ற பேர் பிராம்மணர்களுக்குக் கிடையாது என்று பலருக்குத் தெரிய வில்லையே! திரிதண்டந் தாங்கித் திரியும் துறவிகளாகிய அந்தணர்களைப் பகவர் என்று அழைப்பது பண்டை வழக்கு. அந்த அந்தண மரபில் வந்தவனுன எனக்குக் குடிப்பெயரே எப்படியோ இயற் பெயராகி வழங்கி வருகிறது. இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாதவர்கள் தான் நீயும் ஒரு நற்குடியில் பிறந்த செல்வ மகள் என்பதை அறியாமல் வாய்க்கு வந்த வாறு வம்பளக்கிறுர்கள்.

ஆதி: இதையெல்லாம் ஒவ்வொருவரிடமும் போய்ச் சொல் லிக் கொண்டிருக்க முடியுமா? நாதா!

பக: அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? ஆதி!

ஆதி: நாம் நம் குடும்பத்தாருடனேயே சேர்ந்திருந்து நெறி யான இல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தோமானுல், ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கு இடமிருந்திருக்காது. இன்ப மாகவும் வாழ்ந்திருக்கலாம். சொன்னுல் கேட்டால் தானே நீங்கள்?

பக: இதற்காக என்னைக் குடும்பச் சூழலில் சிக்கிக் கொள்ளச் சொல்கிருயா? ஆதி! இந்தப் பந்த பாசமெல்லாம் கூடா தென்று தானே நான் பரதேசியாகப் பறந்து கொண்டிருக் கிறேன். உன்னைக் கூடமுதலிலேயே எதற்காகக் கேட்டுக் கொண்டேன், உற்ருர் பெற்ருேர் என்ற நினைவு இருக்கக் கூடாது என்று. பெறும் பிள்ளைகளைக் கூட அவ்வவ்விடத் திலேயே விட்டு விட்டு வந்து விட வேண்டும் என்று வாக் குறுதி வாங்கிக்கொண்டதையெல்லாம் மறந்து விட்டாயா?

ஆதி: உங்கள் ஒருவருக்கு ஆசாபாசம் இல்லாதிருந்தால் போதுமா? நீங்கள் எல்லோரையும் சமமாகப் பாவித்துச் சன்மார்க்கத் தொண்டும் புரிந்து வந்தால் போதுமா? மக்களெல்லோருக்குமே பிள்ளைப்பாசம், பிறந்த ஊர்ப்பற்று சாதியபிமானம், சமயப்பற்று முதலியன இருக்காமல் செய்ய வேண்டும். முக்கியமாக ஒரே தன்மைத்தான மக் களிடையே உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையுணர்ச்சி யுண்டாகாமல் செய்ய வேண்டும். இனி, இச்சமரச முயற் சியில் கவனஞ் செலுத்துங்கள். நாதா! நம்மைப் போல பின்னுல் வரும் சந்ததிகளாயினும் சாதி சமயப் பித்திஞல் துன்புருமல் வாழட்டும்.

பக: அந்தப் பெரும் பணியை நம் பிள்ளைகள் செய்வார்கள். ஒளவையாரும், கபிலரும் சிறு வயதிலேயே தங்கள் பாடல்களால் மக்களுக்கு அறிவுரை கூறத் தொடங்கி விட் டார்கள். அடுத்துப் பிறக்க இருக்கிருனே அருமைக் குமா ரன், அவன் மக்களிடையே சமரசத்தைப் போதித்துச் சமத்துவத்தை யுண்டாக்கப் போகிருன். உலகிலேயே ஓர் ஒப்பில்லாத சமுதாயத்தை யுண்டாக்கப் பொது நீதி போதனைகளைக் காலத்துக்கேற்றபடி புதிய முறையில் போ திக்கப் போகிருன். நான் சொல்லுகிறேன். நீ வேண்டு மானுல் பாரேன். ஆதி! நம்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், உலக சமுதாயம் முழுவதுமே அவன் கூறப் போகும் பொது அறத்தை உவந்து ஏற்றுக் கொள்ளப் போகிறது.

அவனை ஈன்று புறந் தந்து பெரும் புகழடையப் போகும் நீ உன் மைந்தனின் பெருமையைச் செவி குளிரக் கேட்டு மகிழத்தான் போகிறாய்.

ஆதி: உறுதியாகச் சொல்கிறீர்களே! ஆண் மகன் பிறக்கப் போகிறான் என்று. முக்காலமும் உணர்ந்த உங்களுடைய வாக்கு ஒரு போதும் பொய்த்ததில்லை. உங்களுடைய இன் மொழி என் மனதுக்கு எவ்வளவோ ஆறுதலாயிருக்கிறது, நாதா! ஆனால், அது நிலைத்து நீடித்திருக்க வேண்டும் என்று என் உள்ளம் அவாவுறுகிறது.

பக: அப்படியே ஆகும். அமைதியாயிரு, ஆதி!

(பகவன் வானத்தைப் பார்த்து விட்டு ஆதி பக்கந் திரும்புகிறார்.)

பக: நாம் புறப்படலாமா? ஆதி! வெயில் கொஞ்சங் குறைந்திருக்கு. பொழுது சாய்வதற்குள் நாம் மயிலாப்பூர் போய்ச் சேர்ந்து விடவேண்டும்.

ஆதி: (எழுந்து) போகலாம். வாருங்கள், நாதா!

(இருவரும் போகின்றனர்.)

## காட்சி-2

காலம் : காலை

இடம் : திருமயிலை

உறுப்பினர் : ஆதி, பகவன்

(ஒரு மர நிழலில் பச்சிளங்குழவி யொன்று தன் பொக்கை வாயைக் காட்டியவாறு கை கால்களை உதைத்துக் கொண்டிருக்கிறது. ஆதி குழந்தையை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள். பகவன் சீக்கிரம் புறப்படுமாறு அவளை அவசரப்படுத்துகிறார்.)

ஆதி: இந்தப் பச்சிளங்குழவியை இப்படியே கிடத்தி விட்டு எப்படிப் பிரிந்து வருவேன்? நாதா! நெஞ்சில் சிறிதும் இரக்கமின்றிச் சொல்கிறீர்களே !

பக: எவ்வளவோ படித்துப் படித்துச் சொல்லியும் உனக்குப் பேதமை போக மாட்டேன் என்கிறதே! ஆதி!

ஆதி: உங்க மனம் என்ன கல்லா? இரும்பா?

பக: (வருத்தத்தோடு புன்னகை செய்கிறார்.)

ஆதி: ஆண்கள் மனமே இப்படித்தான் இருக்கும் போலிருக் கிறது. பிறந்து இன்னும் மூன்று நான்கு நாட்கள் கூட ஆக வில்லை. அதற்குள் பச்சிளங்குழந்தையை பதறப்பதற அழ விட்டு விட்டு வரச் சொல்லுகிறீர்களே! இப்படிச் சொல்ல உங்களுக்கு மனம் எப்படித்தான் துணிகிறதோ?

பக: அதிக நாள் ஆகக் கூடாதென்று தானே நான் அவசரப் படுகிறேன். குழந்தைக்குப் பெற்ற தாய் முகம் பழகி விட்டால் மடியை விட்டு இறங்காது. உனக்கும் பிள்ளைப் பாசம் அதிகமாகி விடும்.

ஆதி: பாம்பு தான் தன் குஞ்சை விழுங்கும் எனக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதுபோல, நான் பெற்ற குழவியை நிராதரவாகச் சாக விட்டு வரச்சொல்கிறீர்களே! ஐயோ!
(மேலே பேச முடியாமல் குமுறுகிறாள்.)

பக: பந்த பாசத்தை விட நமக்குக் கடமை முக்கியம் என்று உனக்கு எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன். அப் படியிருந்தும்........?

ஆதி: நல்ல கடமை. கடமையாம் கடமை. பெற்ற பிள்ளையை அநாதையாய் விட்டுவிட்டுப் போவது தான் கடமையோ?

பக: என்னுடைய குழந்தை, என்னுடைய குடும்பம் என்று என் போன்றோருக்கு குறுகிய அளவில் ஆசாபாசம் இருந்து விடக்கூடாது. ஆதி! அகில முழுதும் உள்ள சகல ஜீவராசி கள் பாலும் அன்பும் ஆதரவும் காட்டித்தொண்டுபுரிவதுதான் முனிவர்களாய்ப் பிறந்தவர்கள் ஒவ்வொருவருடைய கட மையுமாகும் என்று எத்தனையோ முறை உனக்குப் பல

உதாரணங்களுடன் விளக்கிக் கூறியிருக்கிறேன். அதற்காகவே ஓர் ஊரிலும் தங்காமல் நாடோடி போல உன்னை கண்ட கண்ட இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறேன்.

ஆதி: (வெறுப்புடன்) போதும். உங்கள் உபதேசமும், பரதேசி வாழ்க்கையும்.

பக: ஆதி! நீயா இப்படிப் பேசுகிருய்? உலகில் உள்ள சாதாரணப் பெண்கள் போல நீயுமா இப்படிச் சலித்துக் கொள்வது?

ஆதி: பெண்களில் சாதாரணமென்ன? விசேஷமென்ன? பிள்ளைப் பாசம் இல்லாதவளும் ஒரு பெண்ணே? பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை உடனே விட்டு விட்டு வந்து விடு என்ருல் எந்த தாயுள்ளம் தான் பதருமல் இருக்கும்? நீங்கள் என்ன தான் உன்னத தத்துவத்தை உபதேசித்தாலும் என் உள்ளம் ஏற்றுக் கொள்ளாது. நாதா!

பக: என்ன இப்படிப் பிடிவாதம் பிடிக்கிருய்? ஆதி! இது உனக்குப் புதிய அனுபவமில்லையே! ஒவ்வொரு குழந்தையையும் பெற்றுப் பிரிந்த போதெல்லாம் நீ இப்படித்தான் போராடுருய் என்பது என் நினைவிலில்லாமல் இல்லை. நாம் முதல் முதலாகச் சந்தித்து நேசம் கொண்ட சமயத்தில் நான் உன்னிடம் வாங்கிக் கொண்ட வாக்குறுதியை நினைவு படுத்திருல், இதுவரை நீ உடனே குழந்தையை விட்டு விட்டு என்னுடன் புறப்பட்டு விடுவாய். அப்போர்ப் பட்ட நீ இந்தத் தடவை மட்டும் இப்படி மன்ருடுகிருயே!

ஆதி: கொஞ்ச நேரம் குழந்தையின் முகத்தைப் பாருங்கள்; நாதா! அப்போதாயினும்........

பக: (புன்னகை செய்து) நான் குழந்தையை நன்ருகப்பார்க்கவில்லை என்று நினைக்கிருயா? ஆதி! கோடி சூரிய பிரகாசத்துடன் கூடிய நம் அன்பின் சின்னமான அது என் கண்ணையும் கருத்தையும்கூட ஒருங்கே கவர்ந்து தான் விட்டது.

ஆதி: அப்படியிருந்துமா......?

பக : இந்தக் குழந்தை உலகம் உய்ய அவதாரம் செய்திருக்கிறது. மக்கள் குலத்துக்கே பொது அறத்தைப் போதிக்க வந்திருக்கிறது. நீ அடிக்கடி சொல்வாயே! பறையன், பார்ப்பான், கீழ் சாதி, மேல் சாதி, ஏழை, பணக்காரன், பஞ்சை, பஞாதி என்றெல்லாம் பாமர மக்கள் பேதம் பாராட்டி ஒருவரை யொருவர் பகைத்துக் கொள்கிறார்களே! சண்டை சச்சரவு செய்து கொள்ளுகிறார்களே! என்று. அந்த வம்பையெல்லாம் போக்க உன் பிள்ளை அவதரித்திருக்கிறான். எல்லா உயிருக்கும் பிறப்பு ஒன்றுதான்; ஒரே தன்மைத்தானது தான்; ஆண்டவன் படைப்பில் யாவரும் சரிசமம்; எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்ற சமரசக் கொள்கையை இதற்கு முன்வந்த பெரிய மகான்களை விட, இவன் நன்கு போதிக்கப் போகிறான். அறிவொளி வீசும் இவன் முகம் இவ்வுண்மை அனைத்தையும் எனக்குச் சொல்லாமல் சொல்கிறது. நான் சொல்வது உண்மையா, இல்லையா என்று நீ பார்க்கத்தானே போகிறாய்?

ஆதி : என்னவோ வேதாந்தம் பேசி என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். இந்த முறை நான் உங்கள் பேச்சைக் கேட்க மாட்டேன். இந்தப் பிள்ளையை விட்டு வரவும் மாட்டேன். ஆமாம்......

பக: ஐயோ! ஆதி! ஏன் இந்தக் கடலை இப்படி அடம் பிடிக்கிறாய் நீ? (கைகளை உதறி) உன்னை எப்படி இன்னும் தெளிவு படுத்துவது என்று தெரியவில்லையே! நீ குழந்தையை விட்டு வரப் பிரியப்படவில்லையென்றால், அதனுடனேயே இரு. நான் போகிறேன்.

(ஆற்றாமையோடு அடியெடுத்து வைத்து நடக்கிறார்.)

ஆதி : (முகத்தில் பயம் தோன்ற) ஐயோ! நாதா!

(இச்சமயம் குழந்தை பெற்றோர் பக்கம் புரண்டு திரும்பிப் பார்க்கிறது. அடுத்து அதன் வாயில் இருந்து பாடல் பிறக்கிறது.)

குழந்தை : (பாடுகிறது)

எவ்வுயிரும் காப்பதற்குஓர் ஈசன் உண்டோ, இல்லையோ?
அவ்வுயிரில் யான்ஒருவன் அல்லனோ?—வவ்வி
அருகுவது கொண்டுஇங்கு அலைகுவதேன்? அன்னாய்!
வருகுவது தானே வரும்.

(ஆதி இது கேட்டு ஆச்சரியப்படுகிறாள்.)

பக : (மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து) கேட்டாயா ஆதி! குழந்தை பாடியதை. அதன் பொருளை நீ தெரிந்து கொண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன். இதற்கு முன் பிறந்த ஆறு குழந்தைகள் அறிவுறுத்தியும் அறியாமை நீங்காது அலமந்து கொண்டிருந்த உனக்கு இந்த ஏழாவது குழந்தையின் இதோபதேசமாயினும் உன் பேதைமையை அடியோடு போக்கிவிடும் என்று நம்புகிறேன்.

ஆதி : (கண்களில் நீர் வழிய) மன்னித்து விடுங்கள், நாதா! என்னைப் பிடித்திருந்த மாயையும் மயக்கமும் அடியோடு நீங்கிவிட்டது. ஊம்; புறப்படுவோம். வாருங்கள்.

(பகவன் முன்னே செல்ல, ஆதி அவரைப் பின் தொடருகிறாள். ஓர் அடியெடுத்து வைத்தவள், திரும்பிக் குழந்தையைத் தாவியெடுத்து உச்சி மோந்து முத்தமிடுகிறாள்.)

ஆதி : கண்ணே! போய் வருகிறேனடா! எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் நீ பாடியதுபோல், உன்னைக் கைவிடாமல் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

## காட்சி—3

காலம் : பிற்பகல்

இடம் : திருமயிலை

உறுப்பினர் : வேளாளன் துள்ளுவன், அவன் மனைவி, குழந்தை

(மாந்தோப்பில் குழந்தை அழுது கொண்டிருக்கிறது. தோப்புக்குள் வந்த வேளாளன் ஒருவன் குழந்தையைப் பார்க்கிறான்.)

**குழந்தை :** குவா! குவா! (தொடர்ந்து அழுகையொலி)

(வேளாளன் குழந்தை அருகே சென்று அதைப் பரிவோடு தூக்குகிறான். அவன் கண்கள் குழந்தையின் அழகைக் கண்டு வியப்புக் கொள்கின்றன. பின் அவன் குழந்தையைச் சேர்ந்தவர்கள் யாரேனும் இருக்கின்றார்களா வெனச் சுற்றுமுற்றும் பார்க்கிறான். அழும் குழந்தையை மார் போடு அணைத்து அமைதிப் படுத்திக் கொண்டே சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருக்கிறான். குழந்தையை நாடி யாரும் வராததைக் கண்டு அதைத் தூக்கிக் கொண்டு தன் வீடு திரும்புகிறான்.)

**வேளாளன் :** கோதை! எங்கே இருக்கே?

**கோதை :** (அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்தவாறு) என்னங்க! வருகிற போதே இவ்வளவு ஆர்ப்பாட்டம்? என்ன சேதி?

**வே :** நான் உனக்குப் பரிசு கொடுக்க ஒன்னு கொண்டு வந்திருக்கேன். வெளியே வந்துதான் பாரேன்.

**கோ :** (ஆவலுடன் வந்தவாறு) என்ன கொண்டு வந்திருக்கிறீங்க?

**வே :** (மேல் துணியால் மூடி மார்போடு அணைத்துக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கி அவள் முன் காட்டியவாறு) இதோ பார்த்தியா! ஆண்டவனின் அருள்பிரசாதம்.

கோ : இதேதுங்க குழந்தை! யாருது? உங்க கையிலே...

வே : அதுதான் சொன்னேனே ஆண்டவன் அளித்ததுன்னு. நம்ப பிள்ளைக் கலியைத் தீர்க்க வந்த பேராளன் இவன்.

கோ : ஆண் குழந்தைங்களா இது? எங்கே கிடைச்சது? யார் கொடுத்தது?

வே : மாந்தோப்புப் பக்கம் போனேனு? நம் கழனியைப் பார்க்க. ஒரு இலுப்ப மரத்தடியிலே இந்தக் குழந்தை அழுதுகிட்டு இருந்தது. அதைச் சேர்ந்தவங்க யாரையும் காணோம். ரொம்ப காலமா நமக்குப் பிள்ளைப் பேறே இல்லியேன்னு ஏங்கிக்கிட்டிருக்கோம் இல்லையா? கடவுளாகப் பார்த்துக் கொடுத்திருக்காருன்னு எண்ணித்தான் நான் இதை எடுத்து வந்தேன்.

கோ : அப்பிடியா? நாம நோற்று வந்த நோன்பு வீண் போகல்லைன்னு சொல்லுங்க. (ஆவலாக) எங்கே? குழந்தையை இப்பிடிக் கொடுங்க. (கை நீட்டி ஆர்வத்துடன் வாங்கிக் கொள்கிருள்.) ஆ! இது கொள்ளை அழகோடு அல்ல இருக்கு.

(குழந்தை அழுகிறது.)

வே : சரி! சரி! குழந்தைக்குப் பசி போலிருக்கு. முதலில் பால் கொடு இதுக்கு.

கோ : குழந்தையைத் தூக்கினதுமே எனக்குப் பால் சுரந்துட்டுதுங்க. நான் கொடுத்துப் பசியாற்றுகிறேன். உங்க அலுவலைக் கவனியுங்க. போங்க.

(குழந்தையை எடுத்துக் கொண்டு உள்ளே போகிருள். வேளாளன் வெளியே செல்கிருன்.)

## காட்சி—4

காலம் : மாலை

இடம் : திருமயிலை

உறுப்பினர் : அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள்

(நாலைந்து பெண்களும் இரண்டு மூன்று கிழவர்களும் வேளாளன் வீட்டைப் பார்த்த வாறு பரிகாசமாகப் பேசிக் கொண்டிருக்கின் றனர்.)

கற்பகம் : வேதம்! உனக்குச் சேதி தெரியுமா?

வேதம் : என்ன! என்ன! அது?

மங்கை : கோதை குழந்தை பெற்றிருக்காளே! தெரியாதா உனக்கு.

வேதம் : என்னடி விளையாடுறீங்க. கோதைக்காவது குழந்தை யாவது?

கற் : இல்லை, மாமி! கோதை யாரோ பெற்றுப்போட்டு எங்கோ கிடந்த ஒரு அநாதைப் பிள்ளையைத் தூக்கி வச்சிகிட்டு சதா கொஞ்சிக்கிட்டிருக்காளே! அதைச் சொல்கிறுள்.

வே : அப்பிடியா! சங்கதி! அது எனக்குத் தெரியாதே!

கிழவர் ஒருவர் : காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு, அம்மா! அவரவர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலமின்னு தங்கள் மனம் போனபடி நடக்கிறுங்க. அதுக்கெல்லாம் நாம இடம் கொடுத்துக்கிட்டிருக்கோம்.

இன்னொரு கிழவர் : நம்ம சமூகக் கட்டுக் கோப்புதான் குலைஞ்சுப் போச்சே! அதனுல் தான் எல்லாருக்கும் எது வேண்டுமானுலும் செய்யலாமின்னு தைரியம் உண்டா யிட்டது.

**வே :** இந்தக் குழந்தை எந்த இழிந்த சாதிப் பெண் பெற்றுப் போட்டதோ! அறுதலி எவளாச்சும் இரகசியமாய் எறிந்து விட்டுப் போனாளோ! ஒழுங்கான குடும்பத்தில் ஒழுங்கான பெற்றோருக்குப் பிறந்திருந்தால் இது அநாதையாய் தோப்பில் கிடந்திருக்காதே.

**கற் :** இப்பிடி ஊர் பேர் தெரியாத குழந்தையை எடுத்து வந்து துள்ளுவ முதலியார் குடும்பம் எப்பிடி வளர்க்கலாம்?

**மங் :** ஆமாம். எப்படி வளர்க்கலாம்? தட்டிக் கேட்க ஆள் இல்லேன்னு இவங்க எண்ணம் போலிருக்கு.

**வே :** (கிழவர்களைப் பார்த்து) பெரியவங்க நீங்க எல்லாம் எதுக்கு இருக்கிறீங்க?

**ஒரு கிழவர் :** நாங்க என்ன செய்வம்? நாங்க சொல்வதை இந்தக் காலத்துப் பிள்ளைங்க எங்கே கேட்கிறாங்க?

**மங் :** ஏன்? ஊர்ப் பஞ்சாயத்து சபை எதுக்கு இருக்கு? அதைக் கூட்டி விசாரணை நடத்திக் கட்டுப்பாடு விதிக்கணும்.

**கற் :** ஆமாம். சமூகக் கட்டுப்பாடு; சாதிப் பிரஷ்டமின்னு நம்ம மூதாதைங்க செய்தது போல தாட்சணியம் பாராமல் நடவடிக்கை யெடுத்தால் எல்லாம் ஒழுங்காய் விடும்.

**வே :** தாத்தா! நாளைக்கே நாட்டாண்மைக்காரரிடம் சொல்லி துள்ளுவ முதலிக் குடும்பத்தின் மீது நடவடிக்கை யெடுக்கச் சொல்லுங்க.

(இச்சமயம் வேளாளன் துள்ளுவன் அவ் வழியாக வருகிறான். அவன் வருகையைப் பார்த்ததும் கூட்டம் போட்டுப் பேசிக் கொண்டிருந்த இவர்கள் மெல்ல கலைந்து செல்கின்றனர்.)

## காட்சி-5

காலம் : காலை

இடம் : வேளாளன் வீடு

உறுப்பினர் : துள்ளுவன், கோதை

(துள்ளுவன் வருத்தத்துடன் வீட்டுக்குள் வருகிறான். எதிர் கொண்டு அழைக்க வந்த கோதை அவன் முக வாட்டத்தைக் கண்டு திடுக்கிடுகிறாள்.)

கோ: என்னங்க! ஒரு மாதிரியா இருக்கீங்க! என்ன சமாசாரம்?

துள் : என்னத்தைச் சொல்வேன்? கோதை! பஞ்சாயத்து நம் மீது பாணம் தொடுத்திருக்குது. நாம் அநாதைப் பிள்ளை எதையோ எடுத்து வந்து வளர்த்து ஆட்டம் போடுகிறோமாம். இதனால் சமூக கௌரவமே கெட்டுப் போயிட்டதாம்.

கோ : அப்பிடி யார் சொன்னது? நாட்டாண்மைக்காரரையாவா?

துள் : அவரு என்ன செய்வார்? ஊரு வம்பை விலைக்கு வாங்கி விளையாடுகிற வீணர்களுடைய விதண்டா வாதம் இது.

கோ : அப்பிடியா? அவங்க என்ன தான் சொல்றாங்க ?

துள் : அநாதைக் குழந்தையை நம் வீட்டில் வைத்து வளர்க்கக் கூடாதாம். நம் ஜாதிக்காரங்க, சொந்தக்காரங்களுக்கெல்லாம் இது தலை குனிவை ஏற்படுத்தியிருக்கிறதாம். இந்த ஊராருக்கே இது கேவலமாகப் படுகிறதாம்.

கோ : அதுக்காக நாம் என்ன செய்யணுமாம்?

துள் : குழந்தையை எடுத்துக்கிட்டு போய் ஊருக்கு வெளியிலே விட்டுடணுமாம்.

கோ : என்ன! என் கண்மணியையா?

துள் : ஆமாம்.

கோ : ஐயோ, கடவுளே! கண்ணைக் கொடுத்துட்டு மறுபடி யும் பிடுங்கிக்கிறுயே? இது நியாயமா? (கதறுகிருள்.)

துள் : நான் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டேன். அவங்க மனம் இரங்கல்லே.

கோ : அப்புறம்?

துள் : நான் ரொம்ப மன்ருடிக் கேட்டுக்கிட்டதன் பேரில் குழந்தையை நம்ம வீட்டுப் புறக்கடையில் மாட்டுத் தொழுவத்தில் வச்சி வேணுமின்னு வளர்க்கலாமின்னு அனுமதித்தாங்க.

கோ : நம்ம ராஜாவை ஆடு மாடுகளை அடைத்து வைக்கும் தொழுவத்திலா கிடத்தணும்?

துள் : வேறு என்ன செய்வது? இதுக்காவது அனுமதித்தார் களே. அவங்க மனம் மாறும் வரை தொழுவத்தில் தொட்டில் கட்டிப்போட்டு குழந்தையைப் பாதுகாத்து வருவோம்.

(கோதை குழந்தையை முகத்தோடு சேர்த்து வைத்துக் கொண்டு குமுறுகிருள். துள்ளுவன் இத்துயரக் காட்சியைக் காணப் பொருமல் வெளியே போகிருன்.)

## காட்சி-6

காலம் : காலை

இடம் : குருகுலம்

உறுப்பினர் : வள்ளுவன், உடன் படிக்கும் பிள்ளைகள்

(சிறுவன் வள்ளுவன் கையில் ஏடுகளுடன் குருகுலத்தை நோக்கி வருகிருன். மாண வர் சிலர் அவனைப் பார்த்துப் பரிகாசஞ் செய்கின்றனர்.)

மாணவன் 1 : பிரகஸ்பதி வருகிருருடோய்!

மா 2: யாரு? வள்ளுவப்பயல் வருகிருனே. அவனைச் சொல்கிரு யா? நான் கூட கவனித்திருக்கேன். ஆனாலும் அவனுக்கு அகம்பாவம் அதிகந்தான்.

மா ; 3 : ஆமாம். அவனுக்கு தான் ஒரு மேதாவி என்று நினைப்பு; தெரியுமோ! தாய் தகப்பன் யாரென்று தெரி யாத தறுதலைக்குத் தலைக்கனம் வேறேயா?

மா : 1 : ஜாதி கெட்ட பயலை சமயம் பார்த்து சவுக்கடி கொடுக் கனும். அப்போதுதான் அவன் கொட்டம் அடங்கும்.

மா : 2 : ஐயா நம்மோடெல்லாம் பேசுவது இல்லை. விளையாட் டில் கலந்து கொள்வதும் இல்லை. நம்மோடு பழகுவது கௌரவக்குறைவு என்று எண்ணுகிருற் போலிருக்கு.

மா : 3 : அட! நீ ஒன்னு! அவனுக்கே நம்மோடு பழகுவதற்கு அச்சம்; எங்கே நாம் அவனை நம்முடன் சேர்த்துக்கொள்ள மாட்டோமோ என்ற ஐயம். தாழ்வு மனப்பான்மை. அத ஞல் தான் நம்மைக் கண்டால் ஒதுங்கி ஒதுங்கிப் போகி ருன். இது தெரியாமல் நீங்கள்......?

(இச்சமயத்தில் வள்ளுவன் அவர்கள் அருகே வந்து விடுகிருன். உடனே மாண வர்கள் பேச்சை நிறுத்தி விடுகின்றனர்.)

வள் : (மாணவர்களை நோக்கி) என்ன வான்மீகி! ஏதோ பேசிக் கொண்டிருந்தீர்கள்? என்னைப்பார்த்ததும் நிறுத்தி விட்டீர் களே?

மா : 1 : நீ என்ன இவனே? உன்னைப் பார்த்ததும் பேசுவதை நிறுத்தி விடுவதற்கு.

மா : 2 : வள்ளுவப் பயலுடைய திமிரான பேச்சைப் பார்த் தியர்டா?

மா : 3 : ஜாதிக்கேற்ற புத்தி தானே இருக்கும்.

வன் : என்ன, ஆளுக்கொன்ருக ஏதேதோ பேசுகிறீர்களே! நான் சகஜமாக ஏதோ கேட்டால்......?

மா : 1 : போடா. நீ என்ன கேட்பது? நாங்கள் என்ன சொல்வது? தாய் தகப்பன் இன்னுரென்று தெரியாத தத்தாரிப் பயலே!

மா : 3 : இந்த மாதிரி அநாதைப் பயலையெல்லாம் நம்முடைய ஆசான் எப்படிச் சேர்த்துக்கொண்டு படிப்புச் சொல்லித் தருகிருர்?

மா : 2 : நம்மைப்போல உயர்ந்த ஜாதிப் பிள்ளைகளோடு இன்ன ஜாதியென்றே தெரியாத இழி ஜாதிப் பயலையும் ஒன்ருக வைத்துக் கொண்டு கல்வி போதிக்கிருரே! அந்த மகானுபாவரைத்தான் கேட்க வேண்டும்.

வன் : நான் இன்ன ஜாதி, என்னுடைய தாய் தகப்பனுர் இன்னுர் என்று தானே சொல்ல வெண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

மா : ஆமாம். ஆமாம். தைரியமிருந்தால் சொல்லேன். நீ என்ன ஜாதி? உன்னைப் பெற்ற தாய் தகப்பனுர் யார்?

வன் : நீங்கள் நினைக்கிறபடி நான் என்ன ஜாதி, என் பெற்ருேர் யார் என்பது எனக்குத் தெரியாதுதான். ஆனுல், எனக்கொன்று நிச்சயமாகத் தெரியும்.

மா : 2 : அது என்ன? சொல்லு, சொல்லு!

வன் : நான் மனுஷ ஜாதியைச் சேர்ந்தவன். எனக்கு அடிமை உட்பட்டிருப்பவன் இந்த அண்ட சராசரங்களையெல்லாம் படைத்துப் பாதுகாத்து வரும் ஆண்டவன். என்னை அன்பாக வளர்த்து வரும் ஆதரவாளர்களை உங்களுக்குத் தெரியும்.

(மாணவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் 'கொல்' என்று ஏளனமாக நகைத்துக் கை கொட்டி ஆடுகின்றனர்.)

வள் : நான் சொல்வது உங்களுக்கு விந்தையாக இருக்கிறதல்லவா?

மா : 3 : வேடிக்கையாக இல்லாமல்......?

வள் : நான் உங்களை ஒன்று கேட்கிறேன், சொல்வீர்களா?

மா : 2 : கேள், சொல்லுகிறோம்.

வள் : உங்களுடைய ஜாதியைப்பற்றியும் உங்கள் தாய் தகப்பனரைப்பற்றியும் கேட்டால் உடனேசொல்லிவிடுவீர்கள்.

மா : 1 : உன்னைப் போலச் சொல்லத்தெரியாத அவல நிலையில் நாங்கள் இல்லையே!

வள் : அது சரி! உங்கள் குலம் கோத்திரம் எப்படி ஏற்பட்டது தெரியுமா? உங்கள் பாரம்பரியம் தெரியுமா?

மா : ஏன் தெரியாமல்!

மா 1 : நான் ராஜ வம்சத்தில் வந்தவன்.

மா 3: நான் பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவன்.

மா 2: நாங்கள் வைசிய குலம்.

மா : 4: நாங்கள் சிவபெருமான் சடாபாரத்தில் தோன்றிய வேளாள ஜாதியார்.

வள் : அதுதான் தெரியுமே. இந்த வர்ணாசிரம தருமமெல்லாம் இருக்கட்டும். அது எப்படி ஏற்பட்டது என்பது பெரிய விவகாரம். அதைப்பற்றி வேருெரு சந்தர்ப்பத்தில் விவாதிப்போம். உங்கள் கோத்திரத்தைச் சொல்லுங்கள்.

மா : 2: நான் பிருங்கி மகாரிஷி கோத்திரம்.

மா : 1: நான் பராசர முனிவர் கோத்திரம்.

மா : 3: நான் வசிஷ்ட மகாரிஷி கோத்திரம்.

மா : 4: நான் வியாசமுனிவர் கோத்திரம்.

மா : 5: நான் காசிப மகாரிஷி கோத்திரம்.

வன் : (சிரித்து) இந்த மகாரிஷிகளுடைய பிறப்பு வளர்ப்புத் தெரியுமா உங்களுக்கு? வம்சாவளி தெரியுமா? அவர்களுடைய தாய் தகப்பனார் யாரென்று தெரியுமா?

மா : 2 நீதான் சொல்லேன்.

வன் : வசிஷ்டர் பிரம்ம தேவருடைய வைப்பாட்டி வயிற்றில் பிறந்தவர். அந்த வசிஷ்டருக்கு ஒரு சண்டாளி மூலமாகப் பிறந்தவர் சத்தியர். அந்த சத்திய தேவர் ஒரு புலைச்சியோடு கூடியதால் உண்டானவர் பராசர முனிவர்.

(மாணவர்கள் ஒருவரை யொருவர் பார்த்து முகம் சுளிக்கின்றனர்.)

வன் : வசிஷ்ட முனிவர் யாரென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். தசரத மகாராஜாவின் இராஜகுரு அவர். சாட்சாத் ஸ்ரீ இராமபிரானுக்குக் கல்வி கேள்வி புகட்டியவர். பராசரரோ ஸ்மிருதி ஒன்றை நமக்குத் தந்தவர்.

மா : 3: என்னவோ அளக்கிறுண்டா! வாய்க்கு வந்தபடியெல்லாம். வாங்கடா போவோம்.

வன் : இருங்கள். இதைக் கேட்டுவிட்டுப் போங்கள். நம்முடைய நால்வேதங்களுக்கும் வியாக்கியானம் எழுதியிருக்கிறாரே வியாசர்; அவர் யாருக்குப் பிறந்தவர் தெரியுமா? பராசர முனிவருக்கும் மீன் வாணிபம் செய்து வந்த ஒரு செம்படவப் பெண்ணுக்கும் மகனுகப் பிறந்தவர். பூசுரர் எனப்பட்டோரின் பூர்வோத்திரமெல்லாம் இப்படியிருக்க, நீங்கள் குலம் கோத்திரத்தைப் பற்றிப் பிரமாதப்படுத்திப் பேசுகிறீர்கள். இந்தப் பிறப்பில் ஒன்றுமில்லை. இது எல்லார்க்கும் பொது. மக்களுடைய சிறப்பெல்லாம் அவர்கள் கற்கும் உயர்ந்த கல்வியிலும் நல்ல ஒழுக்கத்திலும் செய்யும் சிறந்த செயல்களிலும் மேற்கொள்ளும் தொழிலிலும்

தான் இருக்கிறது. உயர்வு தாழ்வு என்பதை இப்படித் தான் பார்க்க வேண்டும்.

மா : 1: எங்களுக்கு எல்லாம் தெரியும், போடா! உன் வழி யைப் பார்த்துக் கொண்டு.

(மாணவர்கள் ஒவ்வொருவராகக் கலைந்து செல்கின்றனர். வள்ளுவன் அவர்களை இரக்கமாகப் பார்த்துப் புன்னகை புரிகிருன்.)

## காட்சி—7

காலம் : பிற்பகல்

இடம் : துள்ளுவ முதலி வீடு

உறுப்பினர் : வள்ளுவன், துள்ளுவன், கோதை, திருமூலர்

(வள்ளுவன் கூடத்தின் ஒருபக்கம் அமர்ந்து வருத்தத்துடன் ஏதோ சிந்தித்துக் கொண்டு இருக்கிருன். கோதை அவனுடைய முகவாட்டத்தைக் கவனித்து விட்டு ஆறுதல் கூற அருகே செல்லுகிருள்.)

கோதை : என்ன கண்ணு! ஏன் ஒரு மாதிரியா இருக்கே?

வள் : (திடுக்கிட்டு நிமிர்ந்து) உம். என்னம்மா கேட்டே?

கோ : குருகுலத்திற்குப் போய் வந்ததிலிருந்து என்னமோ மாதிரியா இருக்கியே. வாத்தியார் ஏதேனும் கோவிச்சுக் கிட்டாரா? அல்லது உடம்புக்கு.........

துள் : ஏன்? நயினு! யாராச்சும் ஏதாச்சும் சொன்னுங்களா?

வள் : அதெல்லாம் ஒன்றுமில்லே, அப்பா!

துள் : யார் எது சொன்னுலும் என்ன நடந்தாலும், நீ தான் வெளியே மூச்சே விடமாட்டியே. நல்ல பிள்ளையப்பா நீ!

**கோ:** குழந்தையை ஒன்னும் சொல்லாதீங்க. அது முன்னேயே குன்றிப்போயிருக்கு. நீ வா, ராஜா! பட்சணம் சாப்பிடுவே.

(கோதை வள்ளுவனைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போகிருள். இச்சமயம் வெளியே திருமூலர் வந்து நிற்கிருர்.)

**திருமூலர்:** பிச்சாந்தேகி!

**துள்:** யாரோ சாமியார் வந்திருக்கார் போலிருக்கு, கோதை! பிச்சை இட்டு அனுப்பு.

(கோதை உள்ளிருந்து அமுதை எடுத்துக் கொண்டு போகிருள். வள்ளுவனும் அவள் பின்னேயே போகிருன்.)

**கோ:** உள்ளே வாங்க, சாமி. இப்படி வந்து சாப்பிடுங்க.

**திரு.:** வேண்டாம், தாயே! இங்கேயே கொண்டுவந்து கையிலே கொடுத்து விடு.

(கோதை அமுதை அவர் கரத்தில் இடுகிருள். திருமூலர் அதை வாங்கி அப்படியே சாப்பிட்டு விட்டுக் கைகளைத் தட்டிவிட்டு உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்படுகிருர். கோதை உள் செல்லுகிருள். வள்ளுவன் மட்டும் சிந்தனையுடனேயே சாமியார் பின்னேயே செல்லுகிருன். காலடியோசை கேட்டுத் திருமூலர் திரும்பிப் பார்க்கிருர்).

**திரு:** என்ன தம்பி! என் பின்னலேயே வருகிருய்?

**வள்:** உங்களுடனேயே வரலாம் என்று விரும்புகிறேன். என்னை ஆட்கொள்ளணும்.

**திரு:** (வியப்புடன்) நான் நாடோடி மாதிரி ஓரிடத்தில் நில்லாமல் ஊர், காடு, மலை எல்லாம் சுற்றிக்கொண்டிருப்பவன். ஊண் உறக்கத்தைப்பற்றிக் கவலை கொள்ளாதவன். ஏதா

யினும் கிடைத்தால் சாப்பிடுவேன். இல்லையானால், பல நாள் பட்டினி கூடக் கிடப்பேன். எனக்கு உதிர் சருகு, கந்த மூலங்கள் கிடைத்தால்கூடப் போதும். உண்டு பசி யாறுவேன். உனக்கு இதெல்லாம் ஒத்து வருமா?

வள் : உங்களுடன் எல்லா விதத்திலும் ஒத்துப் போவேன், சாமி. நிலைமைக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள நான் பழகிக் கொண்டிருக்கிறேன்.

திரு : இவ்வளவு சிறுவயதில் உனக்கு எதற்கப்பா இந்தக் காட்டு வாழ்க்கை?

வள் : இதற்கெல்லாம் வயது வரம்பு இருக்கிறதா, சாமி? எனக்கு என்னவோ ஆணவம் பிடித்த இந்தச் சமுதாயத்தில் இருக்கச் சிறிதும் விருப்பமில்லை. பேதபுத்தி உள்ள இந்த மனிதர்களைப் பார்த்தாலே எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

திரு : சபாஷ்! சரியான ஆளுதான் நீ. மனப்பக்குவப்பட்டிருக்கிறாய். வா, நாம் போகலாம்.

வள் : உங்களுக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறேன், சாமி! இதோ வந்துவிட்டேன்.

திரு : இப்போது நாம் நேராகத் திருக்கழுக்குன்றத்திற்குத் தான் போகிறோம். கழுக்குன்றத்திற்குப் போனால் காணாத காட்சி யெல்லாம் காணலாம். கைலாசத்தைக் கூடப் பார்க்கலாம்.

வள் : அப்படியா? சாமி!

திரு : ஆமாம். அந்த மலையிலே பெரிய பெரிய மகான்களெல்லாம் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். நான்கு வேதங்களே மலைகளாக இருப்பதாகச் சொல்லப்படுவதால் அதை நம்பியிருப்பவர்களெல்லாம் இங்கு வந்து தங்குகிறார்கள்.

வள் : உம். அப்படியா?

திரு : ஆமாம். அது மட்டுமில்லை. இங்கு இருக்கும் முனிவர்கள் தாங்கள் மட்டும் முத்தியடையணும் என்பதற்காகத் தவம் செய்யவில்லை. உலகில் உள்ள எல்லா மக்களும் ஜீவராசிகளும் நல்வாழ்வு வாழவேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடேயே தவம் செய்கிறார்கள். அவர்களைத் தரிசிப்பதே ஆண்டவன் அநுக்கிரகம் பெற்றது போல.

வள் : உங்களைத் தரிசனஞ் செய்ததும் எனக்கு அப்படித்தான் தோன்றிற்று, சாமி. எல்லாம் வல்ல இறைவன் எனக்கு நல்வழி காட்ட வந்து விட்டான் என்றே எண்ணுகிறேன்.

திரு : எங்களையெல்லாம்விடப் பெரிய மகானாக விளங்குவாய், தம்பி! உலக முழுதும் உன் அறிவுரையைக் கேட்க ஆவலாய்க் காத்திருக்கும்.

வள் : உங்கள் நல்லாசி என்னை வாழ்விக்கட்டும்; சாமி!

(கை கூப்பி வணங்குகிறான். இருவரும் நடந்து போகின்றனர்.)

## காட்சி—8

காலம் : பிற்பகல்

இடம் : திருக்கழுக்குன்ற மலைக்காடு

உறுப்பினர் : தொண்டைமான் இளந்திரையன், வள்ளுவர்

(அரசன் இளந்திரையன் தன் பரிவாரங்களுடன் வந்து காட்டில் வேட்டையாடுகிறான். வேட்டையாடும் உற்சாகத்தில் அவன் ஒரு புலியைத் துரத்திக் கொண்டு அடவியில் வெகு தூரம் தனியாகப் போய் விடுகிறான். இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தையே எதிர் பார்த்து மறைந்து கொண்டிருந்த பகை மன்னனொருவன் அவன்பின்

னையே தொடர்ந்து வந்து தன் வில்லால் குறி பார்த்து அரசன் மீது அம்பு ஒன்றை எய்கிருன். இக்காட்டின் மலையுச்சியில் திருமூலருடன் தவமிருந்து கொண்டிருந்த வள்ளுவர் சலசலவெனச் சருகுகள் மிதிபடும் காலடியோசையால் தியானங் கலைந்து கண் திறந்துப் பார்க்கிருர். பகையரசனின் சதிச் செயல் அவருடைய கண்களில் படுகிறது. இது கண்டு அவர் துணுக்குறுகிருர். உடனே அவருடைய வீரவுணர்ச்சி விழித்துக் கொள்கிறது. உடனே அவர் யோக நிலையிலிருந்து திடுமென எழுந்து பகையரசன் மீது பாய்கிருர். இதனுல் அவனுடைய குறி தவறி விடுகிறது. அவனும் குப்புற விழுந்து விடுகிருன். வள்ளுவன் அவனைக் கட்டிப் பிடித்து எழுந்திருக்க வொட்டாமல் செய்து நிராயுதபாணியாக்குகிருர். சந்தடி கேட்டுத் திரும்பிய அரசன் தனக்கு நேரவிருந்த விபத்தையுணர்ந்து விதிர்ப்புறுகிருன். இதற்குள் அரசனைத் தேடிக் கொண்டு வீரர்கள் வந்து விடுகின்றனர். அரசனின் குறிப்புணர்ந்து அவர்கள் பகை மன்னனைச் சிறைப் பிடிக்கின்றனர். அரசன் நன்றியறிதலோடு வள்ளுவரை அணுகி அவருடைய கரங்களை அன்புடன் பற்றிக் கொள்கிருன்.)

**இளங் :** உங்களால் இன்று என் உயிர் பிழைத்தது. உங்களுக்கு எப்படி நன்றியைத் தெரிவிப்பது என்று தெரியவில்லை, சாமி!

**வள் :** எதற்கு நன்றி? இது போன்ற சந்தர்ப்பங்களில் யாரும் செய்யக்கூடிய உதவியைத்தான் நான் செய்தேன். இதற்குப் போய்...

இளங் : சாதாரண உதவியா இது? எல்லோராலும் செய்யக் கூடியதா? இல்லவேயில்லை.

(வள்ளுவர் புகழ்மொழியை விரும்பாமல் நாணப் புன்னகை செய்து அவ்விடத்தை விட்டு அகலப் பார்க்கிறார்.)

இளங் : உங்கள் தவக்கோலத்துக்கும் இத்துணிகரச் செயலுக் கும் சம்பந்தம் சிறிது கூட இல்லையே! சாமி!

வள் : சந்தர்ப்ப சூழ்நிலை எப்பேர்ப்பட்டவரையும் சூரனாக்கி விடும். ஐயா!

இளங் : இப்பேச்சு உங்களுடைய அடக்க வுணர்ச்சியைக் காட்டுகிறது.

வள் : உங்களுடைய நல்ல உள்ளம் என் செயலைப்பற்றி ஏதேதோ சொல்ல வைக்கிறது. உங்கள் பாராட்டுக்கு நன்றி. நான் போய் வருகிறேன். மன்னு!

இளங் : சற்று இருங்கள். நான் உங்களை ஒன்று கேட்டால் தவருக எண்ண மாட்டீர்களே?

வள் : என்ன! சொல்லுங்கள்.

இளங் : இவ்வளவு இளம் பருவத்தில் இந்தத் துறவுக்கோலம் ஏன்? உங்களுடைய வாலிபமும் வீரமும் இப்படி வீணுக லாமா?

வள் : தவம் புரிவதற்கும் துறவை மேற்கொள்ளுவதற்கும் காலம் பருவத்தை எதிர் பார்க்க வேண்டியதில்லை. எந்த வயதிலும் இவற்றைக் கடைப்பிடிக்கலாம்.

இளங் : இருந்தாலும், சமுதாயப் பணிதான் முதலில்; பின் னர்தான் ஆத்மார்த்தத்தை நோக்க வேண்டும். லௌகீக அனுபவத்தைப் பெற்றபின் பாரமார்த்திகத்துக்குப் போன ஞல்தான் பலயமாக இருக்கும் என்பது என் தாழ்மையான கருத்து. உங்களைப் பார்த்தால் வீர பராக்கிரமமுடைய வராயிருக்கிறீர்கள். உங்களுடைய செயலும் சுத்த வீரர்

என்று தெரிவிக்கிறது. வில்வித்தை, வாள்வித்தை முதலியவைகளைக் கற்றுத் தேர்ந்து போர்ப்பயிற்சியில் வல்லவராக நினைக்க வைக்கிறது. ஆகவே, உங்கள் போர்த்திறமையையும் அறிவாற்றலையும் வீணாகப் போக விடக்கூடாது என்று நான் கருதுகிறேன். ஆதலால்...

வள் : ஆதலால்...... ஏன் நிறுத்துகிறீர்கள்? உங்கள் கருத்தைத் தயங்காமல் சொல்லலாம்.

இளங் : உங்களுடைய அறிவாற்றலை நாட்டு மக்களுக்குப் பயன் படுத்த விரும்புகிறேன். உங்களுக்குத் தடையில்லையானால், என் அரசாட்சியில் பொறுப்பான பதவியொன்றை கொடுத்துக் கௌரவிக்க விரும்புகிறேன்.

வீர : ஆமாம்; ஐயா! அரசர் பெருமான் சொல்கிறபடி குடிமக்களுக்குப் பணிபுரியும் பொறுப்பை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள்.

வள் : ஆண்டவன் திருவுள்ளம் அதுவானால், நான் வேறு சொல்வதற்கு என்ன இருக்கிறது? மன்னா! உங்கள் விருப்பப்படியே என்னைப் பணி கொள்ளலாம்.

இளங் : மகிழ்ச்சி, ஐயா! இப்போதுதான் என் மனம் திருப்தியுற்றது. நீங்கள் செய்த பேருதவிக்கு என்னால் இயன்ற கைம்மாறு புரிய வாய்ப்புத் தந்ததற்கும் மிக்க நன்றி. இரட்டிப்பான மகிழ்ச்சி. என் ஆளுகையில் கருமத் தலைவராக உங்களை நியமித்திருக்கிறேன். இக்கணம் முதல் நீங்கள் என் மெய்க்காப்பாளர்; கருமத்தலைவர். ஆமாம்.

வள் : உங்கள் விருப்பப்படியே அனைத்தும் நடக்கட்டும்.

(இளந்திரையன் வள்ளுவரை அன்புடன் தழுவிக் கொண்டு தன்னுடன் அழைத்துச் செல்கிறான்.)

# காட்சி—9

காலம் : காலை

இடம் : அரசவை

உறுப்பினர் : தொண்டைமான் இளந்திரையன், வள்ளுவர், அமைச்சர், படைத்தலைவர், புலவர் முதலியோர்.

(அமைச்சர், படைத்தலைவர் முதலியோர் புடைசூழ இளந்திரையன் முன்னே வர, வள்ளுவர் அவர்களைப் பின் தொடர்ந்து வருகிறார்.)

ஒருவர் : இந்த ஆண்டிப்பயலுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா?

இரண்டாமவர் : பரதேசியாய்ப் போய் விட்டவனைப் பதவி கொடுத்து பவிசோடு அழைத்து வருகிறார் நம் அரசர்.

மூன்றாமவர் : தாய் தகப்பனார் யாரென்று தெரியாத அநாதைக்கு, தாழ்த்தப்பட்ட ஜாதியென்று தூற்றப்பட்டவனுக்கு இப்போது அரசாங்கமே மரியாதை கொடுக்க வேண்டியதாகி விட்டது. இதனால்தான் யாரையும் வலது சொல்லக் கூடாது என்பது.

ஒரு : கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கிறது. இதற்கு யார் என்ன சொல்ல முடியும்?

இர : விழுமிய கல்வியும் வீரமும் இருந்தால் யாரும் எங்கும் வந்து விட முடியும். ஆண்டவனின் அருளால் நாமெல்லாம் வியக்கத்தக்க அளவு அறிவும் ஆற்றலும் உடையவனாயிருக்கிறான் இளைஞனாயிருந்தாலும்.....................

மூன் : உஸ். பேசாமலிருங்கள். அரசர் காதில் விழப் போகிறது.

(மேல் உப்பரிகையில் அரசியாருடன் அரச குடும்பப் பெண்களும் பிரபுக்களின் பெண்களும் கூடியிருந்து அரசன் அழைத்துப் போகும் வள்ளுவரைப் பார்த்துப் பலவாறு பேசுகின்றனர். வாசுகி அவரைக் கடைக் கண்ணால் கண்டு களிக்கிருள்.)

ஒருத்தி : என்னடி! அப்படிப் பார்க்கிருய், வாசுகி?

இரண்டாமவள் : அரசனுடன் செல்லும் ஆணழகனைப் பார்க்கிருள்.

வாசுகி : (நாணத்துடன்) போங்கடி. உங்களுக்கு இது தான் வேலை. என்னை எப்போது பார்த்தாலும் பரிகாசம் செய்வது.

ஒரு : சும்மாவா சொல்லுகிறோம்? நீ அந்த வீரனை விழுங்கி விடுவது போல் பார்க்கவில்லையா?

இர : கண்ணிருந்தால் பார்க்கிறது. இதற்குப் போய் அவளைக் கேலி செய்கிறீர்களே. நீங்களும் பார்த்தீர்களில்லையா?

மூன் : நாங்கள் பார்த்ததற்கும் அவள் பார்த்ததற்கும் வித்தியாசம் இருப்பது உனக்குத் தெரியவில்லையே!

இர : அவள் எப்போதும் வாசுகி கட்சியடி. இருவருக்குள்ளும் எவ்வளவோ அந்தரங்கம்.

ஒரு : எதற்கும் நேர் பார்வை இருக்கணும். கடைக்கண்ணால் யாருக்கும் தெரியாமல் பார்த்தால் கள்ளப்பார்வை என்று தானே பொருள்.

(இச்சமயம் இப்பெண்களின் பேச்சரவம் கேட்டோ என்னவோ! வள்ளுவர் திரும்பி மேலே பார்க்கிருர். அவருடைய கண் பார்வை வாசுகி மீது விழுகிறது. சில விநாடிகள் அவர் கண்கள் இமைக்காமலே நிலைத்து நின்று விடுகின்றன).

ஒரு : அடி! அடி! இதோ பாருங்கடி. அந்த ஆசாமியும் வாசுகியை வெறித்துப் பார்க்கிறாரு.

இர : காந்தம் இரும்பை இழுக்குது.

மூன் : அந்தக் கள்ளப் பேர் வழி கண்விழி வாசுகியின் உள்ளத்தில் நுழைந்து விட்டான் என்று சொல்லு.

அரசி : (மற்றப் பெண்களைத் திரும்பிப் பார்த்து) இளம் வயதினர்க்கு இதெல்லாம் இயற்கை தானே! இதைப் போய் பிரமாதப் படுத்துகிறீர்களே?

(அரசியார் குரல் கேட்டு அனைவரும் மௌனமாய்விடுகின்றனர்.)

சேவகன் : பராக்கு! பராக்கு! ராஜாதிராஜ ராஜ கம்பீர ராஜ மார்த்தாண்ட தொண்டைமான் இளந்திரையன் மகாராஜா வருகிறார், பராக்கு.

(அவையிலுள்ளோர் அனைவரும் எழுந்து நிற்கின்றனர். அரசன் அரியணைக்கு வந்து அமர்ந்தவாறு கை காட்டி எல்லோரையும் உட்காரும்படிச் சொல்லுகிறான். வள்ளுவர் பணிவுடன் அரசன் முன் நிற்கிறார்.)

அரசன்: அவையோரே! குடிமக்களே! இன்று நான் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன். இதோ நிற்கும் இளைஞர் என் உயிரைக் காப்பாற்றியவர் என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். அதற்கு நான் கட்டாயம் கைம்மாறு செலுத்த வேண்டும். இவருக்கு அமைச்சர் பதவியை விட மேலான அந்தரங்க செயலாளர் பதவியை வழங்குகின்றேன். இன்று முதல் இவர் நம் கருமத் தலைவர் மெய்க்காப்பாளர். இவர் எப்போதும் என்னுடனேயே இருந்து வருவார். இந்த என் முடிவை மந்திராலோசனை சபை ஏற்றுக் கொண்டு விட்டது. குடிமக்களாகிய நீங்களும் என் முடிவை ஏற்றுக் கொண்டு இவரை வாழ்த்துவீர்கள் என்று நம்புகிறேன்.

அவையோர் : (கைதட்டி) கருமத் தலைவர் வாழ்க! வாழ்க! வாழ்க!

(முழக்கம் செய்கின்றனர்.)

அர : கருமத் தலைவர்க்குரிய விருதை இவருக்கு இப்போது வழங்குகிறேன். இதற்குரிய சிறப்புப்பட்டமான வள்ளுவர் என்ற பெயரை இவர் இயற்பெயராகப் பெற்றிருப்பதால், அதற்குப் பதிலாக இராயசேகரர் என்ற பட்டத்தை அளிக்கின்றேன்.

புலவர்கள்: பொருத்தமான சிறப்புப்பெயர்.

(மகளிர் கூட்டத்திலிருந்தும் மகிழ்ச்சி யொலி ஒலிக்கிறது. தன்னை மறந்து வாசுகி பெரு மகிழ்ச்சியால் கூத்தாடுகிருள்.)

தோழி: 1 : பார்த்தீர்களாடி வாசுகியின் கொண்டாட்டத்தை! நான் சிறிது முன்னே சொன்னதற்கு மறுத்துச் சொன்னீர்களே, என்னென்னவோ? இப்போது என்ன சொல்கிறீர்கள்?

தோழி : 2 : வாசுகி உள்ளாழக்காரிதான்.

தோழி : 3 : ஆசை வெட்க மறியாது என்பார்களே? வாசுகி இதை மெய்ப்பித்து விட்டாள்.

வாசுகி : (பொய்க்கோபத்துடன்) நீங்க இப்படி பரிகாசஞ் செய்தால் நான் போய் விடுவேன். ஆமாம்.

தோ : 1 : போய் விடுவியா? ஏண்டி கபடநாடகம் ஆடுகிருய்? உங்களவர் பெருமை முழுவதையும் கேட்டுவிட்டுப்போடி.

அவையோர் : வள்ளுவர் வாழ்க! கருமத்தலைவர் வாழ்க! அரசர் இளந்திரையர் வாழ்க! வாழ்க! (வாழ்த்தொலி முழங்குகிறது.)

வள் : அரசர் பெரும! தங்கள் சித்தம் என்பாக்கியம்-என் நன்றியைத் தெரிவிக்க வார்த்தைகளே கிடைக்கவில்லை. ஆனுல் ஒன்று சொல்லி யாகணும். என் மீது தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து நான் உண்மை

யாக ஊழியம் செய்து கொண்டிருப்பேன் என்று உறுதி கூறுகிறேன். எல்லோருக்கும் என் பணிவார்ந்த வணக்கம். (மீண்டும் மகிழ்ச்சியொலி ஒலிக்கிறது.)

அர : இத்துடன் அவை முடிகிறது.

(அரியணையிலிருந்து எழுந்து செல்கிறான். வள்ளுவரை எல்லோருஞ் சூழ்ந்து கொண்டு பாராட்டுகின்றனர். உப்பரிகையிலிருந்த மகளிர் வாசுகியைக் கேலிசெய்துகொண்டே போகின்றனர்.)

## காட்சி-10

காலம் : மாலை

இடம் : அந்தப்புரப் பூஞ்சோலை

உறுப்பினர் : வாசுகி, தோழி, வள்ளுவர், தலைமை அமைச்சர்.

(வாசுகியும் தோழியும் செடி கொடிகளிலிருந்து பூப்பறித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இருக்கும் மாதவிப்பந்தலை அடுத்த பளிங்கு மேடையில் தலைமை அமைச்சர் வந்து அமருகிறார்.)

தோழி : (கலகலவென நகைத்து) வாசுகி! நீ உண்மையாகவா மலர் கொய்கிறாய்? இலைகளையெல்லாம் பறித்துக்கொண்டிருக்கிறாயே!

(யோசனையில் ஆழ்ந்து மெய் மறந்திருந்த வாசுகி திடுக்கிட்டு தன் கைகளில் இருந்த இலைகளை அவசர அவசரமாகக் கீழே போடுகிறாள்.)

வா : பூக்களைத்தான் கொய்கிறேன், பூங்குழலி! இலைகள் அடர்ந்திருப்பதால்........

தோ : (ஏளனமாக) ஏன் வாசுகி! மழுப்புகிருய்? உன் கவனம் எங்கோ இருக்க, கை ஏதோ செய்து கொண்டிருக்கிறது. உன் நிலையைப் புரிந்து கொண்டுதான், 'நீ ஓரிடத்தில் அமைதியாக உட்கார்ந்திரு. நான் பூக்களைப்பறித்து வருகிறேன்' என்று சொன்னேன். கேட்காமல் உன் மன நிலையை மறைக்க நானும் மலர் பறிக்கிறேன் என்று வந்து மாய்மாலம் பண்ணுகிருய்.

(வாசுகி நாணத்தால் தலை குனிகிருள்.)

தோ : நானும் ஒரு வாரமாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன், உன்னுடைய உன்மத்த நிலையையெல்லாம்.

வா : (அவசரமாக) ஊம்.....ஊம். அதெல்லாம் ஒன்றுமில்லை, பூங்குழலி! நான் எப்போதும் போலத்தான் இருந்து கொண்டிருக்கிறேன். உன் கண்ணுக்குத்தான்.

தோ : இன்னமும் என்னிடம் மறைக்கப் பார்க்கிருயே! வாசுகி! அற்றது உற்றதை எல்லாம் சொல்லி ஆற்றிக் கொள்ளும் என்னிடமும் மறைப்பு ஒளிப்பு ஏன்? பெற்ற தாய் அறியாத சூல் உண்டா?

(வாசுகி வெட்கத்தால் தலை கவிழ்கிருள்.)

தோ : என்னிடம் உன்னுடைய உள்ளத்தில் உள்ளதைச்சொல்வதற்கு என்ன? சொன்னுல் உனக்குத்தான் நன்மை ஏற்படும்.

(வாசுகி ஏதோ சொல்ல வாய் திறக்கிருள். ஆனுல் நா எழ வில்லை.)

தோ : நான் சொல்லட்டுமா, உன் உள்ளத்தை எது வாட்டி வருகிறது என்று?

வா : உனக்குத்தான் தெரிந்து இருக்கிறதே! என்னை ஏன் கேட்கிருய்?

தோ : ஊம். அப்படி வா வழிக்கு. நீ அந்த இராயசேகரரைத் தானே நினைத்து உருகிக் கொண்டிருக்கிறாய்?

வா : (பொய்க்கோபத்துடன்) போடி.

தோ : அவரிடம் தானே தூது போகச் சொல்கிறாய். போகிறேன். என்ன சொல்ல வேண்டும் என்று சொல்லு. அதைச் சொல்லி விட்டுப் பதில் பெற்று வருகிறேன்.

வா : நீயென்ன தூது போவது? உனக்கு முன்பே என் நெஞ்சம் அவரிடம் தூது போய் விட்டது. அது பெற்று வரும் பதிலைத்தான் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

தோ : ரொம்ப நெஞ்சழுத்தக்காரிதான், வாசுகி! நீ கொள்ளை காதலை மனதில் நிரப்பி வைத்துக்கொண்டு உயிர்த்தோழியான என்னிடம் கூட மூச்சு விடாமல் இருக்கிறாயே?

வா : போடி! பெண்களாய்ப் பிறந்து விட்டவர்கள் அதையெல்லாம் தாங்களாகவே வாய்விட்டுச்சொல்வார்களா? என்ன? வெட்கம் இல்லாமல். பெண்ணாய் இருக்கும் உனக்கு இது தெரியவில்லையே!

தோ : அது சரிதான். மனதிலேயே நினைத்துக் கொண்டிருந்தால் ஆசை நிறைவேறி விடுமா! என்ன? இரண்டு உள்ளங்களையும் ஒன்றுசேர்ப்பதற்கும் இருவருக்கும் சந்திப்பை ஏற்படுத்தி உறவாட விடுவதற்கும் இடையில் ஒரு ஆள் வேண்டித்தானே இருக்கிறது.

வா : அப்படியென்றால் அவரிடம் என் சார்பில் நீ தூது போகிறேன், என்கிறாயா?

தோ : (சிரித்துக்கொண்டே) நீ சொன்னால் நான் போகிறேன்.

வா : அவர் என்னை விரும்புவாராடி! என்னைப்போல அவரும் என்னைக் காதலிக்கிறாரோ, என்னவோ?

தோ : அழகு கொலுவீற்றிருக்கும் ஆரணங்கைக் காதலிப்ப தற்குக் கசக்குமா என்ன? அதுவும் தலைமை அமைச்சரின் ஒரே மகள்.....

வா : ஏண்டி! பூங்குழலி! நான் தான் அவரைப் பார்த்திருக் கிறேன். அவர் என்னைக் கவனித்திருப்பாரோ?

தோ: நீ அவரைப்பார்த்தது போலவே அவரும் உன்னைக்கண்டு கொண்டார். நாங்கள்தான் அப்போதே உன்னிடம் சொன் னோமே!

வா : ஊம். உண்மையாகவா?

தோ : அதுமட்டுமா! அன்றையிலிருந்து அவர்அரண்மனைக்குப் போகும்போது, வரும்போது எல்லாம் நீ இருக்கும் இடத் தைத்தான் அவருடைய கண்கள் வட்டமிட்டுக்கொண் டிருக்கின்றன. நான் அதைக் கவனித்துக் கொண்டு தான் வருகிறேன்.

வா : பூங்குழலி! நான் ஒன்று கேட்கிறேன் உன்னை. ஒளிக்கா மல் சொல்வாயா?

தோ : என்ன? சொல். நீ எதைக் கேட்டு உன்னிடம் நான் ஒளித்திருக்கிறேன்?

வா : இல்லை; அவர் இருக்கிறாரே! அவரைப்பற்றி நீ என்ன எண்ணுகிறாய்?

தோ : (கேலியாக) எவரு?

வா : போடி! மறுபடியும் தெரியாதது போல் கேட்கிறாய் குறும் பாக. அவர் என்றால் வேறு யாரைச் சொல்வேன்?

தோ : (நகைத்து) ஓ! உங்களவரையா?

வா : ஆமாம். அவர் ஆண்கள் கூட விரும்பக்கூடிய பேரழக ராய் இருக்கிறார் இல்லையா? அவருடைய அறிவையும் ஆற்றலையும் இந்த நாடே அறிந்திருக்கிறது.

தோ : (கேலியாக) ஆமாம்; ஆமாம்.

இச்சமயம் அரண்மனை பூந்தோட்ட வழி யாக வந்து கொண்டிருந்த வள்ளுவர் அடுத்துள்ள அந்தப்புரப் பூஞ்சோலையில் தன்னைப்பற்றி யாரோ பேசுவதைக் கேட்டு வியப்புற்று வேலியோரமாகப் போய்க் கவனிக்கிறார். வாசுகிதான் தோழியிடம் தன்னைப் பற்றி வருணித்துக் கொண்டிருக் கிறாள் என்று அறிந்ததும், மனமகிழ்ந்து மேலும் அவளுடைய பேச்சைக் கேட்டு இன்புறுவதற்காகத் தான் இருப்பதை மற்ற வர்கள் அறிந்து கொள்ளாதபடி, பூம்புதர் பக்கத்தில் நின்று ஒற்றுக்கேட்கிறார்.]

வள் : (தனக்குள் மெல்ல) நான்தான் வாசுகியைப் பார்த்துப் பித்துப்பிடித்துப் போயிருக்கிறேன் என்று எண்ணினேன். பெரிய இடத்தில் என் புத்தி போகலாமா என்று யோசித் துக் கொண்டிருக்கிறேன். ஆனால், தலைமை அமைச்சர் மகளும் என்மீது ஆசை கொண்டிருக்கிறாள் என்றல்லவா இப்போது தெரிகிறது? நான் பெரும் பேறு பெற்றவன் தான். எங்கள் காதல் நிறைவேறுமா? பார்ப்போம், ஆண்டவன் திருவருள் கூட்டி வைத்தால் நடக்காததும் உண்டோ!

வா : பூங்குழலி! உன்னிடம் சொல்வதற்கு என்ன? முதன் முதலாக நான் அவரைப் பார்த்தேனே! அப்போதே அவருடைய கம்பீரத் தோற்றம் என் நெஞ்சில் நிறைந்து விட்டதடி! போதிய உயரம் இல்லாவிட்டாலும் அகன்ற மார்பும் திரண்ட தோள்களும் அவருடைய உருவத்தை எடுப்பாக எடுத்துக் காட்டுகின்றன. அகன்ற நெற்றி; ஆழ்ந்த கூரிய கண்கள்; எடுப்பான மூக்கு; அழகாக வளைந்த மோவாய்; மீசை முறுக்கேறிய தடித்த உதடுகள் என் கண்மணிகளில் எப்போதும் நிழலாடிக் கொண்டிருக் கின்றன. கனவிலும் நனவிலும் முறுவல் தவழும் அவ

ருடைய அழகியமுகம் காட்சிதந்து என்னை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய நினைவை அகற்ற எவ்வளவோ முயன்று பார்த்தேன். முடியவேயில்லை.

தோ: உன் விருப்பத்தைப் பெற்ற தாயிடம் சொல்வதற்கு என்ன?

வா : எப்படிச் சொல்வேன்? பூங்குழலி! என்னையொத்த பருவத்தினளான உன்னிடமே கருத்தைச் சொல்ல முடியவில்லையென்றால், பிறரிடம் அதுவும் பெற்ற தாயிடம் சொல்ல முடியுமா? நீ தான் அதற்கு வழி சொல்ல வேண்டும்.

தோ : சொல்கிறேன்.

வா : பூங்குழலி! எனக்காக ஒரு உதவி செய்வாயா? நீ முதலில் அவரிடம் போய்ப் பேச்சுக்கொடுத்து அவருடைய உள்ளக் கருத்தைத் தெரிந்துகொண்டு வா! நாம் நினைக்கிறபடி அவரும் என் மீது காதல் கொண்டிருக்கிறார் என்பது தெரிந்தால்தானே பெற்றோரிடம் சொல்ல முடியும்?

தோ : கட்டாயம் போய் அவர் கருத்தை அறிந்து வருகிறேன்.

வா : உனக்கு எப்படி நன்றி சொல்வேன்? பூங்குழலி!

தோ : எனக்கு ஒன்றுஞ் சொல்ல வேண்டாம். வாய் கைக்கு நன்றி சொல்வதை நீ எங்காயினும் கேட்டிருக்கிறாயா?

வா : இருந்தாலும்......அது போகட்டும். இன்றென்று. அவரிடஞ் சென்று அவருடைய உள்ளக்கிடக்கையை அறிந்து வந்ததும் நீதான் நற்றாய் மூலமாக பெற்ற தாய்க்கு பக்குவமாகச் சொல்லி தந்தையர்க்கு அறிவித்து திருமணம் செய்விக்க ஏற்பாடு செய்யவேண்டும். நீ இந்த உதவியைச் செய்தால் வாழ்நாள் உள்ள அளவும் நான் உன்னை மறக்க மாட்டேன்.

தோ : (குறும்பாக) அதெல்லாம் பொய்ப்பேச்சு. உனக்கு அவர் கிடைத்துவிட்டால் அப்புறம் மற்றவர்கள் நினைவெல்லாம் உனக்கு எங்கே இருக்கப் போகிறது?

வா : (வெட்கத்துடன்) அப்படியெல்லாம் நான் இருக்க மாட்டேனடி.

தோ : நீ கேட்டுக் கொண்டபடி காரியத்தை வெற்றிகரமாக முடித்துக்கொடுக்கிறேன். எனக்கு என்ன பரிசு கொடுப்பாய்? அதைச் சொல்லு.

வா : (கழுத்திலிருந்த முத்துமாலையை எடுத்து நீட்டி) இப்போதே இதைப் பரிசாகப் பெற்றுக்கொள்.

[இச்சமயம் தலைமை அமைச்சர் பளிங்கு மேடையை விட்டு எழுந்து அவர்கள் அருகே வருகிறார்.]

தலை : (சிரித்துக்கொண்டே) நீ பரிசு வேண்டுமானால் வாங்கிக் கொள், பூங்குழலி. ஆனால், நீ வாசுகிக்காக சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை.

[வாசுகியும் தோழியும் அவரது வருகையைக் கண்டு திடுக்கிட்டு நடுநடுங்கி நிற்கின்றனர். அடுத்த பூம்புதரின் மறைவில் நின்றிருந்த வள்ளுவருக்கும் அச்சம் உண்டாகிறது.]

தலை : நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. நீங்கள் பேசியதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். எனக்கு வாசுகியைப் பற்றி இருந்து வந்த ஒரு கவலை இன்றோடு தீர்ந்துவிட்டது. அவள் விரும்புகின்ற காதலனுக்கே அவளை மனப்பூர்வமாகத் திருமணம் செய்து வைப்பேன்.

வா : உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பேன்? அப்பா!

தலை : (முகமலர்ச்சியுடன்) வாசுகி! நீ விரும்புகின்ற வள்ளுவருடைய கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டாமா என்று கேட்கலாம். அவருடைய விருப்பமும் எனக்குத்தெரிந்து போய் விட்டது. அதோ பாருங்கள், பக்கத்துப் பூந்

தோட்டத்தை. அவரும் உங்கள் உரையாடலை இதுவரை கேட்டுக் கொண்டுதான் இருந்தார். நான் இப்போது பேசுவதையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.

[வாசுகியும் தோழியும் ஏக காலத்தில் ஆ! எனக் கூவி வியப்படைகின்றனர். அவர்களுடைய கண்கள் வள்ளுவர் நிற்கும் இடத்தைத் தேடிப் பார்க்கின்றன. தலைமை அமைச்சர் குரல் கேட்டதுமே அவசரமாக அவ்விடத்தை விட்டு அகல முயன்ற வள்ளுவர் காலெழாமல் அப்படியே நிற்கிறார்.]

தலை : (வள்ளுவர் இருக்கும் பக்கம் நோக்கி) இராயசேகரரே! நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டுவதில்லை.—பெண்கள் இருக்கும் பக்கமே திரும்பிப் பார்க்காத பேராண்மையும் பெருங்குணமும் இயற்கையாக உடைய வள்ளுவர், நீங்கள் இருக்கும் இடத்தை நாடி வருவதும் உங்கள்உரையாடலைக்கேட்பதும் என்றால்அவருக்குவாசுகியின்பால் நாட்டம் உண்டாயிருக்கிறது; அன்பு ஏற்பட்டு இருக்கிறது என்றுதானே பொருள்?

[இதற்குள் வள்ளுவர் சுதாரித்துக் கொண்டு அவ்விடத்தைவிட்டு விரைந்து செல்கிறார்.]

தலை : (நகைத்துக்கொண்டு) வள்ளுவருக்கு வெட்கம் வந்து விட்டது. அதுதான் விரைந்து போகிறார். வாசுகி! நீ மிகவும் தவம் செய்தவள். உனக்கு நல்ல கணவன் கிடைத்து விட்டான். நீ மகிழ்ச்சியாயிரு. எல்லாம் நல்லபடி நடக்கும். நான் அரசரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.

வா : (நாணத்துடன்) நீங்கள் நல்ல அப்பா! உங்களுக்கு மகளாகப் பிறந்தது நான் பெற்ற பெரும் பேறு.

[அவர் காலில் விழுந்து வணங்குகிறாள். இச்சமயம் தோழி மெல்ல நழுவி விடுகிறாள்.]

தலை: தீர்க்க சுமங்கலியாயிரு; அம்மா!

## காட்சி—11

**காலம் :** முதல் ஜாமம்

**இடம் :** தலைமை அமைச்சர் மாளிகை

**உறுப்பினர் :** வள்ளுவர், வாசுகி, உறவினர்.

[வள்ளுவருக்கும் வாசுகிக்கும் திருமணம் நடைபெறுகிறது. நாதசுர இசை இனிமையாக முழங்குகிறது. மங்கள வாழ்த்தொலி உடன் ஒலிக்கிறது. உறவினர்களின் கலகலப்பான பேச்சின் அரவம் இன்னிசைக்குச் சுருதி கூட்டுகிறது. திருமண மக்களான வள்ளுவரும் வாசுகியும் தத்தம் தோழர் தோழியரால் முன்பின்னாக அழைத்துச் செல்லப்பட்டு பூக்களாலும் தோரணங்களாலும் அழகு செய்யப்பட்ட தனி அறையில் விடப்படுகின்றனர்.]

**வள் :** வாசுகி! ஏன் அங்கேயே நிற்கிறாய்? வா!

(கூப்பிட்டுக் கொண்டே போய்ப் பஞ்சணையில் அமர்கிறார். வாசுகி நாணத்துடன் தூரத்திலேயே நிற்கிறாள்.)

**வள் :** நீ நாணமாய் இருப்பது கூட அழகாய்த் தான் இருக்கிறது. உன் அழகுக்கு அது மேலும் அழகைச் சேர்க்கிறது.

(இது கேட்டு வாசுகி தலையை மேலும் குனிந்து கொள்கிறாள்.)

**வள் :** வாசுகி! அருகில் வரமாட்டாயா? நெருப்பை நெருங்கினால் தான் சுடும். நீ தூர இருந்தே என்னைச் சுட்டுப் பொசுக்குகிறாயே. இந்தத் தாபத்தை என்னால் தாங்க முடியாது.

(எழுந்து வாசுகியிடம் சென்று அவளது கரத்தைப் பற்றி அழைத்து வந்து தன்னு டன் உட்கார வைக்க முயல்கிறார். அவர் தன்னைத் தொட்டதுமே மெய் விதிர்த்த வாசுகி பஞ்சணை அருகே சென்றதுமே அவரது பாதங்களில் விழுந்து வணங்கு கிறாள்.)

வள் : (புன்னகை செய்து) உன்னுடைய நாணமும் புன் னகையும் என்னை அடியோடு உனக்கு அடிமையாக்கி விட்டன. போர்க்களத்திலே எப்பேர்ப்பட்ட பகைவர் களுக்கும் தோற்காத நான் உன்னுடைய ஒளிபொருந்திய முகத்தைக் கண்டு முன்னமே பணிந்து போய் விட்டேன். அது போதாது என்று.........

வா : நாதா! நீங்கள் இப்படியெல்லாம் என்னைப் புகழலாமா? வெட்கத்தால் என்னை ஒரேயடியாக ஒடுங்க வைத்து விடு கிறீர்களே!

வள் : நான் மிகைப்படுத்தி ஒன்றும் சொல்லவில்லையே! வாசுகி! யாருக்குந் தலை வணங்காது சுதந்திரமாக இருந்த என்னை எப்படி நீ உன் வசப்படுத்தி விட்டாய் என்பதைத் தான் நான் விவரிக்கிறேன். இதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? பெருமைப் படுவதைத் தவிர. நீ தொண்டை மண்டலப் பேரரசை ஆட்டிப் படைக்கும் தலைமை அமைச்சரின் அருந்தவச் செல்வி. நானோ ஒரு சாதாரண வீரன். தென் துருவமும் வடதுருவமும் ஒன்று சேர்ந்த தென்றால் கூட அவ்வளவு ஆச்சரியப்படுவதற் கில்லை. நாம் ஒன்று பட்டது வியப்பே!

வா : மாமன்னனின் மகளானாலும் மாலையிட்டவனுக்கு மண்டி யிட்டுத்தானே ஆக வேண்டும்?

வள் : இவ்விதமான நிலை ஏற்பட்டதற்காக நீ வருத்தப்படு கிறாயா? வாசுகி!

வா : ஐயையோ! நான் அப்படிச் சொல்லவில்லையே! பெண்களாய் பிறந்தவர்கள் எப்பேர்ப்பட்ட நிலையில் இருந்தாலும், கட்டிய கணவனுக்குக் கை கட்டி நின்று குற்றேவல் செய்ய வேண்டியது தலையாய கடமை என்றே சொல்ல வந்தேன். நீங்கள் அதை விபரீதமாகப் பொருள் பண்ணி...........

வன் : (நகைத்து) அதிருக்கட்டும், வாசுகி! இப்போது இவ்வளவு பணிந்து பேசுகிறாயே? திருமணத்துக்கு முன் எவ்வளவு மிடுக்காக இருந்தாய்? என்னைக் கண்டால் எப்படி எப்படியெல்லாம் நடந்து கொண்டாய்?

வா : (வெட்கத்தோடு) எப்படி நடந்து கொண்டேன்?

வன் : உன் கடைக்கண் நோக்கு என் மீது விழாதா என்று நான் எவ்வளவு நாட்களாக ஏங்கிக் கொண்டிருந்தேன், தெரியுமா? அந்தச் சமயங்களில் நீ என்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாய். கால் சலங்கை கலீர் கலீரென ஒலிக்கக் கம்பீரமாக நடந்து செல்வாய். அது என் நெஞ்சத்தடத்தின் மீது நடப்பது போல் இருக்கும்.

வா : (நாணப் புன்னகையுடன்) என்னதான் தன் உள்ளத்தைக் கவர்ந்தவராயிருந்தாலும், எவ்வளவுதான் தனக்கு ஆசை இருந்தாலும் திருமணத்துக்கு முன் எந்தப் பெண்தான்? நாணத்தை விட்டு ஆடவனொருவனைப் பார்த்துப் பேசுவாள் அதுவும் பலர் முன்னால்? எல்லாம் தெரிந்திருந்தும், நீங்கள் என் மீது குற்றஞ் சாட்டுகிறீர்களே!

வன் : நான் பார்க்கும் போது உன் முகத்தைத் திருப்பிக் கொள்வதும், தலைகுனிந்து கொண்டு கால் விரலால் நிலத்தைக் கீறியவாறு தரையை நோக்குவதுமாயிருக்கும் நீ நான் பார்க்காத சமயத்தில் மட்டும் என்னைப் பார்த்து மெல்லச் சிரிக்கலாமா? உன்னுடைய இந்தக் கள்ளப் பார்வை என்னை எவ்வளவு வேதனைப் படுத்திவிட்டது, தெரியுமா?

வா : வீண் பழி சுமத்துகிறீர்களே?

வள் : சரி, சரி; வெகு நேரமாக நிற்கிறாய். உன் மெல்லடி நோகப் போகிறது. இப்படி உட்கார்.

(அவள் கரத்தைப் பற்றி உட்கார வைக்கிறார். வாசுகி நாணம் மேலிட அவர் பக்கத்தில் அமர்கிறாள்.)

வள் : இந்திரலோகம், சொர்க்கம் என்றெல்லாம் சொல்கிறார்களே! வாசுகி! அதெல்லாம் நீ இருக்கும் இடத்திற்குச் சமமாகுமா?

வா : (குறும்பாக) யாரைக் கேட்கிறீர்கள்?

வள் : ஏன் உன்னைத்தான். (அவள் தோள்களைப் பற்றி அணைத்தவாறே) உன்னுடைய தோள்கள் அமிழ்தத்தால் ஆனவையோ! உன்னைத் தீண்டியவுடனே என் உடம்பு முழுதும் ஒருங்கே குளிர்ந்து விட்டதே! உயிர் கூடத் துளிர்க்கத் தொடங்கி விட்டதோ என்று பிரமையுண்டாகிறது.

(வாசுகி நாணம் மிகக் கொண்டு மௌனமாகிறாள்.)

வள் : வாசுகி! வாய் திறந்து பேசமாட்டாயா? உன் பவழ வாயைத் திறந்தால் முத்து உதிர்ந்து விடும் என்று அஞ்சுகிறாயா?

வா : (நாணத்துடன்) போங்கள்; நாதா!

வள் : பாலோடு தேன் கலந்தால் போன்ற இனிமையான உன் பேச்சை நான் செவி குளிரக் கேட்க ஆசைப்படுகிறேன், வாசுகி! பேசு, கண்ணே! பேசு!

வா : நான் என்னத்தைப் பேசுவது? நாதா! உங்களுடைய கனிந்த மொழிகளை நாளெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க என் உள்ளம் அவாவுகிறது.

வள் : வாசுகி! கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியக் கூடிய ஐம்புலன்களும் லயமாகக் கூடிய லயஸ்தானம் பெண்களாகிய உங்களிடந்தானே இருக்கிறது. பெண்ணின்பத்துக்கு இணையான பேரின்பம் வேறெங்கு இருக்கிறது? முக்தியின்பம், நிரதிசய இன்பம் என்பதெல்லாம் முட்டாள்களின் பிதற்றல் பேச்சு.

வா : புகழ்வதற்குக் கூட ஓர் அளவு கிடையாதா? நாதா!

(வள்ளுவர் வாசுகியைத் தழுவிக் கொள்கிறார்.)

வள் : மலரினும் மெல்லிது கூட்டுக்களி. அதன் செவ்வியறிந்து அனுபவிப்பவர்களுக்குத்தான் அதன் இன்பச் சுவை முழுதாகக் கிடைக்கும். காற்று இடை புகாதபடி கூடி முயங்குவதிலுள்ள சேர்க்கை இன்பம் முக்தி யின்பத்திலும் கிடையாது என்பேன்; கண்ணே!

வா : (நெருங்கியமர்ந்து) உங்கள் சொல்லின்பமே பேரின்பமாயிருக்கிறதே! என்னைக் கிறங்க வைக்கிறதே! நாதா!

வள் : என்னோடு இணைந்து வா! அன்பே!

(விளக்கின் ஒளி ஒடுங்குகிறது).

## காட்சி—12

காலம் : காலை

இடம் : வாசுகியின் தனியறை

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி

(வாசுகி கண்கலங்கியவாறு அமர்ந்திருக்கிறாள். வள்ளுவர் விரைந்து வருகிறார்.)

வள் : வாசுகி! வாசுகி! எங்கே இருக்கிறாய்?

(வாசுகி மௌனமாயிருந்து மனங் குமுறுகிறாள். வள்ளுவர் அவள் இருக்குமிடத்தை அடைகிறார்.)

வள் : வாசுகி! என்ன நான் கூப்பிட்டுக் கொண்டு வருவது கேட்கவில்லை. இத்தனை நாள் என் வருகையை எதிர் பார்த்து வாயிலிலேயே காத்திருப்பாயே! இன்று என்ன உனக்கு? உடம்புக்கு ஏதாயினும்...........?

வா : உடம்புக்கு ஒரு கேடுமில்லை. என்னைப்பற்றி உங்களுக்கு ரொம்ப அக்கறை இருப்பதுபோல ஏன் நடிக்கிறீர்கள்?

வள் : நான் நடிக்கிறேனு? என்ன தேவிக்கு இன்று பேச்சு ஒரு தினுசா யிருக்கிறது.

வா : எனக்கு ஒன்றுந் தெரியாது என்று நினைத்து ஏமாற்றப் பார்க்கிறீர்களா?

வள் : என்ன? என்ன?

வா : நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து போகப்போகிறீர்கள் என்ற விஷயம் எனக்குத் தெரியும்.

வள் : இதை யார் உனக்குச் சொன்னது?

வா : யார் சொல்லணும்? என் வளைகளே எனக்கு அறிவித்து விட்டனவே! எல்லோர்க்கும் முன்பாக.

வள் : (தடுமாற்றத்துடன்) வாசுகி!

வா : பசப்பி என்னை மயக்கப் பார்க்காதீர்கள். நான் ஏமாற மாட்டேன். நீங்கள் இன்று என்னை விட்டுப் பிரிந்து அரசருடன் போகப்போகிறீர்களா? இல்லையா? நான் கேள்விப்பட்ட இச்செய்தி உண்மைதானே?

வள் : (மெல்ல) ஆமாம். வாசுகி!

வா : நீங்கள் என்னைவிட்டுப் பிரிந்து போகப்போகிறீர் கள் என அறிந்ததுமே, என் கரங்கள் மெலிந்துவிட்டன. கடகமும் வளைகளும் கழலத் தொடங்கி விட்டன.

வள் : மன்னர் ஒரு போர்மேல் செல்கிருர். மெய்க்காப்பான ருகிய நான் இச்சமயம் அவருடன் போகாம லிருக்க முடியுமா?

வா : ஏன்? வேறு யாரும் இல்லையா அரசருடன் போக? திருமணமாகிச் சரியாகப் பத்து நாட்கள்கூட ஆகவில்லை. நீங்கள்தான் அகப்பட்டீர்களா? வேறு யாருக்கு இல்லாவிட்டாலும் அரசருக்கு யோசனை இருக்க வேண்டாம்? தலைமையமைச்சருக்குப் புத்தி எங்கே போச்சு?

வள் : தேவிக்கு என்ன இவ்வளவு கோபம் எல்லோர் மீதும்? தந்தையைக்கூட அயலார் போலக் கண்டிக்கமுற்பட்டு விட்டாயே!

வா : நீங்கள் எல்லாருஞ் சேர்ந்து செய்துள்ள அசட்டுக் காரியத்துக்குக் கோபப்படாமல் கொஞ்சுவதும் போல.

வள் : கடமை என்று ஒன்று இருப்பதை மறந்து விட்டாயே நீ? வாசுகி!

வா : இந்த ஆண்கள் செய்கிற தப்பிலித்தனங்களை மறைத்துத் தப்பித்துக்கொள்ள உதவுவதற்கு ஒரு நல்ல வார்த்தை கிடைத்திருக்கு, கடமையென்று. மனைவி மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் நீங்கள் சொல்கிற கடமையில் சேர்த்தியில்லையே!

வா : வீட்டுக் கடமைக்கும் நாட்டுக் கடமைக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது வாசுகி, எல்லாம் ஒரே கடமையாய் விடமுடியுமா?

வா : என்ன கடமையோ? போங்கள். என்னைக் கரம் பிடித்த போது, 'உன்னைப் பிரியேன்; பிரிந்தால் ஆற்றமாட்டேன்' என்று சொல்லி அஞ்சல் அளித்த நீங்களே அடியோடு மறந்து இப்படிப் பேசினல் நான் எங்கே புகல் போவது?

வள் : வாசுகி! நான் சொல்வதைக் கேள். இது பிரிவேயில்லை. இரண்டே நாள்தான். போன காரியம் முடிந்தவுடனே சிறிதுந் தாமதியாமல் திரும்பிவிடுவோம்.

வா : பிரிந்து போகிற ஆடவர்கள் மனைவிமாரிடம் விடை பெறுகிறபோது இப்படித்தான் சொல்வார்கள் என்று பிற பெண்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோல.........

வள் : வாசுகி! யோசித்துப் பார்! உனக்கு மட்டுந்தான் பிரிவுத்துன்பம் இருக்குமா? எனக்கு இருக்காது என்று உன் எண்ணமா?

வா : அது என்னவோ! எனக்குத் தெரியாது. நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து போகவில்லை என்றால் அச்சமாச் சாரத்தை என்னிடம் சொல்லுங்கள். அப்படியில்லாமல் பிரிந்துபோவதாயிருந்தால் நீங்கள் போனபின்பும் உயிர் பிரியாமல் வாழ்ந்து கொண்டு இருப்பவளிடம் உங்கள் கொடிய வருகை குறித்துச் சொல்லுங்கள்.

(வாசுகி முகத்தை மூடிக்கொண்டு பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொள்ள முயல்கிறாள். இவளைத் தேற்றவே முடியாது என்று தெரிந்ததும் வள்ளுவர் சிந்தனை யுடன் மெல்ல வெளியே செல்கிறார். காலடி யோசை கேட்டுக் கண் திறந்து பார்த்த வாசுகி தன்கணவன் தன்னை விட்டுப் போகி றார் என்று உணர்ந்ததும், துணுக்குறு கிறாள்.)

வா : நாதா! நாதா! இங்கே பாருங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போங்கள்.

வள் : (திரும்பிப் பார்த்து) என்ன?

[வாசுகியை நோக்கித் திரும்பி வருகிறார்.]

வா : இப்போதுதான் புரிகிறது, நாதா! நான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேனென்று. என் பிழையைப் பொறுத்தருளுங்கள்.

வள் : நீ ஒரு பிழையும் புரியவில்லையே! வாசுகி!

வா : மிகப் பெரிய பொறுப்பை மேற்கொண்டு கடமை புரியப் போகும் உங்களைத் தடுத்து நிறுத்த முயன்றது மன்னிக்க முடியாத பெருங் குற்றமென்று உணர்ந்து விட்டேன், நாதா!

வள் : உன் மனத்தைப் போட்டு உலப்பிக் கொள்ளாதே! வாசுகி! நீ எனக்கு மகிழ்வோடு விடை கொடுத்து அனுப்பி வை.

வா : சற்று இருங்கள், நாதா! இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்.

(விரைந்து உள் செல்கிருள். வள்ளுவர் வியப்புடன் பார்க்கிருர்.)

வா : (கரத்தில் ஆரத்தி திகழ வந்து) நாதா! இப்படிக் கிழக்கே பார்த்து நில்லுங்கள்.

வள் : நிற்கிறேன். வாசுகி! இனி நீ நில் என்ருல் நிற்பதும் போ என்ருல் போவதுந் தவிர எனக்கு வேறு வழியில்லை.

(நகையாடுகிருர்.)

வா : (ஆரத்தியை மும்முறை சுற்றிப் பின் கணவரின் நெற்றியில் பொட்டிட்டு) சென்று வாருங்கள்; நாதா! வென்று வாருங்கள்.

(காலில் விழுந்து வணங்குகிருள். வள்ளுவர் வாசுகியின் கூந்தலை அன்புடன் தடவி விட்டு வாழ்த்துகிருர்.)

வள் : போய் வருகிறேன், வாசுகி! விரைவில் திரும்பி விடுவேன்.

வா : (முகமலர்ச்சியுடன்) போய் வாருங்கள்.

(கை கூப்பியவாறே கணவர் கம்பீரமாக நடந்து செல்வதை வாசுகி விம்மிதத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிருள்.)

## காட்சி—13

காலம் : மாலை

இடம் : அரண்மனை வெளிப்புறம்

உறுப்பினர் : வள்ளுவர், படைத்தலைவர், துணை அமைச்சர், புலவர்.

[படைத்தலைவர், துணை அமைச்சர், புலவர் மூவரும் மறைவிடத்தில் நின்று ரகசியமாய் பேசிச் சதித் திட்டம் வகுக்கின்றனர்.]

படைத்தலைவர் : (மீசை துடிதுடிக்க) அந்த வள்ளுவப் பயலுக்கு என்ன திமிர் பார்த்தீர்களா? நம்மையெல்லாம் எடுத்தெறிந்து பேசிவிட்டானே!

துணை அமைச்சர் : மந்திராலோசனை கூட்டத்தில் அந்த அடைப்பைக்காரனின் ஆணவப் பேச்சுதானே அரசன் காதில் தேனாக இனிக்கிறது ?

புலவர் : அந்த ஓட்டைச் சாண் பயல் என்ன உளறினாலும் அரசன் அதை வேத வாக்காக அல்லவா எடுத்துக் கொள்கிறான்?

[இச்சமயத்தில் வள்ளுவர் அவ்வழியாக வருகிறார். செடி கொடி மறைவில் யாரோ சிலர் தம்மைப்பற்றிப் பேசுவதைக் கேட்டுத் திகைத்து நின்று விடுகிறார்.]

ப. த : அவன் எவ்வளவு சீக்கிரம் செல்வாக்குப் பெற்று விட்டான்; பார்த்தீர்களா?

து. அ : அவன் எந்த வேளையில் கருமத்தலைவன் ஆனானோ அதிலிருந்தே நாமெல்லாம் செல்லாக் காசாகி விட்டோம்.

பு : அவன் இனிக்க இனிக்கப் பேசி எல்லோரையும் ஏமாற்றித் தன் வசப்படுத்தி விடுகிறான். ஐயா!

ப. த : அரசாங்க நிர்வாக விஷயத்தில் மட்டுமல்லாமல் அமர்க்கள முறைபற்றிக் கூட அவன் தலையிட்டு இராஜதந்திரத்தில் தேர்ந்தவன் போல யோசனை சொல்லத் தொடங்கிவிடுகிறானே!

து. அ : அரசியல் சாத்திரத்தையே கரைத்துக் குடித்துவிட்டதாக அவனுக்கு நினைப்பு.

பு : தான் பிரகஸ்பதியின் மறு அவதாரம் என்று அவன் எண்ணிக்கொண்டு இருக்கிறான் என்று சொல்லுங்கள்.

[வள்ளுவர் இவர்களின் உரையாடலைக் கேட்டு வேதனைப்படுகிறார். பிறர் பேசுவதை ஒற்றுக் கேட்பது உசிதமல்ல என்று எண்ணி அவர் அவ்விடத்தை விட்டு அகல முயலுகிறார். ஆனால், படைத்தலைவன் தொடர்ந்து பேசத்தொடங்கிய பேச்சு அவரை அப்படியே நிறுத்திவிடுகிறது.]

ப. த : இந்நிலைமையை இப்படியே வளரவிட்டுக் கொண்டு போகக் கூடாது. இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும்.

து. அ : இவனுக்கும் ஒரு முடிவு கட்டி விடவேண்டும். முதலில் அதற்கு ஒரு வழி செய்யுங்கள்.

பு : அது அவ்வளவு எளிதல்லவே! அமைச்சர் ஐயா! அரசர் தலைமை அமைச்சர் மட்டுமல்லாமல் ஐம்பேராயத்தார்கள் முதலியோருமல்லவா அவன்மீது தங்கள் உயிரையே வைத்திருக்கிறார்கள்? அவனுக்கு ஒன்று ஏற்பட்டதென்றால் அதற்குக் காரணமானவர்களை அவர்கள் எளிதில் விட்டுவிட மாட்டார்களே!

ப. த : அதையும்தான் பார்த்து விடுவோமே! என் வாள் முனையின் முன் எப்பேர்ப்பட்டவர்களும் மண்டியிட்டே ஆக வேண்டும். நீங்கள் என்னவோ தொடை நடுங்குகிறீர்களே? புலவரய்யா!

து. அ: பாவம்! புலவருக்கு வாளின் பளபளப்பை வர்ணிக்கத் தான் தெரியும். அதன் கூரிய முனை எதிரிகளின் நெஞ்சைத் துளைத்து உயிர் துடிப்பதை அவர் கண்டதில்லையே! போர் என்றால்தான் அவர் அடுக்களைக்குள் போய்ப் பதுங்கிவிடுகிறாரே!

பு: (ஏளனமாக) அமைச்சரே! நீர்மட்டும் களம் பல கண்டவரோ? போர் என்றால் படைத்தலைவருக்கு முன் வள்ளுவனல்லவா அரசனுடன் புறப்படுகிறான்? நீங்கள் சாக்குப் போக்குச் சொல்லிவிட்டுப் பெண்டாட்டியின் முந்தானைக்குப் பின் ஒளிந்து கொள்கிறீர்களே!

ப. த: உங்களுக்குள் ஏன் ஐயா, வீண் வாதம்? அந்த அடைப்பைக்காரனை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.

[வள்ளுவர் அதற்கு மேலும் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்க விரும்பாமல் அவ்விடத்தை விட்டு விரைந்துசெல்கிறார்.]

## காட்சி—14

காலம்: முன்னிரவு

இடம்: நகர்ப்புறம்

உறுப்பினர்: வள்ளுவர், படைத்தலைவர், வீரர் சிலர்.

(வள்ளுவர் சிந்தனையில் ஆழ்ந்தவாறு மெல்ல வந்து கொண்டிருக்கிறார். வீரர் இருவர் வேண்டுமென்றே அவர்மீது மோதிக் கொண்டு மேலே செல்ல முயல்கின்றனர்.)

வள்: (நிமிர்ந்து நோக்கி) என்ன ஐயா! எதிரே ஆள் வருவது கூடத் தெரியாமல் மோதிக் கொண்டு போகிறீர்களே?

வீர. 1: நாங்களா இடித்துக்கொண்டு போகிறோம்? நீரல்லவா எங்கள் மீது வந்து விழுந்து வம்பை விலைக்கு வாங்கப் பார்க்கிறீர்?

வீர. 2: ஐயாவுக்குக் கண் பிடரியில் இருக்கிறுப் போலிருக்கு?

(மற்ற வீரர்கள் ஏளனநகை புரிகின்றனர்.)

வன்: (சுற்று முற்றும் பார்த்து) என்னை வீண் வம்புக்கு இழுக்கவே வேண்டுமென்றே என் மீது மோதிக் கொண்டாற் போலல்லவா தோன்றுகிறது? உங்களுடைய பேச்சையும் சிரிப்பையும் பார்த்தால். ஊம்.

(மீண்டும் கேலிச் சிரிப்பு எழுகிறது.)

வீர. 1: அப்படித்தான் வைத்துக் கொள்ளுமே?

வீர. 2: என்ன செய்யப் போகிறீர்?

வன்: இவ்வளவு விதண்டாவாதம் பேசும் நீங்கள் யாரென்று தெரியவில்லையே இருட்டில்? உள்ளூர்க்காரரா யிருந்தால்...?

வீர. 2: தெரிந்தால் தலையை வாங்கிவிடுவீரோ ?

வன்: என்னை யாரென்று தெரிந்தால் இப்படி யெல்லாம் பேச மாட்டீர்கள் என நினைக்கிறேன்.

வீர. 1 இவர் பெரிய கொம்பர்? யாரென்று தெரிந்தால் அடங்கி யொடுங்கிப் போய் விடுவோம் என்ற நினைப்பு இவருக்கு.

வீர. 2: தெரிந்துதான் வந்து வளைத்திருக்கிறோம் என்று தெரியவில்லை இவருக்கு. பாவம்!

வீர. 1: வசமாக வந்து மாட்டிக்கொண்டிருக்கிறீர்? இன்று உம்மை விடப் போவதில்லை. ஆமாம்.

வீர. 2: சும்மா ஏன் அண்ணேன்! பேசிக் கொண்டிருக்கிறீர். வேறு யாராகினும் வருவதற்கு முன்னே வந்த வேலையை விரைவில் முடிப்பதை விட்டு.

வீர. 1: தருணத்லதைத் தவற விட்டு விடுவேனு? எத்தனை நாளாய்க் காத்துக் கொண்டிருந்தோம், இதுபோன்ற அருமையான சந்தர்ப்பத்திற்கு.

**வள் :** அப்படியானால் நீங்கள்......?

**வீர. 1:** ஆமாம். நாங்கள்......

(வாளை யுருவிக் கொண்டு பாய்கிறான்.)

**வீர. 2 :** வாங்கிக் கொள்ளும், இதை......?

(மற்றொரு பக்கமிருந்து வள்ளுவர் மீது வாளை வீசுகிறான். பொறி தட்டும் நேரத்தில் தம்மைச் சுதாரித்துக் கொண்டு வள்ளுவர் தம் வாளால் இருவர் தாக்குதலையும் லாவகமாகத் தடுக்கிறார்.)

**வள் :** (சிந்தனையோடு) ஓ! சதித்திட்டம் இந்த விதமாக உருவெடுத்து வந்திருக்கிறதா?

(வீரர்கள் வேகமாகப் போரிடுகின்றனர். வள்ளுவர் சிறிது மஞ்சாமல் சாதுரியமாக எதிர்த் தாக்குதல் நடத்தி வெகு விரைவில் எதிரிகளை முறியடிக்கிறார். இதுவரை மறைவிலிருந்து வீரர்களை ஏவி வள்ளுவரைத் தாக்க வைத்து மகிழ்ந்து கொண்டிருந்த படைத் தலைவன் தன் வீரர்கள் வள்ளுவருடைய வாள் வீச்சின் சுழற்சிக்கு முன் தாக்குப் பிடிக்க முடியாமல், தப்பியோட முயல்வதைக் கண்டதும், தானே முன் வந்து வள்ளுவருடன் போரிட முற்படுகிறான்.)

**ப. த :** (குரலை மாற்றி) சோடைகளைச் சோர்ந்தோட வைத்து விட்டோம் என்று தருக்கி நிற்காதீர். என் கை வரிசைக்கு உம்மால் பதில் சொல்ல முடிகிறதா? பாரும்.

(மூர்க்கமாக வாளால் தாக்குகிறான். வள்ளுவர் தம் வீரப் பராக்கிரமத்தால் அதையுஞ் சமாளிக்கிறார்.)

வள் : உங்கள் வீரப்பராக்கிரமத்தை விளம்பரப்படுத்தி வாட் போர் நடத்துவது இருக்கட்டும், ஐயா! முதலில் நீங்கள் யார்? எதற்காக என்னை வழி மறித்து வஞ்சகமாகத் தாக்கு கிறீர்கள்? நான் எந்த வகையில் உங்களுக்கு விரோதி யானேன்? எனக்கு அறிவு தெரிந்த நாளிலிருந்து நான் யாருக்கும் ஒரு தீங்குஞ் செய்ததில்லையே? ஒருவரையும் பகைவராகக் கருதியதில்லையே? அப்படியிருக்க......

ப. த. : இந்த வாய் வேதாந்தம் உம்மை இந்த ஆபத்தி லிருந்து தப்பிக்க உதவாது. நாங்கள் இதனலெல்லாம் ஏமாற மாட்டோம். எங்கள் வாட்கள் தாம் உம்மிடம் பேசுமே யொழிய வாய் எதுவும் பேசாது.

வள் : அப்படியா? சரி. வாட்களே பேசட்டும்.

(படைத் தலைவன் சுற்றிச் சுற்றி வந்து வள்ளுவரைத் தாக்குகிறன். அவனுடன் வீரர்களும் சேர்ந்து கொள்கின்றனர். வள்ளு வர் வீராவேசத்துடன் போராடி இவர் களுடைய எதிர்ப்பைத் தகர்த்து விடுகிறர். வீரர்கள் படுகாயங்களுடன் பயந்து ஓடு கின்றனர். படைத் தலைவனும் முட்டியிலும் தோளிலும் காயமுற்றுத் திணறுகிறன். வள்ளுவர் இவன் தரித்திருந்த முக மூடி யைக் கிழித்து எறிகிறர். தன்னை இன்னர் என அறிவதற்குள் அவன் சாமர்த்தியமாகத் தப்பியோடுகிறன்.)

வள் : வஞ்சகம் வெட்கியோடுகிறதோ.

(வாளை உறையிலிட்டுச் செல்கிறர்.)

## காட்சி—15

காலம் : இரவு

இடம் : தலைமை அமைச்சர் மாளிகை

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி, தலைமை அமைச்சர்.

த. அ : என்னிடங் கூடச் சொல்லாமல் ஏன் இராயசேகரர் பதவியிலிருந்து திடீரென விலகி விட்டீர்கள்? மாப்பிள்ளை!

வள் : சொந்த ஊருக்குப் போய் அங்கு வாழ்க்கை நடத்த வேண்டும் என்று ஆசையுண்டாகிவிட்டது, மாமா!

த. அ : இங்கும் நீங்கள் தனிக்குடித்தனம் தானே நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள். நாங்கள் கேட்டுக் கொண்டபடி எங்கள் மாளிகையில் கூட நீங்கள் இருவரும் வாசம்செய்து கொண்டிருக்க வில்லையே! நீங்கள் சலிப்படைவதற்குக் காரணம் எதுவுமில்லையே!

வள் : பொதுவாக, எனக்கு அரண்மனை வாசம் அலுத்துப் போய் விட்டது, மாமா! அது கட்டோடு பிடிக்கவில்லை.

த. அ : நீங்கள் பேசும் தோரணையைப் பார்த்தால், உங்களுடைய இந்த மனமாற்றத்திற்கு ஏதோ முக்கிய காரணம் இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது, மாப்பிள்ளை!

வள் : அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, மாமா!

த. அ : (சிந்தனையோடு) அரண்மனையில் இருப்பவர்கள் ஏதாயினும் சொன்னார்களா?

வள் : அப்படி...... (மேலே பேசாமல் தயங்குகிறார்.)

வாசுகி : (குறுக்கிட்டு) நீங்கள் கூறுவது போலத்தான் எனக்கும் தோன்றுகிறது. அப்பா! யாரோ ஏதோ பற்றிப் பேசியிருக்க வேண்டும்.

வள் : நீ ஒன்று வாசுகி!—அதெல்லாம் ஒன்றுமில்லை, மாமா!

தூ. அ : அப்படியொன்றும் இல்லையானால்?

வா : (இடைமறித்து) இப்போதுதான் எனக்கு நினைவுக்கு வருகிறது, அப்பா! தோழி சொன்னாள், படைத்தலைவர்கள் பொறாமை கொண்டு இவரைப் பலவிதமாகப் பழித்துப் பேசுகிறார்கள் என்று. இவர் புரிந்து வரும் அரிய பெரிய செயல்களைக் கண்டு அரசர் அடிக்கடி பாராட்டிப் பரிசு பல வழங்கி வருகிறார் அல்லவா? அது அரசாங் கத்தில் உள்ள அதிகாரிகள் பலரைப் பொச்சரிப்புக் கொள்ள வைத்திருக்க வேண்டும்.

தூ. அ : நீ சொல்வது உண்மைதான், அம்மா! நம் மாப்பிள்ளை மீது பகைமை பாராட்டுபவர்கள் அரண்மனையிலும் வெளி யிலும் பலர் இருக்கிறார்கள் என்பது எனக்கும் தெரியும்.

வா : இவருக்கு ஆகாதவர்கள் மன்னரிடம் கோள் மூட்டலா மல்லவா! ஒரு வேளை மன்னர் இவர்கள் புறங் கூறலைக் கேட்டு......?

தூ. அ : அரசர் யார் பேச்சையும் எடுத்துக் கொள்ளமாட்டார், அம்மா!

வா : (வள்ளுவரை நோக்கி) ஏதாயினும் உங்கள் காதில் விழுந்திருந்தால் சொல்லுங்களேன் அப்பாவிடம். ஏன் மூடி மறைக்கிறீர்கள்?

வள் : நான் யாரைப் பற்றியும் எதுவும் சொல்லத் தயாராக இல்லை. சுயநலமும் சூழ்ச்சிகளும் நிறைந்த இந்த அரசி யலையே நான் அடியோடு வெறுக்கிறேன்.

தூ. அ : இவ்வளவு தூரம் கசப்புணர்ச்சி யுண்டாகிவிட்ட பின்னர் உங்களை வற்புறுத்துவதில் பயனில்லை. அது சரி; மாப்பிள்ளை! சொந்த ஊருக்குப் போய் நீங்கள் என்ன செய் யப்போகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

வள் : அதைப்பற்றி யெல்லாம் நான் யோசிக்காமலா இருப் பேன்? மாமா! உழுதுண்டு வாழும் உழவனைப்போல்

உழைக்க நான் முதலில் விரும்பினேன். ஆனால், அதற்கு நிலத்தையும், ஏர் கலப்பைகளையும், கால் நடைகளையும் தேட வேண்டும். அதைவிட, எளிதாகச் செய்யக்கூடிய வேலை நெசவுத் தொழில். இது தூய்மையானதுங்கூட. இதை மேற்கொள்ள முடிவு செய்திருக்கிறேன். வாசுகியும் எனக்குத் துணையாக இருப்பாள் என்று நம்புகிறேன்.

**வா :** ஓ! நான் ராட்டையைச் சுழற்றி நெசவுக்கு வேண்டிய நூல்களை நூற்றுக் கொடுப்பேன். நீங்கள் செய்யும் எல்லா வேலைகளிலுமே நான் உதவியாக இருப்பேன்; நாதா!

**த. அ :** (வியப்புடன்) என்னம்மா! மாப்பிள்ளைதான் விரக்தியால் ஏதோ சொல்லுகிறார் என்றால், நீ கூட இவருக்கு ஒத்தாற்போல், ஏதேதோ சொல்லத் தொடங்கி விட்டாயே!

**வா :** கணவன் காட்டும் வழியில்தானே மனைவி நடக்கவேண்டும். அப்பா மாப்பிள்ளையின் குணத்தை நீங்கள் நன்கறிந்து தானே வைத்திருக்கிறீர்கள்? அவர் ஒரு விஷயத்தை தீரயோசித்து ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டாரானால் பின் அதை யார் என்ன சொன்னாலும் மாற்றிக் கொள்ளவே மாட்டார். தயவு செய்து நீங்கள் அவரை அவர் விருப்பப்படி போக விடுங்கள்.

**த. அ :** (பெருமூச்செறிந்தவாறு) நீங்கள் இருவரும் ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்கள். இனி நான் என்ன சொன்னாலும் அதனால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. உங்கள் விருப்பம் போல்......

**வா :** வருத்தம் கொள்ளாதீர்கள், அப்பா!

**வள் :** என்னை மன்னித்து விடுங்கள், மாமா! உங்கள் விருப்பத்தை மீறி நடக்க வேண்டிய அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டு விட்டது. எங்களை உளமார வாழ்த்தி அனுப்புங்கள்.

த. அ : எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு எல்லா நலன்களும் நற்பேறுகளும் வழங்க வேண்டும். உங்கள் எதிர்கால வாழ்வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இது என் பிரார்த்தனை.

வள் : நன்றி; மாமா!

(கை கூப்பி வணங்குகிறார்).

வா : (நாத் தழுதழுக்க) அப்பா! போய் வருகிறோம்.
(காலில் விழுந்து வணங்குகிறாள்.)

## களம் 2

## காட்சி—16

காலம் : காலை

இடம் : மயிலாப்பூரில் ஒரு வீதி

உறுப்பினர் : வள்ளுவர், கிள்ளுவன்.

(வீதியில் நடந்து கொண்டிருந்த வள்ளுவர் வரிசையாக இருந்த மச்சுவீடுகளை ஒவ்வொன்றுகக் கவனித்துக் கொண்டே போகிறார். இவரைப் பார்த்துக்கொண்டே கிள்ளுவன் வருகிறான்.)

கிள்ளுவன் : அய்யா ஊருக்குப் புதுசு போலிருக்கு. எங்கிருந்து வருகிறப்போல? யாரைப் பார்க்கணும்?

வள்ளுவர் : (குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்து) என்ன கேட்டாய்? தம்பி!

கிள் : திகைப்பூண்டு மிதிச்சவரைப்போல, திருதிருவென முழிப்பதைப் பார்த்தா ஐயா வெளியூரோ என்று நினைத்தேன்.

வள் : வெளியூர்தான். ஆனால், பூர்வீகம் இதுதான் என் சொந்த ஊர். நான் பிறந்து வளர்ந்த தெல்லாம் இங்கு தான். கொஞ்ச காலம் காஞ்சிபுரம் போயிருந்தேன்.

கிள் : அப்படியா? ஐயா! ரொம்ப சந்தோஷமுங்க. நீங்க இருந்து வந்த ஊரைச் சொன்னீங்களேயொழிய உங்க பேரு என்னன்னு சொல்லலியே?

வள் : என் பேரா? என்னை வள்ளுவன் என்று எல்லோரும் அழைப்பார்கள்.

கிள் : பேர் புதிசா நன்னா இருக்கு.

வள் : தம்பிக்கு இந்த ஊர் தானா?

கிள் : ஆமாங்க......நான் பிறந்ததிலிருந்து இங்கேதான் இருக்கேன். அக்கம் பக்கம் ஊர் கூடத் தெரியாது.

வள் : அப்படியா? தம்பி பேர் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?

கிள் : உங்க பேர் வள்ளுவருன்னு சொன்னீங்கல்லே. என் பேரைக் கிள்ளுவன்னு வச்சிக்குங்களேன்.

வள் : என்ன! நானே வைத்துக் கொள்ளணுமா? பெற்றோர் உனக்குப் பெயர் வைத்திருப்பார்கள் இல்லையா? அது என்ன என்று சொல்லக் கூடாதா?

கிள் : அவங்க என்னமோ பெயர் வைச்சாங்க. அது மறந்து கூடப் போச்சு. ஊரார் என்னை கிறுக்கின்னும் கோமாளின்னும் தொம்ப கூத்தாடின்னும் அவங்கவங்க இஷ்டப் படியெல்லாம் கூப்பிடுறாங்க. இதில் எதை என் பெயருன்னு சொல்றது. அதனாலே, உங்க பேரை வள்ளுவன்னு சொன்னதுமே, அதுக்குப் போட்டியா கிள்ளுவன்னு நானே பேரை வச்சிக்கிட்டேன் இப்போ.

வள் : ரொம்ப தமாஷான ஆளா இருக்கிறயே! தம்பி!

கிள் : அது இருக்கட்டுங்க; ஐயா! நீங்க யாரையோ தேடிக் கிட்டு இருந்தீங்களே! யாரைப் பார்க்கணும்?

வன் : இந்த ஊரிலே ஏலேலசிங்கர் என்ற பெரிய நூல் வியாபாரி இருக்கிறாராமே! அவர் எங்கே இருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா? தம்பி!

கின் : ஓ! தெரியுமே! அவர் இந்த ஊர்லே பெரிய பணக்காரர் ஆச்சே! ஆகாசத்துக்கு உயர்ந்திருக்கும் அவர் மச்சு வீட்டைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாமே செட்டியார் வீடு எதுன்னு.

வன் : எங்கே இருக்கிறதென்று காட்டுகிறாயா? தம்பி!

கின் : ஓ! காட்டறேன். வாங்க. நானும் அங்கே தான் போறேன். அவரு என் எசமானரு.

வன் : அப்படியா! நல்லதாய்ப் போச்சு. வா போகலாம்.

(இருவரும் நடக்கிறார்கள்.)

கின் : செட்டியாரை நீங்க எதுக்காகப் பார்க்கணுமின்னீங்க?

வன் : நான் ஒரு நெசவாளி. எனக்குப் பஞ்சும் நூலும் வேண்டியிருக்கு. அதற்காகத்தான் அவரைப் பார்க்க வந்தேன்.

கின் : அப்போ நீங்களும் என்னைப் போல நெசவாளி தான்னு சொல்லுங்க.

வன் : தம்பியும் நெசவுத் தொழில்தான் செய்கிறதா?

கின் : ஆமாம். செட்டியாருடைய தறியிலே தான் கூலிக்கு நெய்கிறேன்.

(இருவரும் ஏலேலசிங்கர் இல்லத்தின் முன் வருகின்றனர்.)

கின் : இதோ இருக்குங்களே! இதுதான் அந்த வீடு. நான் செட்டியாருக்கு முன்னால் வரக்கூடாதுங்க. நீங்களே போய்ப் பாருங்க.

வன் : சரி; தம்பி! நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போய் விட்டு வா.

(இருவரும் பிரிந்து போகின்றனர்.)

## காட்சி—17

காலம் : காலை

இடம் : ஏலேலசிங்கர் வீடு

உறுப்பினர் : வள்ளுவர், ஏலேல சிங்கர், அவர் மனைவி மரகதம்.

(வள்ளுவர் வாயிலிலிருந்தவாறே உள்ளே நோக்கிக் குரல் கொடுக்கிறார். உள் அறையில் இருந்து பூசை மணி அடிக்கும் ஓசை கேட்கிறது. சாம்பிராணிப் புகை கமழ்ந்து கொண்டிருக்கிறது.)

வள் : ஐயா இருக்கிறார்களா?

ஏலேலசிங்கரின் மனைவி : (கூடத்தில் இருந்து எட்டிப் பார்த்தவாறு) யாரது?

வள் : ஐயாவைப் பார்க்க வந்திருக்கிறேன்.

ஏ : சி : ம : பூசை செய்து கொண்டிருக்கிறாங்க. முடிகிற நேரந்தான். இப்படி வந்து குறிச்சியிலே குந்துங்க.

வள் : ஐயா பூசை முடிந்து வரட்டும். நான் இங்கேயே இருக்கிறேன்.

(விபூதி ருத்திராக்ஷதாரியாய் பூசை அறையில் இருந்து ஏலேலசிங்கர் வெளியே வருகிறார்.)

ஏ : சி : யார் அது மரகதம்!

ஏ : சி : ம : உங்களை யாரோ தேடிக் கொண்டு வந்திருக்காங்க.

ஏ : சி : உட்காரச் சொல்கிறது தானே?

ஏ : சி : ம : சொன்னேன். அவர்தான் இருக்கட்டும் என்றார்.

ஏ : சி : (வெளியே நோக்கி) வாருங்கள் உள்ளே.

வள் : (உள்ளே அடியெடுத்து வைத்தவாறு) வணக்கம், ஐயா!

ஏ : சி : (அமர்த்தலாக அவரை ஏற இறங்கப்பார்த்து) வணக்கம். அமருங்கள் இப்படி. என்ன விஷயமோ?

வள் : நான் இந்த ஊருக்கு வந்து இரண்டு நாளாயிற்று. வாழ்க்கையை இங்கேயே நடத்தலாம் என்றிருக்கிறேன். நெசவுத் தொழிலில் எனக்கு நாட்டம் உண்டு. அதற்கு உங்கள் உதவி......?

ஏ : சி : நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்.

வள் : நான் என் இல்லத்திலேயே சொந்தத் தறி போட்டிருக்கிறேன். இந்த ஊரிலே நீங்கள் தான் பெரிய நூல் வியாபாரி என்று கேள்விப்பட்டேன். நான் நெசவு செய்வதற்கு நீங்கள் நூல் கொடுத்து உதவினால் பேருபகாரமாய் இருக்கும்.

ஏ : சி : (வள்ளுவரைக்கூர்ந்து நோக்கி) சொந்தத் தறி போட்டிருக்கிறீர்களா? ஏன் முதலில் யாரிடமாயினும் கூலிக்கு...

வள் : அது என் இயல்புக்கு ஒத்து வராது. நான் சுதந்திரமாகத் தொழில் செய்ய விரும்புகிறேன்.

ஏ : சி : அப்படியா?

வள் : ஆமாம். ஆள் புதிதாய் இருக்கிறதே! எப்படி நம்பிச் சரக்கைக் கொடுப்பது என்று நீங்கள் யோசிக்கிறாற் போலிருக்கு. நான் மிகவும் நாணயமானவன்...

ஏ : சி : (இடைமறித்து) அதெல்லாம் இல்லை. உங்களைப் பார்த்தாலே கண்ணியமானவர் போல் தான் தோன்றுகிறது. நான் தாராளமாக உங்களுக்குத் தேவையான நூல் கண்டுகளைத் தருகிறேன். அவ்வப்போது மட்டும்...

வள் : தறிபோட்டு நெசவு செய்து சேலை, வேட்டிகளை அறுத்ததும் உங்களிடமே அவற்றைக் கொடுத்து விடுகிறேன். ஒரு விலை போட்டு நீங்கள் நூல் கண்டுக்கு உரியதை எடுத்துக் கொண்டு மீதி பணத்தைக் கொடுங்கள்.

ஏ : சி : மிக்க மகிழ்ச்சி. அது போதும் எனக்கு. உங்களை ஆயிரத்துக்கும் நம்புவேன்.

வள் : நன்றி, ஐயா! நாளைக்கு வந்து எனக்குத் தேவையான நூல் கண்டுகளை வாங்கிச் செல்வேன்.

ஏ : சி : ஏன் இன்றைக்கே வேண்டுமானாலும் வாங்கிக் கொண்டு போகலாம்.

வள் : இருக்கட்டும், ஐயா! இன்று உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு போகத்தான் வந்தேன். நான் அடுத்த வீதியில்தான் இருக்கிறேன். விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

(ஏலேல சிங்கரும் வணக்கம் செலுத்திய வாறு எழுந்து நின்று வழி அனுப்பி வைக்கிறார்.)

## காட்சி—18

காலம் ; முற்பகல்

இடம் : வள்ளுவர் இல்லம்

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி.

[வாசுகி அரிசியைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறாள். வள்ளுவர் வெளியிலிருந்து வருகிறார்.]

வள் : வாசுகி! வாசுகி!

வா : (நிமிர்ந்து பார்த்து) வாருங்கள்.

வள் : என்ன! பலத்த யோசனையில் இருக்கிறாப்போல இருக்கிறதே!

வா : அப்படியொன்றும் இல்லையே! அரிசியில் இருக்கும் கல்லைப் பொறுக்கிக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்ததைக் கவனிக்கவில்லை.

வள் : (புன்முறுவலுடன்) காலடியோசை கேட்டதுமே பதைத்து எழுந்து முகமலர்ச்சியுடன் வரவேற்கும் வாசுகியா இன்று இப்படிப் பேசுவது? அரிசியில் இருக்கும் கல்லைப் பொறுக்குவதற்கு இவ்வளவு ஆழ்ந்த கவனம் வேண்டுமா! என்ன?

வா : (விதிர் விதிர்ப்புடன்) இல்லீங்க. நீங்கள் வருவது தெரியாமல்தான் மெய்மறந்து இருந்துவிட்டேன். நான் செய்தது தப்புதான். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

வள் : (நகைத்து) அடி, பைத்தியமே! நான் என்ன சொல்ல வந்தேன். நீ என்ன நினைத்துக் கொண்டு இப்படிப் பதறுகிறாய்?

வா : நீங்கள் என்ன சொல்ல வந்தீர்கள்? தெரியவில்லையே!

வள் : உனக்குத் தாய்வீட்டு ஞாபகம் வந்துவிட்டது என்பதை உன் மெய்மறந்த நிலை எனக்கு அறிவித்துவிட்டது. அதைச் சுட்டிக்காட்டி உன்னைக் கேலி செய்ய வந்தால், நீ......?

வா : நீங்கள் நினைப்பதுபோல் ஒன்றுமில்லீங்க.

வள் : நீ ஏன் மறைக்கிறாய்? இப்படி மறைக்க வேண்டிய அளவுக்கு அது ஒன்றும் குற்றமில்லை. இயற்கையாகப் பெண்களுக்கு இருக்கக்கூடிய தாபம்தான்.

வா : என்ன! நீங்கள் வரும்போதே ஏதேதோ பேசத் தொடங்கிவிட்டீர்களே! முதலில் வெளியே போய் வந்ததுப்புத் தீர முகம் அலம்பிக்கொண்டு வாருங்கள்.

[செம்பை எடுத்து அவர் கையில் கொடுக்கிருள். வள்ளுவர் மேல்துண்டை எடுத்து கொடியில் போட்டுவிட்டுக் கைகால்களை அலம்பிக் கொண்டு வருகிருர்.]

வள் : (துண்டிஞல் முகத்தைத் துடைத்து கொண்டே) நான் வரும் வழியில் ஒரு காட்சியைப் பார்த்தேன். ஆடவன் ஒருவன் தாய் வீட்டிலிருக்கும் மனைவியைத் தன்னுடன் வருமாறு கூப்பிடுகிருன். அவளோ நான் இங்கு வந்து நாலைந்து நாட்கள்கூட ஆகவில்லை. இதற்குள் வந்து கூப்பிடுகிறீர்களே. இன்னும் ஒரு வாரமாகிலும் இருந்து விட்டுத்தான் வருவேன் என்று அடம் பிடிக்கிருள். அக்கம் பக்கத்தார் கூட்டம் கூடி அவர்களைச் சமாதானம் செய்யும் அளவுக்கு கணவன் மனைவி தகராறு ஏற்பட்டுவிட்டது. இப்படி ஒருவேளை சோற்றுக்கே வக்கற்ற நிலையில் இருக்கும் ஏழைப் பெண்களே தாய் வீட்டுப் பாசத்தை மறக்க மாட்டேன் என்கிருர்களென்ருல் ராஜபோகத்தில் இருந்து வாழ்ந்து வந்த உனக்குப் பெற்ருேரைப் பிரிந்து வந்து பல நாளாகியும் இன்னும் ஒரு முறைகூட திரும்பிப்போய்ப் பார்க்காமல் இருப்பது எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். எனக்கு ஒரே கழிவிரக்கமாய் விட்டது. அதஞல்தான், நீ தலைகுனிந்து சிந்தனையில் இருப்பதைப் பார்த்ததும் உனக்குப் பெற்ருேரின் ஞாபகம் வந்திருக்கும் என்று எண்ணினேன்.

[வாசுகி கூடத்தில் மணையை எடுத்துப் போட்டு உண்கலத்தை அதன் முன் வைத்து முதலில் குவளையில் தண்ணீரை யும் பின் சோறு கறிகளையும் வைக்கிருள்.]

வள் : (மணையில் வந்து அமர்ந்தவாறே) வாசுகி! உனக்குப் பெற்ருேரைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் சொல். நான் அழைத்துக் கொண்டு போகிறேன்.

வா : இப்போது அதற்கென்னங்க அவசரம்? இன்னும் நம் குடித்தனம் சரியாக அமையவில்லை. நம் நெசவுத்தொழில்

நன்றாக நடக்கட்டும். பிறகு சாவகாசமாய்ப் போகலாம். நூலுக்குச் சிட்டம் போட்டுக் கொடுப்பது யார்? தறியில் பாவு ஓட்டுவது யார்? நான் போய் விட்டால்......?

வள் : அதற்குப்பார்த்தால் நீ எப்போதுமே உன் பெற்றோரைப் பார்க்க முடியாது.

[இச்சமயம் கிள்ளுவன் அங்கு வருகிறான்.]

கிள் : ஐயாவே சொல்றப்ப நீங்க ஏம்மா வாணுமிங்கிறீங்க? ஊரிலே இருக்கிற பொண்க என்னடான்னு ஒரு நா ஆம்படையான் வீட்டிலிருந்தா பத்துநா ஆத்தாள் வீட்டில் இருக்கேன்றாங்க. என் பொஞ்சாதி பூதகி கூட இல்லே....

வள் : (நகைத்து) கேட்டாயா? வாசுகி!

[வாசுகி நாணத்தால் மௌனமாயிருக்கிறாள்.]

கிள் : நாமபோயிட்டா ஐயாவை யாரு கவனிச்சிக்கறதுன்னு யோசனை பண்றீங்களா? பக்கத்து வீட்டுக்காரரு நாங்க பார்த்துக்க மாட்டோமா?

வா : பார்த்துக்கொள்வீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும்......

வள் : வாசுகி! என்னைப் பற்றிச் சிந்தனை செய்ய வேண்டாம். நீ கொஞ்ச நாள் உன் வீட்டுக்குப் போய்த்தான் வரணும்.

வா : எதுங்க என் வீடு?

வள் : ஏன்? நீ பிறந்ததுதான்.

வா : அது நான் உங்களை மணமாலை சூட்டிக்கொள்ளும் முன் வரைதான். நான் எப்போது உங்களைக் கரம் பிடித்து உங்களுடன் வந்து விட்டேனோ அப்போதிருந்தே நீங்கள் இருக்குமிடந்தான் என் வீடு. தெரிந்து கொள்ளுங்கள்.

கிள் : அம்மா! நீங்க ஆயிரத்திலே ஒன்னுயிருக்கிற அபூர்வப் பிறவியம்மா! என் பொஞ்சாதி என்ன சொல்லு தெரி

யுமா? கண்ணாலங் கட்டி எத்தனையோ வருஷமாயும் தாய் வீடுதான் அவ சொந்த வீடெங்கிருள். எங்க வீடு அவ ளுக்கு புடிக்கவேயில்லையாம்.

[வள்ளுவர் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிருர்.]

கின் : நான் வந்த வழிங்க.

வா : தெரியாத்தனம், போகப் போகத் திருந்திவிடுவாள்.

[பக்கத்து வீட்டிலிருந்து பூதகி கின்ளுவனைக் கூப்பிடுகிருள்.]

பூ : (கத்தி) ஏ ஐயா! என்ன செய்யறே அங்கே இன்னும்? போறு போன இடம்; வந்தா வந்த இடந்தாறு?

வள் : நீ போய் வா தம்பி! உன் பெண்டாட்டி கூப்பிடுகிருள்

கின் : பொஞ்சாதியா அவள்? பூதம். பூதம் கூவுது. நான் வரேனுங்க.

[போகிருன்.]

வள் : அடேயப்பா! பிறந்ததிலிருந்து துன்பந் துயரம் அறியாது பட்டு மெத்தையில் தவழ்ந்து பொன் குவளையில் பால் அருந்தி பன்னீரால் வாய் கொப்பளித்து உன் குறிப்பறிந்து குற்றேவல் புரியப் பணியாட்கள் பலர் இருக்கச் சொகுசாக வாழ்க்கை நடத்திச் சுகபோகத்தில் ஆழ்ந்திருந்த வாசுகியா இப்படிப் பேசுவது? ஈரம் எப்போதுமிருக்கும் மண் குடிசை, வானத்தில் மின்னும் நட்சத்திரங்களின் ஒளிகூட உள்ளே புகும்படியான பொத்தல் கூரை; இதில் இருந்து ஒரு வேட்டி, அல்லது சீலைநெய்து அறுத்து எடுத்துக் கொண்டு போனல்தான் அடுத்த வேளைக்கு உணவு கிடைக்கும் என்று இருக்கும் இந்த எளிய வாழ்க்கையை, வாசுகி! உன் இதயம் உண்மையில் விரும்புகிறதா? எனக்கு வியப்பாக இருக்கிறது.

வா : என்ன அப்படி சொல்கிறீர்களே! நீங்கள் சிறிது முன் வர்ணித்த அரண்மனை வாழ்க்கை இருக்கிறதே! அது

தான் எனக்கு ஆண்டவன் அமைத்துக் கொடுத்த இயற்கையான வாழ்க்கை என்று இறுமாந்து இருந்தேன். இதை நான் ஒளிக்கவில்லை. ஆனால், உங்கள் வாழ்க்கைத்துணைவியான பின்னர் அரசவாழ்வும் சரி, ஏழை வாழ்வும் சரி; இரண்டும் எனக்குச்சமமாகத்தான் தோன்றுகிறது. இன்னுங் கேட்டால் இந்த எளிய வாழ்க்கை பேரின்ப வாழ்க்கையாக எனக்குத் தோன்றுகிறது.

வள் : வாசுகி! உன்னைப்பற்றி ஏதேதோ எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்த நிமிடத்தோடு என் கவலை விட்டது. நீ மிகவும் மனப்பக்குவம் அடைந்து விட்டாய். இனி நம் இல் வாழ்க்கை இன்ப மயந்தான்.

வா : சரி; சரி; சாப்பிடுங்கள். சோறு ஆறி விடப்போகிறது.

வள் : (புன்னகையுடன்)சோறு படைத்ததெல்லாம் சரிதான். ஒன்றை மறந்து விட்டாயே!

வா : (திடுக்கிட்டு) என்ன?

வள் : என்னவென்று நான் சொல்லமாட்டேன். கவனித்துப் பார். நீயாகவே தெரிந்து கொள்வாய்.

வா : (சில விநாடிகள் யோசித்து) ஓ!..... இத்தனை நாட்கள் பழகியும் இன்று எப்படியோ மறந்து விட்டது. (உள்ளே சென்று ஒரு சிறு கிண்ணத்தில் தண்ணீரும் ஊசி ஒன்றுங் கொண்டு வந்து உண்கலத்துக்கு எதிரில் வைக்கிறாள்.)

வா : பழக்கத்துக்குக் கொண்டு வந்தும் நினைவில் பதிய மாட்டேன் என்கிறது. மன்னித்துக் கொள்ளுங்கள், நாதா!

வள் : இது உன் தவறு இல்லை. இதனுடைய முக்கியத்துவத்தை உணரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அதுதான். அதை விட்டுத்தள்ளு. கொஞ்சம் கறி கூட்டு இருந்தால் போடு. கீரை மசியல் இன்று நன்றாக இருக்கு.

(வாசுகி பரிமாறுகிறாள்.)

## காட்சி—19

காலம் : முற்பகல்

இடம் : கிள்ளுவன் வீடு

உறுப்பினர் : கிள்ளுவன், பூதகி

(கிள்ளுவன் பயந்தபடியே உள்ளே நுழைகிருன். அவனைப் பார்த்துப் பூதகி கத்துகிருள்.)

பூதகி : (உரத்த குரலில்) அங்கே என்ன உனக்கு வேலே? உனக்கு எத்தினி வாட்டி சொல்லியிருக்கேன், அவங்க வூட்டுக்கு போவாதேன்னு.

கிள் : ஏண்டி! போவ வாணுமெங்கிறே? நல்லவங்க பழக்க மிருந்தா நமக்கு நல்லதுடி!

பூதகி : உனக்கு அவங்க ஒசத்தி! எனக்கு அவங்க சங்காத் தமே வாணுங்கறேன்.

கிள் : ஏனும்?

பூதகி : வாசுகியிருக்காளே! அவ மகா நெட்டுக்காரி. நா வலியப் போய்ப் பேசிணலும் திரும்பிப் பார்த்துப் பேச மாட்டா. நாம பத்து வார்த்தை பேசிணு அவ ஒரு சொல் சொல்வா. வாயைத் திறந்தா முத்து சிந்திடுமா?

கிள் : அவ பெரிய மந்திரி பொண்ணுடி! அப்படித்தான் இருப்பா. ஆனு, நல்லவ.

பூதகி : மந்திரி மகளாருந்தா அவவரைக்கும். நமக்கென்ன! நாகூட மேட்டுக்குடி மக தான். தெரிஞ்சிக்கட்டும்.

கிள் : (வாயை மூடிக்கொண்டு சிரித்து) ஊம், நீ மேட்டுக்குடி மகளென்றது எனக்கு இதுவரை தெரியாதே! பெருங்களத் தூர் கொல்லே மேட்டுக் கந்தனின் அருமந்தப் பொண் ணுன்னு தான்......

பூதகி : என்னய்யா! கிண்டலா பேசறே? சுண்டலாக்கிடு வேன். ஜாக்கிரதை.

**கிள் :** (கன்னத்தில் அடித்துக்கொண்டு) புத்தி; புத்தி; ஆத்தா! நான் இனிமே இப்பிடி பேசமாட்டேன். தமாஷா......

**பூதகி :** என்னய்யா! தமாஷ் என் கிட்டே?

**கிள் :** (வாயைக் கைகளால் பொத்தி) இல்லே; இல்லே.

**பூதகி :** (முகத்தை வேறு பக்கந் திருப்பிக் கலுக்கென்று சிரித்து) மச்சான்! தெரிஞ்சுக்கோ, இனிமே நீ பக்கத்து வூட்டுக்குப் போவக் கூடாது. அந்த ராங்கிக்காரிங்க சக வாசமே நமக்கு வாணும். அவங்களுக்கு நாம எந்த விதத்திலும் இளைச்சவங்க இல்லேன்னு காட்டணும். ஆமாம்.

**கிள் :** நீ கீறின கோட்டை நா எப்பவாச்சும் தாண்டிப் போயிருக்கேனு?

**பூதகி :** போவ உனக்கு அவ்வளவு தைரியமிருக்கா?

**கிள் :** (நமட்டுச் சிரிப்பு சிரித்தவாறு) நா வேணும்னு அந்த மனுஷியைப் போய்க் கேட்கட்டுமா? ஏம்மே! எங்க பூதகி வந்து பேசினு முகங் கொடுத்துப் பேசமாட்டேங் கிறே? நீ என்ன பெரிய மந்திரி பொண்ணோ? இருந்தா இருந்துட்டுப் போயேன் உன் வரைக்கும். எங்களுக்கு என்னன்னு கேட்டுட்டு வரட்டுமா?

**பூதகி :** எதுக்காவவும் நீ போவ வாணும் அங்கே நீ எதனு கேட்கப் போவ அந்த மண்டைக்கனம் பிடித்தவ ஆம் படையான் உங்க எசமானண்டே கோள் மூட்டப் போருன். உங்க எசமான்தான் அண்டை வீட்டுக்கார னண்டை அடிக்கடி வந்து அப்படி இழையருரே! நாம எச்சரிக்கையா யிருக்கணும்.

**கிள் :** ஆமாம். நீ நல்லா ஞாபகப்படுத்தினே.

## காட்சி—20

காலம் : நண்பகல்

இடம் : வள்ளுவர் இல்லம்

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி, கொங்கணவ முனிவர், கிள்ளுவன், பூதகி.

(வள்ளுவர் உணவு உண்டுகொண்டு இருக்கிறார். வாசுகி அருகமர்ந்து அறுசுவைக் கறி வகைகளைச் சிறிது சிறிதாகப் பரிமாறிக் கொண்டிருக்கிறாள். கொங்கணவ முனிவர் அவர்கள் வீடு நோக்கி வருகிறார். அதற்கு முன் கிள்ளுவனின் வீட்டைக் கடக்கிறார்.)

**கிள் :** பூதகி! எனக்குப் பசிக்குதுன்னு எத்தனை தடவை சொல்றேன். சோறு போடமாட்டேன்றியே?

**பூதகி :** என்னய்யா! அப்படி அவசரம்? கும்பி கூவுதோ?

**கிள் :** என் வயிறு கெஞ்சுதுன்னு ஓடி வந்து சோறு போடவா போறே? நான் வேலைக்குப் போவணுமில்லே. அதுக்காவ வாச்சும்............

**பூதகி :** ஆமாமாம்; அதை மறந்துட்டேன். தறிக்குப் போனாத் தானே காசு கிடைக்கும்; வயிற்றுக்குச் சோறுங்கிடைக்கும்?.........கறியெல்லாம் முன்னியே ஆயிட்டுது. சோற்றைத்தான் உலையிலிருந்து இறக்கணும். இதோ ஆயிட்டுது, இரு.

**கிள் :** (அலுப்போடு) நீ கும்பம் கொட்டறதுக்குள்ள பொழுது சாய்ஞ்சிடும். (வெளியே போகிறான். அதே சமயம் கொங்கணவர் அவன் வீட்டைப் பார்த்த வாறே கடக்கிறார்.)

**கிள் :** (எரிந்து விழுந்து) போய்யா; பரதேசி! வீட்டிலே இருக்கறவங்களுக்கே சோறு கிடைக்கல்லே. நீ வேற வந்துட்டியா பங்குக்கு? போ! போ!

(இவன் போடும் கூச்சலைக் கவனிக்காமல் கொங்கணவர் போகிறார். கிள்ளுவன் அவர் பின்னாலே பார்த்துஏளனமாகச் சிரிக்கிறான். இச்சமயம் கிள்ளுவன் வீட்டுக்கும் வள்ளுவர் வீட்டுக்கும் இடையில் இருந்த வேப்ப மரக்கிளையில் உட்கார்ந்திருந்த ஒரு கொக்கு அவர் மீது எச்சம் இடுகிறது. அவர் கோபத்தோடு மேலே நிமிர்ந்து பார்க்கிறார். அவருடைய விழிக்கனலால் கொக்கு எரிந்து சாம்பலாகி விழுகிறது. கிள்ளுவன் இக் காட்சியைப் பார்த்து அதிசயிக்கிறான்.)

**கிள்:** ஆத்தாடி! இந்தத் தாடி சாமியாருக்குத்தான் எம்புட்டு சக்தி இருக்கு? பூதகி! பூதகி! இங்கே வந்து பாரேன். யாரோ ஒரு சாமியார் மரத்து மேலிருந்த கொக்கை கண்ணாலேயே எரிச்சுட்டாரு. புராணத்திலே சிவபெருமான் திரிபுரத்தைச் சிரிச்சே எரிச்சிட்டாருன்னு சொல்றாங்களே! அது மாதிரி.

**பூதகி:** (உள்ளிருந்தவாறே) ஏன்யா! அப்படிக் கத்தறே?

**கிள்:** ஊம். கொடுத்து வச்சிருந்தா தானே இந்த மாதிரி காட்சியை யெல்லாம் நீ பார்க்க முடியும்?

[கொங்கணவர் எரிந்து சாம்பலாய்ப் போன கொக்கின் எலும்புக் கூட்டை ஆணவமாகப் பார்த்தவாறே திருவள்ளுவர் வீட்டின் முன்னே போகிறார்.]

**கொ:** அம்மா! பிச்சை! தாயே! பிச்சை!

[வாசுகியின் செவியில் முனிவரின் குரல் விழுந்தும் கணவருக்குப் பரிமாறுவதை இடையில் நிறுத்தி விட்டு வரமுடியாமல் இருக்கிறாள்.]

**கொ:** (உரத்த குரலில்) தாயே! பிச்சை!

**வா:** (உரக்க) கொஞ்சம் இருங்கள், ஐயா! கொண்டு வருகிறேன்.

**கொ:** (கோபக் குரலில்) நீங்கள் வரும் வரையில் பசி காத்திருக்குமா? ஒரு பிடி சோறு கொண்டு வந்து போடுவதற்கு எவ்வளவு நேரமாகும்? காக்க வைப்பதிலே ஒரு கௌரவமா?

[வள்ளுவருக்குப் பரிமாறி முடிந்ததும் வாசுகி ஒரு தட்டத்தில் சோறு கறிகளை வைத்து எடுத்துக் கொண்டு அவசரமாக முனிவர் இருக்கும் இடம் வருகிருள். வள்ளுவர் புன்முறுவலோடு மனைவியைப் பின் தொடருகிருர்.]

**கொ:** அம்மா! சோறுண்டா இல்லையா? இல்லைன்னு சொன்ருல் போய் விடுகிறேன்.

**கிள்:** (கொங்கணவரை ஏளனமாக நோக்கி) அட! இந்தச் சாமியாருக்கு எவ்வளவு திமிருடா? எடுக்கிறது பிச்சை. அதுலே அதிகாரம் வேறையா? (ஏளனமாக நகைக்கிருன்.)

**வா:** (வேகமாக வந்தவாறே) இதோ வந்து விட்டேன்; இருங்க, ஐயா!

**கொ:** (கோபக் கனலோடு ஏறிட்டுப் பார்த்து) என்ன! கொண்டவனைக் கவனித்துக் கொண்டிருந்தாற் போலிருக்கு.

**வா:** (சீற்றத்தோடு) கொண்டவனைக் கவனிக்காமல் மற்றவர்களையா முதலில் கவனிப்பார்கள்? கணவனுக்குப் பிறகு தான் கடவுள் கூட.

**கொ:** (ஆணவத் தொனியிலே) அப்படியா! ஊம். (கண்களை உருட்டி அவளைப் பார்க்கிருர்.)

வா: (புன்னகை செய்தவாறே) கொங்கணவரே! என்னையும் கொக்கென்று நினைத்து விட்டீரோ?

[இச்சமயம் கிள்ளுவன் சாமியார் பின்னால் வந்து நிற்கிறான்.]

கிள்: (மெல்ல) இவங்களுக்கு எப்படி தெரிஞ்சது இந்தச் சங்கதி? இவங்க வெளியே கூட வரல்லியே!

[வியப்படைகிறான்.]

கொ: (பெரு வியப்புற்று) ஆமாம்; இது எப்படி இந்தம்மாளுக்குத் தெரிந்தது? (நெற்றி மீது கைவைத்து யோசிக்கிறார்.) தாயே! அகம்பாவம் என் கண்களை மறைத்து விட்டது. என் தவ வலிமையைப் பெரிதாக எண்ணிப் பெருமிதங் கொண்டிருந்தேன். ஆனால் கற்புக்கரசியான உங்கள் முன்னே என் ஆணவம் எல்லாம் பொடிப் பொடியாகி விட்டது. என்னை மன்னித்து விடுங்களம்மா.

வா: முனிவரே! நீங்கள் பெரியவர்கள். சந்தர்ப்ப உணர்ச்சிக்கு ஆளாகியதால் தான் இந்தத் தடுமாற்றம் ஏற்பட்டது. அதைப்பற்றி வருந்தாதீர்கள். வாருங்கள்; உணவருந்த.

கொ: சோற்றையும் கறியையும் இந்தக் கப்பரையில் இடுங்கள். அம்மா! நான் எடுத்துக் கொண்டு போய்ச் சாப்பிடுகிறேன்.

[வாசுகி தான் கொண்டு வந்த சோற்றையும் கறியையும் கப்பரையில் இட்டு விட்டு முனிவரை வணங்குகிறாள். அதற்கு முன்பே கொங்கணவர் வாசுகியை நோக்கி வணக்கம் செலுத்துகிறார்.]

வள்: (புன்முறுவலுடன்) முனிவருக்கு என்ன! மண்டகப்படி நடந்தாற் போலிருக்கு?

[வாசுகி நாணத்துடன் மௌனமாகச் செல்கிறாள்.]

**பூதகி:** ஏ! ஐயா! எங்கே போயிட்டே? சத்தம் போட்டுக் கிட்டிருந்தியே சாப்பாடு ஆகலையா ஆகலேயான்னுட்டு. இப்ப என்னடான்னு............

**கிள்:** (திரும்பி உள்ளே வந்து) இதோ வந்துட்டேன். பூதகி! உனக்குச் சமாசாரந் தெரியுமோ? நம்ம பக்கத்து வீட்டுப் பொம்மனாட்டி கிட்டே, கண்ணாலேயே கொக்கை எரிச்ச அந்தச் சாமியாரின் ஜம்பம் செல்லுபடியாகல்லே. அவ மானப்பட்டுட்டுப் போயிட்டாரு.

[கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான்.]

**பூதகி:** (கையில் வைத்திருந்த கரண்டிக் காம்பை ஓங்கிய படி) உனக்கு எப்பப் பார்த்தாலும் பக்கத்து வூட்டுப் பொம்மனாட்டியெப் பத்தியே பேச்சா இருக்கே? என்ன சங்கதி? கையிலே என்ன இருக்கு? பார்த்தியா!

**கிள்:** (பயந்தவனாக) ஆத்தாடி! மறந்து பேசிட்டேன். பொறுத்துக்கோ. நாழியாயிடுது வேலைக்குப் போவ. சோறு போட்டுடு. ஒரு வாய் அள்ளிப் போட்டுகிட்டுப் போயிடுறேன்.

**பூதகி:** வந்து குந்தித் தொலை.

[சமயலறையை நோக்கிப் போகிறான் கிள்ளுவன். கையை மோவாயில் வைத்துக் கொண்டே உட்காருகிறான்.]

## காட்சி—21

காலம் : முற்பகல்

இடம் : திருவாலங்காடு

உறுப்பினர் : நடராஜப் பெருமான், பராசக்தி, நாரதர், தேவர்கள்.

(திருவாலங்காட்டுக் கோயிலில் நடராஜப் பெருமான், பராசக்தி ஆகியவர்கள் குறித்து தேவர்களிடையே வாக்கு வாதம் நடக்கிறது.)

நாரதர் : தேவி! உங்களுக்கு ஏன் இந்த ஐயம்? சிவம்தான் பெரிது என்பது உலகம் முழுதும் ஒப்புக் கொண்ட உண்மை ஆயிற்றே!

தேவர் : சக்திதான் பெரிதென்று சர்வ லோகங்களும் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது. நீங்கள் என்னவோ வந்து... ..?

பராசக்தி : சபாஷ்! அப்படி சொல்லு; பக்தா!

(நடராஜப் பெருமான் புன்முறுவல் செய்கிறார்.)

தேவர் : பிரபஞ்சம் தோன்றிய காலத்திலிருந்து சிவம் முந்தியதா? சக்தி முந்தியதா? என்று எழுந்த வினவுக்கு இன்று வரை விடையே கிடைக்க வில்லை. யாராலும் வரையறுத்து முடிவு கூறமுடியவில்லை. அதுபோலத்தான் சிவம் பெரிதா? சக்தி பெரிதா? என்ற சமாச்சாரமும்.

நார : வெறும் வாக்கு வாதஞ் செய்து கொண்டிருப்பதில் பயன் என்ன? சிவன், சக்திகளின் செயல் ஆற்றல்களைக் கொண்டு பார்த்து விடுவோமே?

தே : 1: அது சரியான யோசனைதான்.

தே : 2: எந்தச் செயல் மூலம் இவர்களுடைய ஆற்றலை அறிந்து கொள்வது?

நார : நடனம் ஆடுவது மூலம் தெரிந்து கொள்ளலாமே! யார் கடைசி வரை அலுக்காமல் சலிக்காமல் ஆடுகிறார்கள்? பார்ப்போம்.

பரா : உங்கள் யோசனையை ஏற்றுக் கொள்கிறேன். ஆட வரச் சொல்லுங்கள். அம்பல வாணரை.

(நடராஜப் பெருமான் மறுபடியும் புன்முறுவல் பூக்கிறார்.)

**தேவர் :** (ஒரே குரலாக) தேவ தேவா! எங்கள் வேண்டு கோளுக்கு இணங்கி அருள் பாலிக்க வேண்டும்.

**நட :** நான் தான் சதா நடனம் செய்து கொண்டிருப்பவன் ஆயிற்றே! என் நடனத்தில் என்ன புதுமை இருக்கப் போகிறது?

**நார :** தேவியுடன் ஆடும் போது தனிக்கஜேயே உண்டா கலாம், மகாதேவா!

**தேவி :** சுவாமி! ஏன் தயங்கணும்?

**நட :** எனக்குத் தயக்கமா? பாவம்! உனக்குச் சிரமம் ஏற் படக் கூடாதே என்றே யோசிக்கிறேன்.

**தேவி :** (ஏளனமாக நகைத்து) எனக்குச் சிரமமா? நீங்கள் அதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அம்பலத்துக்கு வாருங்கள்; ஆடலாம்.

**நட :** நீயே தயாராய் இருக்கிறாய் என்றால் நான் ஏன் தயங்க வேண்டும்? ஆடுவோம்; வா.

(தேவர்கள் புடை சூழ நடராஜப் பெரு மானும் பராசக்தியும் பரவெளிக்கு வருகிறார் கள். நடராஜப் பெருமான் தன் வலது காலால் சதங்கையைச் சப்திக்க வைப்ப தன் மூலம் ஆடத் தொடங்கலாம் என்று சமிக்ஞை செய்கிறார். உடனே பராசக்தி ஆடத் தொடங்குகிறாள். அதற்கேற்றாற் போல நடராஜப் பெருமானும் ஜதி தாளத் துடன் ஆடத் தொடங்குகிறார். நாரதர் தம் பூரா வாசிக்க கின்னரர் யாழ் மீட்ட, நந்தி மத்தளம் முழங்க இருவருடைய நடனமும் துரித காலத்தில் வேகத்தின் உச்சியை அடைகிறது. அம்பல வாணருக்குச் சிறிதும் சளைக்காமல் பராசக்தி ஆடுகிறாள். நடராஜப்

பெருமான் புன் முறுவலுடன் ஆடிக் கொண்டே உருத்திர தாண்டவத்தில் இறங்குகிறார். அப்போதும் பராசக்தி சளைக்காது அதற்கேற்றாற்போல் ஆடுகிறாள். தேவர்களெல்லாம் அதிசயம் கொள்கின்றனர். அடிக்கடி கை கொட்டி ஆர்ப்பரிக்கின்றனர். கடைசியாக, நடராஜப் பெருமான் வலது காலை மேல் தூக்கிக் காதில் அணிந்திருக்கும் குண்டலத்தைக் கால் பெருவிரலால் தொடும்படியாக ஊர்த்துவ தாண்டவம் ஆடுகிறார். இதைக் கண்டு பராசக்தி பிரமித்துப் போகிறாள். ஆணைப் போல் பெண் அவ்விதம் ஆடமுடியாத நிலையை உணர்ந்து அவள் அவமான உணர்ச்சியோடு தலை குனிந்தவாறு ஆட்டத்தை நிறுத்துகிறாள். ஊர்த்துவ தாண்டவ வேகத்தில் கால் பெரு விரல் உந்துதலால் நடராஜப் பெருமானின் செவியில் இருந்த குண்டலம் எகிறிப்போய் எங்கோ விழுகிறது. இது கண்டு தேவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.)

**ஊர :** பார்த்தீர்களா! எங்கள் அம்பலவாணரின் ஊர்த்துவ தாண்டவத்தை?

**தே 1 :** தேவி அயர்ந்து போய் நிற்பதிலிருந்தே தெரிகிறதே? (சிலர் மகர குண்டலத்தைத் தேடுகின்றனர்.)

**தே 2 ;** பெருமானே! உங்கள் செவியில் இருந்து தவறி விழுந்த குழையைக் காணோமே?

**நட :** (புன் முறுவலோடு) நீங்கள் எங்கு தேடினாலும் எவ்வளவு நேரம் தேடினாலும் உங்களால் அதைக் கண்டு பிடிக்க முடியாது.

தே 1 : அப்படியானுல்......?

நட : தெற்கே திருமயிலாப்பூரில் என்னுடைய மெய்யன்பன் திருவள்ளுவன் இருக்கிருன். அவன் நெசவுத் தொழில் செய்து கொண்டிருப்பான். அவனைப் போய் கேளுங்கள்; குண்டலம் விழுந்த இடத்தைச் சொல்லுவான்.

நார : அப்படியே போய்க் கேட்கிருேம்; சுவாமி.

பரா : பெருமானே! உங்களுடைய அளப்பரும் சக்தியை தெரிந்து வைத்திருந்தும், ஆணவத்தால் அறிவிழந்து உங்களோடு போட்டியிட்டு நான் மறுபடியும் அவமான மடைந்து விட்டேன். தாங்கள் கருணை கூர்ந்து என்னை மன்னித்து ஆட்கொண்டு அருள வேண்டும்.

(நடராஜப் பெருமானின் காலில் விழுந்து வணங்குகிருள்.)

நட : (அவள் சிரத்தின் மீது வலக்கரத்தை வைத்து) என்னுடைய அருளும் ஆசியும் உனக்கு எப்போதும் உண்டு. எழுந்திரு; தேவி.

(தேவர்கள் 'நம பார்வதி பதயே! ஹரஹர! மகாதேவா!' என்று முழங்குகின்றனர்.)

## காட்சி-22

காலம் : காலை

இடம் : வள்ளுவர் இல்லம்

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி, ஏலேல சிங்கர்.

(வள்ளுவர் தறியில் அமர்ந்து நெய்து கொண்டே தலையை ஆட்டியவாறு தமக்குள் ஏதோ சொல்லிக் கொள்கிருர். வியப்புடன் வாசுகி இதைக் கவனித்தவாறே ராட்டையைச் சுழற்றி நூல் நூற்றுக் கொண்டிருக்கிருள்.)

வள் : வாசுகி! ஒரு நாள் பனை ஓலைகளைச் சீவி ஒழுங்குபடுத்தி ஏடுகளாக அடுக்கிவைத்திருந்தேனே! அவை பரண் மீது இருக்கும். எடுத்துக் கொண்டு வா!

வா : அப்படியே கொண்டு வருகிறேன்; நாதா!

(வாசுகி உள்ளே போகிருள். வள்ளுவர் வாய்விட்டு ஏதோ சொல்லுகிருர்.)

வள் : (பாடுகிருர்.)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

(இதற்குள் வாசுகி ஓலை எழுத்தாணியுடன் திரும்பி வருகிருள்.)

வள் : இப்படி என் எதிரில் வந்து உட்காரு, வாசுகி! ஓலைகளை ஒழுங்கு படுத்தி ஒன்றின் மேல் ஒன்ருக அடுக்கி வைத்துக் கொள். சில நாளாகவே என் சிந்தனை ஏதோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. உள்ளத்திலிருந்து ஏதோ ஒரு சக்தி 'பாடு; பாடு' என்று சொல்லி என்னை ஊக்கிக் கொண்டே இருக்கிறது. இந்த மன எழுச்சியை என்ஞல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இன்று காலையில் எழுந்ததும் என் உள்ளத்தில் இருந்து எழுவதை ஏட்டில் எழுதி வைத்து விடுவதென்று தீர்மானித்து விட்டேன். என் இதயக் குரலாக ஒலிக்கத் தொடங்கியிருக்கு வாசகம் இது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இதை எழுதி விட்டு உன் இனிய குரலால் பாடிக் காட்டு.

(வாசுகி தனக்குள் பாடிக் கொண்டே ஏட்டில் வள்ளுவர் சொன்ன திருக்குறளை எழுதுகிருள். இச்சமயம் ஏலேல சிங்கர் வருகிருர். வள்ளுவருக்கு அருகில் வாசுகி அமர்ந்து எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு தயங்கி நடையிலேயே நிற்கிருர்.)

வள் : நான் சொன்னதை ஏட்டில் எழுதி விட்டாயா? அதைப் பாடிக் காட்டு; கேட்கலாம்.

வா : (வலக்கரத்தில் ஓலையையும் இடது கையில் எழுத்தாணியையும் வைத்துக் கொண்டு தான் எழுதியதைப் பாடுகிருள்.)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

வள் : இனிமை! இனிமை! பிழையில்லாமலும் எழுதியிருக்கிருய். அடுத்து நான் சொல்வதை எழுது.

கற்றதனுல் ஆய பயன் என்கொல்? வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்.

(வாசுகி இக்குறளை எழுதிக் கொண்டே பாடுகிருள்.)

ஏலே : (மெல்ல) ஆகா! எவ்வளவு இனிமையாகப் பாடுகிருர்? பாட்டும் ஆழ்ந்த பொருள் செறிந்ததாக இருக்கிறதே!

வள் : இப்படித்தான் விட்டு விடாமல், நான் அவ்வப்போது சொல்லுவதையெல்லாம் எழுதி வரவேண்டும்; வாசுகி!

வா : அப்படியே! நாதா!

வள் : (நெய்வதை நிறுத்தி விட்டுப் பாடுகிருர்.)

மலர்மிசை ஏகினுன் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(வள்ளுவர் சொல்லச் சொல்ல வாசுகி எழுதிக் கொண்டு போகிருள். ஏலேலசிங்கர் நடையில் நின்றபடியே வள்ளுவர் சொல்லுவதையும் வாசுகி எழுதிவிட்டுப் பாடிக் காட்டுவதையும் கேட்டுக்கொண்டே மகிழ்ச்சியால் மெய்மறந்து நிற்கிருர்.)

வள் : இப்போது நான் சொன்ன பத்துக் குறட் பாக்களையும் கடைசியாக ஒரு முறை பாடிக் காட்டிவிடு, வாசுகி! நான் கேட்டு இன்புற விரும்புகிறேன்.

வா : எத்தனை முறை வேண்டுமானாலும் பாடுகிறேன், நாதா! ஒவ்வொன்றும் கற்கண்டு போல அல்லவா சுவையாக இருக்கிறது? இதைப் பாடப் பாட வாய் மணக்கும். (பாடுகிறாள்.)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனால் ஆய பயன் என்கொல்? வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார். 3

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார். 6

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 7

அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீந்தல் அரிது. 8

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

வள் : சரி. மற்றவற்றை நாளைக்குப் பாடுவோம். இப்போது தான் ஏதோ ஒரு பெரிய சுமையை இறக்கி வைத்தது போல் இதயம் இலேசாக இருக்கிறது. மனம் பரவசத்தில் ஆழ்ந்து இருக்கிறது.

ஏலே : (தம்மை மறந்து) உங்களுக்கு மட்டுமா ஐயா! மனம் பரவசமடைந்திருக்கு? கேட்போரையும் கூட அல்லவா ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தி விடக் கூடியதாய் இருக்கு? அம்மா சொன்னது போல் ஒவ்வொரு பாட்டும் கற்கண்டுத் துணுக்கு. இவற்றைப் பாடினால் வாய் மட்டும் மணக்காது. நினைக்க நினைக்க நெஞ்சமும் இனிக்கும்.

வள் : ஏதோ குரல் கேட்கிறதே! யார் என்று பார்? வாசுகி!

வா : (இருந்த இடத்திலிருந்தே எட்டிப் பார்த்து விட்டு) யாரோ உங்களைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாப் போலிருக்கு.

(நாணத்துடன் உள்ளே போய் விடுகிறாள்.)

ஏலே : (அசட்டு நகை நகைத்தவாறு) ஹி!. ஹி!. நான் தான் ஏலேலசிங்கர். இந்த வழியாக வந்தேன். அப்படியே உங்களைப் பார்த்து விட்டுப் போகலாமென்று தோன்றிற்று.

வள் : வாருங்கள், வாருங்கள். ஏன் வெளியிலேயே தயங்கி நிற்கிறீர்கள்?

ஏலே : நீங்கள் முக்கியமான வேலையாய் இருக்கும் போது நான் இடை நடுவில் சமயசந்தர்ப்பம் தெரியாமல் வரலாமா? சிவபூஜையில் கரடி புகுந்தாற் போல.

வள் : அப்படியொன்றும் முக்கியமானது ஒன்றுமில்லை; ஏலேலசிங்கரே!

ஏலே : நான் வரும்போது கேட்டுக் கொண்டுதான் வந்தேன்; உங்களுடைய அருமையான கவிதையை. கடவுள் வணக்கப் பாடல் போல............

வள் : (அடக்கத்துடன்) ஏதோ பாடத் தோன்றியது. தொழில் களைப்புத் தோன்றாதபடி பாடலானேன்.

ஏலே : நீங்கள் அடக்கமாகச் சொல்லிக் கொள்வது போல், உடல் களைப்புத் தீருவதற்காக உற்சாக மூட்டும் பாட்டு மட்டுமல்ல; இது. பிறவிக் களைப்பையே அடியோடு போக்கக் கூடிய ஆழ்ந்த பொருள் கொண்ட பாடல்களாகும் இவை. தொடர்ந்து பாடுங்கள். இவ்வுலக மக்களுக்கு உபகாரமாய் இருக்கட்டும்.

வள் : என்ன ஏலேலசிங்கரே! என்னை ஒரேயடியாய் உயர்த்திப் பேசுகிறீர்கள்? நான் சாதாரண நெசவுத் தொழிலாளி.

ஏலே : நீங்கள் நெசவுத் தொழிலாளி தான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால், வெறும் பஞ்சு நூலால் துணி 'நெய்யும் நெசவாளியல்ல; சொல் என்னும் பஞ்சைக் கொண்டு பனுவலை இழையாக்கி நீங்களே சேயிழை போலிருந்து நூல் நூற்கும் உயர்ந்த நெசவாளி என்பதை இப்போது நீங்கள் பாடியுள்ள பாடல்களே எனக்கு அறிமுகப்படுத்தி விட்டன.

வள் : ஏலேல சிங்கரே! உங்களுக்குள்ள இலக்கியப் புலமையைக் கொண்டு என்னைப்பற்றி உயர்வாகப் பேசத் தொடங்கி விட்டீர்கள். வந்ததிலிருந்து நின்று கொண்டே இருக்கிறீர்களே! குறிச்சியில் அமருங்கள். நான் தறியில் இருப்பதால் வீடு தேடி வந்த உங்களை எழுந்து வந்து வரவேற்று உபசரிக்க முடியவில்லை. மன்னியுங்கள்.

ஏலே : மற்றவர்களைப் போல் நமக்குள்ளே சம்பிரதாய உபசாரத்துக்கு அவசியமில்லை, ஐயா! நான் முதலில் உங்களைப் பார்த்ததிலிருந்தே மற்றவர்களைப் போல் நீங்கள் சாதாரண மனிதரில்லை என்று உணர்ந்து கொண்டேன். உங்களுடைய அகன்ற நெற்றியும் ஒளிமிகுந்த கூரிய கண்களும் எடுப்பான மூக்கும் வளைந்த மோவாயும் ஒரு தனித்தன்மை வாய்ந்த பெருமகனாய் இருக்க வேண்டுமென்று உணர்ந்து கொண்டேன். அதனால் தான் நானே உங்கள்பால் நட்புறவு கொள்ள வந்தேன்.

வள் : மிக்க நன்றி; ஐயா! செல்வத்தால் மட்டுமின்றி சிந்தனையிலும் சீரியரான உங்களை உற்ற நண்பராகப் பெறுவதில் நானும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏலே : நம்முடைய நட்பு வளர் பிறை போல் வளருவதாக. நாம் நாடோறும் மாலையில் சந்தித்து அளவளாவி மகிழ்வோம். இப்போது விடை பெறுகிறேன்.

(கைகூப்பி வணங்கி விட்டுப் போகிறார். பதிலுக்கு வள்ளுவரும் வணக்கம் செலுத்துகிறார்.)

## காட்சி-23

காலம் : முற்பகல்

இடம் : வள்ளுவர் இல்லம்

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி, தேவர்கள்.

(திருவாலங்காட்டிலிருந்து தேவர்கள் வள்ளுவர் வீட்டிற்கு வருகிறார்கள். அச்சமயம் வள்ளுவர் உணவருந்துவதற்குக் கூடத்தில் அமர்ந்திருக்கிறார். வாசுகி அவருக்குத் தாலத்தில் பழைய சோறு படைக்கிறாள். வள்ளுவரிடம் நடராஜப் பெருமான் சொல்லியனுப்பிய குண்டலம் பற்றிய தகவலைக் கேட்டறிவதற்காக, தேவர்கள் சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.)

வள் : வாசுகி! விசிறியைக் கொண்டு வந்து வைக்கவில்லையே?

வா : பழையது தானே என்று பார்த்தேன்.

வள் : இருந்தாலும், விசிறி வேண்டியதுதான்.

வா : அப்படியானால் கொண்டு வந்து விடுகிறேன், நாதா! (உள்ளே போகிறாள்).

(தேவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கின்றனர். வாசுகி விசிறியுடன் திரும்பி வருகிருள்.)

வா: கொண்டு வந்து விட்டேன்; நாதா!

வள்: கொஞ்சம் விசிறி விடு, வாசுகி!

வா: அப்படியே நாதா! (விசிறுகிருள்.)

(சுடு சோற்றிலிருந்து கிளம்புவது போல, பழையதிலிருந்து ஆவி கிளம்புகிறது.)

வள்: (புன்னகையோடு) விசிறி எவ்வளவு அவசியம் என்று தெரிகிறதா? வாசுகி!

வா: அறியாமையால் மறுத்துக் கேட்டு விட்டேன். மன்னியுங்கள் நாதா! நீங்கள் எது சொன்னலும் தடை சொல்லாமல் கேட்கக் கடமைப்பட்டவள் என்பதை இது எனக்கு உணர்த்துகிறது.

(இது கண்டு தேவர்கள் பெருவியப்படைகின்றனர். வாசுகி தொட்டுக் கொள்ள ஊறுகாய் முதலியவைகளை வைத்து விட்டு குவளையில் தண்ணீர் குறைந்திருப்பதைக் கவனித்து விட்டு கேணியில் நீர் முகந்து வர, புறக்கடைக்குச் செல்லுகிருள். அவள் தண்ணீர் முகந்து கொண்டிருக்கையிலேயே வள்ளுவர் கூப்பிடுகிருர்.)

வள்: வாசுகி! வாசுகி! எங்கே போய் விட்டாய்?

(வாசுகி கணவனின் குரல்கேட்டவுடனேயே நீர் முகந்து கொண்டிருப்பதை அப்படியே விட்டு விட்டு ஓடோடி வருகிருள். கிணற்றுக்குள் சென்ற குடம் கயிற்றுடன் அந்தரத்தில் அப்படியே நின்று விடுகிறது. இதைப் பார்த்து தேவர்கள் பேராச்சரியம்

கொள்கிறுர்கள். தன் வீட்டுப் புறக் கடைக்குத் தற்செயலாக வந்த கிள்ளுவ னும் இதைக் கண்டு வியப்புறுகிறுன்.)

கிள் : பூதகி! பூதகி! இங்கே ஓடி வாயேன்! குடம் கயிறுடன் அந்தரத்தில் நிக்குது பார்!

பூதகி : (இரைக்க இரைக்க வந்து) உனக்கு என்னுய்யா வந் துட்டது? திடீரென இப்பிடிக் கத்தறே?

கிள் : அங்கே பாரு அதிசயத்தை.

பூதகி : என்னது? (திரும்பிப் பார்த்து) ஓ! இதைப் பார்க்கத் தான் கூப்பிட்டியா! இந்த ஜால வித்தையையெல்லாம் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேனே!

கிள் : ஜால வித்தையா?

பூதகி : ஆமாம். நீ தறிக்குப் போயிட்டா எனக்கு வேறென்ன வேலை? வாசுகியும் அவள் ஆம்படையானும் நடத்தற கூத் தைத்தானே பார்த்துக்கினு இருக்கேன்.

கிள் : அப்பிடியா!

பூதகி : ஆமாம். அவங்க செய்யறதெல்லாம் கண் கட்டு வித்தை. ஐயா! ஊரை ஏமாத்தறுங்க.

கிள் : ஆங்.

வள் : தண்ணீர்கொண்டு வரப்போனுயா? வாசுகி! குவளையில் தான் நீர் இருக்கிறதே! நடையில் நிழல் ஆடுகிறது. யார் வந்திருக்கிறது என்று பார்.

(வாசுகி வெளியே தலை நீட்டிப் பார்க்கிறுள். முதலில் அவள் கண்களுக்கு தேவர்கள் இருப்பது தென்படவில்லை. உன்னிப்பாகப் பார்த்த பின்னர் தான் தேவர்கள் கும்பலாக நின்றிருப்பது அவள் கண்களுக்குப் புலனு கிறது.)

வா : நாதா! தங்களைப் பார்க்க யாரோ வந்து காத்திருப்பது போல் தோன்றுகிறது.

(இதற்குள் வள்ளுவர் கை அலம்பி விட்டு நடைக்குப் போகிறார். அவரைக் கண்டதும் தேவர்கள் கைகூப்பி வணங்குகின்றனர்.)

தேவர்கள் : (ஓரேகுரலாக) வணக்கம்; வள்ளுவர் பெருமானே!

வள் : வணக்கம். வாருங்கள். ஏது இவ்வளவு தூரம்? இந்த ஏழை வீட்டைத் தேடிக் கொண்டு. இப்படி வந்து அமருங்கள்.

தே : (வள்ளுவர் காட்டிய ஆசனங்களில் அமர்ந்தவாறு) நடராஜப் பெருமான் உங்களிடம் அனுப்பி வைத்தார்.

வள் : (வியப்போடு) என்ன! நடராஜப் பெருமானா? என்னிடமா?

தே : ஆமாம்.

வள் : எது விஷயமாகவோ?

தே : வேறொன்றுமில்லை. நடராஜப் பெருமான் எங்கள் வேண்டுகோளின்படி தேவியோடு திருவாலங்காட்டில் நடனமாடினார். அவர் ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தில் ஆட்ட வேகத்தினால் அவருடைய காதில் இருந்த மகர குண்டலம் கழன்று எங்கேயோ போய் விழுந்து விட்டது. நாங்களெல்லாம் பல இடங்களில் தேடியும் அது கிடைக்கவேயில்லை. அது விழுந்து கிடக்கும் இடம் உங்களுக்குத் தான் தெரியும் என்று அம்பலவாணர் சொன்னார். அதற்காகத்தான் உங்களை நாடி வந்திருக்கிறோம்.

வள் : அதிசயமாய் இருக்கிறதே! சிவபெருமானின் செவியை அலங்கரித்துக் கொண்டிருந்த மகர குண்டலம் விழுந்த இடம் உங்களுக்கே தெரியாமலிருக்க, ஏழை நெசவாளியான எனக்கு எங்கே தெரியப் போகிறது?

"பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை யறிவேனோ?
குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து"

தே : நன்று. நன்று. வினா எழுப்பியே விடை சொல்லி விட்டீர்களே! உங்கள் சாதுரியத்தையும் அறிவு நுட்பத்தையும் என்னென்பது! உண்மை எங்களுக்குத் தெரிந்துவிட்டது. உங்களுக்கு மிக்க நன்றி. நாங்கள்போய் வருகிறோம்.

வள் : (புன்னகையுடன்) போய் வாருங்கள்; தேவர்களே!
(வழியனுப்பி வைக்கிறார்.)

## காட்சி-24

காலம் : இரவு

இடம் : வள்ளுவர் இல்லம்

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி, கிள்ளுவன், பூதகி

(வள்ளுவர் ஏதோ சிந்தனை செய்தவாறு எழுத்தாணியால் அடிக்கடி ஏட்டில் எழுதிக் கொண்டிருக்கிறார். வாசுகி அடுக்களை வேலையை முடித்துவிட்டு வருகிறாள்.)

வா : முதல் சாமமாகியும் விழித்துக்கொண்டு இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும். பகலெல்லாம் வேறு தறியில் கிடந்து விட்டு........

வள் : உன் அலுவலெல்லாம் முடிந்து விட்டது அல்லவா? வாசுகி!

வா : ஓ! நாளை தறிக்கு வேண்டிய சிட்டங்களைக் கூடப் போட்டுவிட்டேன், நாதா!

வள் : அப்படியானால் நீ போய் படுத்துக் கொள், வாசுகி!

வா : நீங்கள் உறங்குவதற்கு முன் நான் படுக்கைக்குப் போவதா? நன்றாகத்தான் இருக்கு, நீங்கள் சொல்வது?

வள் : அதனால் என்ன? நீ போய்த் தூங்கு; வாசுகி! நான் கொஞ்சம் எழுத வேண்டியிருக்கு. உள்ளத்தில் கருத்து உருவாகும் போது அதை ஏட்டில் எழுதி வைத்துவிட்டால்தான் உறக்கம் வரும்.

வா : அது உண்மைதான். அல்லும் பகலும் ஓய்ச்சல் ஒழிவு இல்லையே! உடம்புக்கு நலிவு ஏற்பட்டு விடக்கூடாதே என்றே அஞ்சுகிறேன். நான் எழுதுகிறேனே! நீங்கள் சொல்லிக் கொண்டு வாருங்களேன்.

வள் : (புன்னகை செய்து) உனக்கு மட்டும் ஓய்வு வேண்டாமா? நீயுந்தான் அருணோதயத்துக்குமுன் எழுந்திருந்தால் இரவு முதல் சாமம் வரை குடும்ப காரியங்களையும் கவனித்துக்கொண்டு நெசவுக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறாய், ஒரு நிமிடம் உட்காராமல்.

வா : நான் தானா நீங்கள்?

வள் : (சிரித்து) உன்னை மட்டும் என்ன படைத்தவன் இரும்பாலா ஆக்கி வைத்திருக்கிறான்?

வா : என்னைப்போன்ற பெண்கள் என்ன செய்தாலும் வீட்டுக்குள்ளிருந்து தானே செய்கிறோம்; ஆண்களாகிய நீங்களோ வெளியிலே போய் எத்தனையோ வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறதே!

வள்: அதனால், பெண்களைவிட ஆண்களுக்கு அலுவல் அதிகம் என்று சொல்லிச் சாதிக்கிறாய். அதுதானே?

வா: (நாணத்துடன்) ஆம்.

வள் : உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்; ஆணுக்கு ஒன்று, பெண்ணுக்கொன்று எனப் பேதம் பிரித்துப் பேசவேண்டாம் என்று. சமுதாயத்தில் ஆண்களுக்கு அவர்களுடைய உடல் இயற்கைக்கு ஏற்றபடி சில வேலைகளைச் செய்ய விதிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, பெண்களுக்கும், அவர்களுடைய மெல்லியற்கைக்குத் தகுந்தவாறு வீட்டு வேலைகளை மட்டுமே கவனிக்கு

மாறு கூறப்பட்டிருக்கிறது. இதை வைத்து இருபாலாருக்கும் வேறுபாடு கற்பிப்பதா?

வா : உங்கள் அறிவுரை எனக்கு எப்போதும் நினைவில் இருக்கிறது. ஆனால் என் அன்னையார் சொல்லியிருக்கிறார்: தனக்குக் கணவராக வருபவரைக் கண்ணுங் கருத்துமாகக் காத்துப் பேணுவதற்கென்றே படைக்கப்பட்டவள் பெண் என்று. அதன்படித்தான் நான் உங்களைக் கவனித்துக் கொள்கிறேன்.

வள் : வழி வழியாக இரத்தத்தில் ஊறிப்போயுள்ள சில பண்புகளைப் பெண்களிடமிருந்து அவ்வளவு எளிதில் மாற்ற முடியாது. சரி; சரி. இப்போது உன் சொல்லுக்குக் கட்டுப்படுவதைத் தவிர, எனக்கு வேறொன்றும் தோன்றவில்லை. இந்த ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்து வை. நாம் உறங்கப் போகலாம்.

(வாசுகி ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்துக்கொண்டு உள்ளே போகிறாள். வள்ளுவர் படுக்கையில் போய்ச் சாய்கிறார்; சிறிது நேரத்தில் வாசுகி விசிறியுடன் வந்து அவர் பக்கத்தில் அமர்ந்து அவருக்கு விசிறியால் விசிறுகிறாள். அடுத்து அவள் வாய் எதையோ மெல்லப் பாடுகிறது. பாடலைக் கேட்டவாறே வள்ளுவர் கண் உறங்குகிறார். அவர் நன்றாகத் தூங்கிவிட்டார் என்று தெரிந்தபின், வாசுகி அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு பின் தான் படுத்துக் கொள்கிறாள்.)

(இதே சமயத்தில் கிள்ளுவன் தன் வீட்டில் மனைவியுடன் பேசிக்கொண்டிருக்கிறான்.)

பூத : பக்கத்து வீட்டில் காலட்சேபம் ஆரம்பிச்சிட்டுது, மச்சான்? நாம தூங்கிறப்போலத்தான்.

கின் : இந்த வள்ளுவன் வளவளவென்று பேசத்தொடங்கி விட்டால் வாயை லேசில் மூடவே மாட்டானே! அன்னு டம் இது ரோதனையா போச்சே!

பூத : அலுத்துச்சலித்து வந்து கண்ணயரலாம்னு இந்தச்சனி யன்கள் இப்படி ராவெல்லாம் கூத்தடிக்குதுங்களே!

கின் : இதுக்கு என்ன செய்யறது? பூதகி!

பூத : உனக்கு எத்தனை நாளா சொல்லிக் கொண்டிருக் கேன்; நாங்க தூங்கறதா என்ன? ஒரு நாள் தவறுமே இராவுலே இப்பிடிக் காட்டுக்கூச்சல் போட்டுக்கினு இருக் கிறீங்களேன்னு வள்ளுவனைப் பார்த்து அதட்டல் போட் டுட்டு வாங்கன்னு. அதுக்குத் தைரியமில்லே! இங்கேயே என்னண்டே முணுமுணுத்துக்கிட்டு இருக்கே.

கின் : (யோசனையோடு) ஊம்.

பூத : ஏன்? மச்சான்! நீ ஆம்பிளேயில்லே? இப்பிடித் தொடை நடுங்கிறியே!

கின் : உனக்கு விஷயம் தெரியாதுடீ. வள்ளுவன் எங்க எச மானருக்கு மிகவும் வேண்டியவன். எப்படியோ செட்டி யாரை வசியம் பண்ணி வச்சிருக்கான். அதனுல்தான் யோசிக்கிறேன்.

பூத : யோசிக்க வேண்டிய விஷயந்தான், மச்சான்! வேலை போயிட்டா நம் வயிற்றுப்பாட்டுக்குத் திண்டாடணுமே?

கின் : எனக்குத் தூக்கம் வருது. விடிஞ்சு பேசிக்கலாம். நீ படு.

பூத : (ஏளனமாக) மூதேவி வந்துட்டாளா? தூங்கித் தொலை.

## காட்சி-25

காலம் : முற்பகல்

இடம் : வள்ளுவர் இல்லம்

உறுப்பினர் : வள்ளுவர், ஏலேலசிங்கர்.

(வள்ளுவர் தறியில் நெய்து கொண்டே பாடுகிறார். ஏலேலசிங்கர் வருகிறார்.)

வள் : இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

ஏலே : வணக்கம்; ஐயா!

வள் : (நிமிர்ந்து நோக்கி) வாருங்கள்; ஏலேலசிங்கரே! ஏது இன்றைக்கு விபூதிபட்டையும் ருத்திராட்ச மாலையும் பிரமாதமாக இருக்கு. பூஜை புனஸ்காரம்......

ஏலே : (வாயில் விரலை வைத்துக் கடித்து) வருகிற அவசரத்தில் ஜெப மாலையைக் கழற்றி வைக்க மறந்து விட்டேன். பூஜை செய்து கொண்டிருக்கையில் என் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. அதைப்பற்றிக் கேட்க வந்தேன்.

வள் : உங்களுக்கு என்ன சந்தேகம் அப்படி ஏற்பட்டது? 'யவன நாட்டிலிருந்து நாவாயில் வந்து சேர வேண்டிய சரக்குகள் இன்னும் வரவில்லையே! எப்போது தோமியார் கோயில் கரைக்குப்பத்துக்கு வந்து சேரும்' என்ற விசாரமா? யாராயினும் நிமித்திகரை நாடிச் சென்றால் அவர் சொல்லுவாரே!

ஏலே : (வியப்புடன்) என் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த இந்த எண்ணம் ஐயாவுக்கு எப்படித் தெரிந்தது?

வள் : நீங்கள் சிவ பூஜை செய்யும் போது கூட உங்கள் சிந்தனையெல்லாம் குப்பத்துக்கரையை நாடியல்லவா இருந்தது? உங்கள் முகத்தில் தேங்கியுள்ள கவலையை விபூதி பூச்சால் கூட மறைக்க முடியவில்லையே! அதை நான் தெரிந்து கொண்டதில் என்ன ஆச்சரியம்?

ஏலே : எல்லாவற்றையும் நேரில் பார்த்தது போலல்லவா சொல்லுகிறீர்கள்? ஐயா! ஒருவருடைய உள்ளத்தை ஊடுருவிப் பார்த்து விஷயத்தை ஊகித்துக் கொள்ளும் மதியூகம் மட்டுமல்லாமல், எங்கு என்ன நடக்கிறது என்ற தொலை நோக்கு உணர்வும் உங்களுக்கு இருக்கு என்பதை நான் அறிந்து கொண்டேன். நீங்கள் தேவர்களைக் காட்டிலும் பெரிய தேவர். (அவர் உடம்பெல்லாம் நடு நடுங்குகிறது. வள்ளுவருடைய காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்குகிறார்.) என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், ஐயா.

வள் : நீங்கள் என்ன பிழை செய்து விட்டீர்கள்? ஏலேல சிங்கரே! மன்னிப்பு கேட்பதற்கு. ஒரு காரியத்தில் ஈடுபட்டால் மனிதர்கள் அதில் முழுவதும் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். அதிலும் வாணிபத்தில் அதிக அக்கரையும் கவனமும் இருக்க வேண்டும். ஆனால் சிவபூஜை செய்யும் சமயத்தில் கூட அதைப்பற்றிச் சிந்தனைசெய்ய வேண்டாமென்றுதான் சுட்டிக்காட்டினேன்.

ஏலே : நான் உங்களை என் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசாரியனாகவே மதித்திருக்கிறேன். ஐயா! நான் ஏதேனும் பிழை புரிந்தால் அதைக் கண்டித்துப் புத்தி கூற வேண்டும்.

வள் : வாழ்க்கைக்குப் பொருள் மிக அவசியம். திரை கடலோடியும் திரவியம் தேடத்தான் வேண்டும். ஆனால், அதற்காகப் பொருளிலேயே புத்தியை முழுவதும் பதித்துக் கொள்ளக் கூடாது. புளியம் பழம்போல் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்க வேண்டும். ஒன்றின் மீது மிகுந்த பற்றும் பாசமும் வைத்து விட்டால் அதனால் துன்பமும் துயரமும்தான் மிகுதியாகும்.

ஏலே : நல்ல அறிவுரை இது; ஐயா! இனிமேல் பொருளையே பெரிதாகக் கருதி அதில் ஆசை வைக்கமாட்டேன்.

வள் : (நகைத்துக் கொண்டே) உங்கள் மனம் மாறியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு தேர்வு நடத்திப் பார்க்கலாமா?

ஏலே : என்னை எப்படி வேண்டுமானாலும் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்; ஐயா!

வள் : உங்களிடம் சுமாராக எவ்வளவு பொன் இருக்கும்?

ஏலே : நான் கணக்கு வைத்துக் கொண்டதில்லை. தோராயமாகச் சொன்னால் தங்கப் பாளங்கள், நகை நட்டுக்கள் உட்பட ஆயிரம் வராகன்களுக்குமேல் இருக்கலாம்.

வள் : உங்கள் வீட்டம்மா அணிந்திருக்கும் நகைகளை விட்டு விட்டு மற்ற எல்லாப் பொன்னையும் கட்டியாக்கிக் கடலில் எறிந்து விடுங்கள் எனச் சொல்லுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவ்விதமே செய்வீர்களா?

ஏலே : ஓ! அப்படியே தயக்கமில்லாமல் செய்வேன்.

வள் : அப்படியானால் சரி; நான் சொல்கிறபடி செய்யுங்கள். உங்களிடமிருக்கும் பொன் கட்டிகளை யெல்லாம் சதுரக்கல் போல் செய்து அதன் மீது உங்கள் பெயரைப் பொறித்துப் பின்னர் கடலில் எறிந்து விட்டு வாருங்கள்.

ஏலே : இப்போதே போய் நீங்கள் சொல்லியபடியே செய்து விட்டு வருகிறேன், ஐயா!

வள் : (நகைத்து) போய் வாரும்.

(ஏலேலசிங்கர் விரைந்து செல்கிறார்.)

## காட்சி—26

காலம் : நள்ளிரவு

இடம் : ஏலேலசிங்கர் மாளிகை

உறுப்பினர் : கள்ளர்கள், ஏலேல சிங்கர், மரகதம்.

(ஏலேலசிங்கரும் மரகதமும் உறங்கிக் கொண்டிருக்கின்றனர். திருடர் இருவர் கன்னக்கோல் வைத்து வீட்டினுள் நுழைகிறார்கள்.)

**கள் 1 :** என்னண்ணேன்! ஒன்னுமே தெம்படலேயே?

**கள் 2 :** நல்லா எல்லாத்தையுந் துழாவிப் பாருடா! இங்கே இரும்புப் பெட்டி கூடக் காலியாத்தான் இருக்கு.

**கள் 1 :** எச்சரிக்கையா எங்கேனு எல்லாத்தையும் பதுக்கி வச்சிட்டிருப்பாங்களோ?

**கள் 2 :** ஒருவேளை நாம திருடவர்றது தெரிஞ்சிருக்குமோடா?

**கள் 1 :** நாம திடீரென்னுதானே திருட வந்தோம். யாரு சொல்லியிருக்கப் போறுங்கண்ணேன்!

**கள் 2 :** பூமியிலே புதைச்சி வச்சிருக்காங்களா? பாரு!

(ஒருவன் தரையைத் தட்டிப் பார்க்கிறான். இன்னொருவன் மூலை முடுக்கெல்லாம் ஆராய்கிறான்.)

**கள் 1 :** ஊஉம். ஒரு உருப்படியும் இல்லே.

**கள் 2 :** பொன்னு பொருளுதான் இல்லேன்னாலும் நகை நட்டு துணிமணிகூடவா இருக்காது?

(சந்தடி கேட்டு ஏலேலசிங்கர் விழித்துக் கொண்டு ஓசை படாமல் தாழ்ப்பாளைத் திறந்து மெல்ல வெளியே எட்டிப் பார்க்கிறார்.)

கள் 1 : அதானே! தூங்கறப்போ கூடவா செட்டியாரம்மா பூணாரம் பூட்டிக்கிட்டிருப்பாங்க?

கள் 2 : கப்பல்காரரையா கவுந்து போயி கப்பரை வாங்கிட்டிருப்பாரோடா? வேலு!

கள் 1 : செட்டியார் வாழ்வு செத்தா தெரியுமென்பாங்க. ஏலேலசிங்கர் வாழ்வு இருக்கறப்போவே இம்புட்டு லட்சணத்திலே இருக்கே? அண்ணேன்!

கள் 2: எல்லாத்தையும் வியாபாரத்திலே போட்டு முடக்கியிருப்பார்போல. ஒரேயடியா கடலிலே மூழ்கிப் போச்சோ? என்னமோ?

கள் 1 : சத்தம் போட்டுப்பேசாதேண்ணேன்! முழிச்சிக்கிட்டு வரப்போறாங்க?

கள் 2 : ஒன்னு செய்தா என்ன? வேலு! தூங்கிகிட்டிருக்கிறவங்களை யெழுப்பிக் கத்தியெ காட்டி, வச்சிருக்கிற பொன்னு பொருளையெல்லாம் கொடுங்கன்னு பயமுறுத்திப் பிடுங்குவமே?

கள் 1 ; நல்லா சொன்னேண்ணேன்! சணப்பன் வீட்டுக் கோழி தானே மாட்டிக்கிட்டது எம்பாங்களே! அதுபோல நாம மாட்டிக்கிட்டுத் தலையாரி தடியாலே அடிச்சிக் கொத்தவால் முன்னாலே நிறுத்திக்கொட்டடியிலே போட்டு உதைக்கச் சொல்லணும் எங்கிறே. செட்டியாருக்கு ஆளு அம்பு அதிகம். அரசாங்க அதிகாரிங் கெல்லாம் அவரு கையிலே அடக்கம்.

கள் 2 : அப்ப நாம வெறுங் கையோடதான் போவணுங்கிறையா? வேலு!

கள் 1 : சும்மா போவலையின்னு நெல் குதிரு, அரிசி சாலுங்க இருக்கே! அதை ஆளுக்கொன்னு தூக்கித் தலையிலே வச்சிகிட்டு போவம். என்ன!

கள் 2 : சரி, வாடா! பரிகாசம் பண்றது போதும். வெள்ளி முளைக்கிறதுக்குள்ளாற போயிடுவம்.

கள் 1 : போறதுதான் போறம். புழக்கடைப் பக்கம் ஒரு பார்வை பாத்துட்டுப் போவம். புதையல் போல ஏதுனு கிடைச்சாலும் கிடைக்கலாம் இல்லியா?

(போகின்றனர். ஏலேலசிங்கர் அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் செய்கிறார்.)

## காட்சி–27

காலம் : மாலை

இடம் : நடு வீதி

உறுப்பினர் : குடிகாரன், வள்ளுவர், கிள்ளுவன், மக்கள்.

(25 வயதுள்ள இளைஞனொருவன் குடி போதையில் ஆடிக்கொண்டு வருகிறான். கிள்ளுவன் உட்பட சிலர் அவனைச் சூழ்ந்து கொண்டு வேடிக்கை பார்த்தவாறு வருகின்றனர். எதிரே வள்ளுவர் ஏதோ சிந்தனை செய்தவாறு வருகிறார்.)

குடி : என்னையா! என்னைப் பாக்கிறீங்க? குடிகாரப்பசங்களா? (கைகளை விகாரமாக ஆட்டிக்கெண்டு சிலர் அருகே நெருங்குகிறான். அவர்கள் பயந்து ஒதுங்குகின்றனர்.)

கிள் : யாரு? நாங்களா? நீயா? யார் குடிச்சிருக்கிறது?

குடி : நீங்கதான். இதோ பாருங்கையா? இருந்தாற் போலிருந்து பூலோகம் சுத்துது. நீங்கள் கூட சுத்தறீங்களே?

கிள் : (கேலியாக) நீ தலை கிறுகிறுத்து சுத்தறே இல்லே? அதனாலே பூலோகமும் மனுஷாளும் உன்னோட சேந்து சுத்தறாங்க.

(கூட்டத்திலுள்ளோர் கொல்லென்று சிரிக்கின்றனர்.)

குடி : என்னையா! சிரிக்கிறீங்க? வேடிக்கையா இருக்குதா என்னைப் பார்த்தா?

(கூட்டத்தாரை அடிக்கக் கையை ஓங்குகிருன். அவர்கள் பயந்து கொண்டு ஓடுகின்றனர். இச்சமயம் வள்ளுவர் அவ்விடத்தை நெருங்குகிருர். குடிகாரன் அவரை நோக்கிப் போகிருன்.)

குடி : சாமியாரே! தாடி சாமியாரே! எங்கே போறீங்க? கள்ளுக் கடைக்கா?

(வள்ளுவர் அவனைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டே ஒதுங்குகிருர்.)

குடி : போ! போ! சாமியாரே! சரக்கு ஆயிடப்போவுது. இன்னிக்கு தென்னங்கள்ளு ரொம்பத் தித்திப்பா இருக்குது. குடிக்கக் குடிக்க தெவட்டவே இல்லே. கொஞ்சம் குடிச்சு தான் பாருங்களேன்.

(வள்ளுவர் அவனை வெறுப்போடு பார்த்து நிற்கிருர்.)

குடி : சாமியாருக்கு தென்னங்கள்ளு பிடிக்கலேன்ணு பனங்கள்ளு பதமா இருக்கு. ஈச்சங்கள்ளு வேணுமா? அதுவும் இருக்கு. இதுலே கொஞ்சம், அதுலே கொஞ்சம் குடிச்சுப் பாருங்களேன். ரொம்ப ஜோரா இருக்கும்.

கிள் ; உன்னைப் பார்த்தாலே தெரியுதே! குடிச்சா ரொம்ப ஜோரா இருக்கும்னு.

குடி : பின்னே நீயுந்தான் குடிச்சுப் பாரையா, நான் சொல்றது நெசமா இல்லையான்னு? ஒரு மொந்தை உள்ளே போனு நேரா சொர்க்கத்துக்கே கொண்டு போய் விட்டுடுது. என் காலைப் பாரு, தரையிலே பாவுதான்னு.

வள் : ஏன் தம்பி! நீ குடித்துக் கெட்டுப் போவதுமில்லாமல், மற்றவர்களையும் குடித்துப் பார்க்கச் சொல்கிருயே!

குடி : அப்படின்னு நான் சொல்றது தப்பா?

வள் : தப்பில்லாமல்? குடி நம்மக் குடியைக் கெடுக்கும் என்று உனக்குத் தெரியாதா?

குடி : நீ என்ன சாமியாரே! சொல்றே? எனக்கு ஒன்னும் புரியலே. நீங்கள் கஞ்சா, அபினி குடிக்கிறீங்களே அது போலன்னு நினைச்சிக்கினீங்களா? இந்தக் கள்ளுக் குடிக்கிறதையும்.

வள் : நான் சாமியாருமில்லே, நீ சொல்கிற மாதிரி கஞ்சா குடிக்கிறவனுமில்லே; அபினி சாப்பிடுகிறவனுமில்லே.

குடி : அப்ப நீ எதுக்கும் லாயக்கில்லாத ஆசாமின்னு சொல்லு. (கையை உதறி) சுத்த மோசம்! சுத்த மோசம்!

(இச்சமயம் அவன் வயிறு குமட்டல் எடுத்து வாந்தி எடுக்கிறான். கூட்டத்தார் பதறிப் போய் விலகுகின்றனர். வள்ளுவர் அவனை இரக்கமாகப் பார்க்கிறார்.)

வள் : பார்த்தாயா? தம்பி! உன் வயிற்றிலே போயிருக்கிற சரக்கு எப்படி யெப்படி எல்லாம் உன்னை ஆட்டிப்படைக்கிறது என்று.

குடி : (தலையை ஒரு விதமாகச் சாய்த்துக்கொண்டு) என்ன! என்ன சொல்றே? சாமியாரே!

வள் : நீ குடித்திருக்கிற கள்ளு புளித்துப் போயல்லவா இருந்தது?

குடி : ஆங்......

வள் : அது புளிக்கிறதற்காக காடிப் பானையிலே ஊமத்தங்காய் போன்றவைகளை அறுத்துப்போட்டு ஊற வைக்கிறார்கள். புளிப்பு ஏற ஏற அது பொங்குகிறது; நுரைக்கிறது. அது போல அது குடிக்கிறவர்களையும் போதை கொண்டு ஆட வைக்கிறது.

கூட் 1 : அப்படீங்களா? ஐயா!

**வள் :** அது உங்களுக்குத் தெரியாதா? அதுமட்டுமா? மரத்தி லிருந்து கள் ளிறக்கும் போதே ஈ, எறும்பெல்லாம் அதில் விழுந்திருக்கும். காவடியில் கொண்டு வரும் போது கொசு முதலிய பூச்சிகள் அதை மொய்த்துக் கொண்டு வந்து விழும். கடைசியாக, காடிப் பானையிலும் பெரிய ஜாடி யிலும் ஊறலோடு சேர்த்து ஊற வைக்கும்போது அதில் புழுவெல்லாம் உற்பத்தியாகி நெளிந்து கொண்டுஇருக்கும். இவ்வளவு மோசமான சரக்குதான் குடிகாரர்கள் வயிற் றிலே போய் விழுகிறது.

**கூட் : 2 :** (வயிற்றைக் குமட்டியவாறு) இவ்வளவு மோசமான கள்ளையா குடிச்சி மனுசங்க கெட்டுப் போறுங்க? குடலைக் கெடுத்துக் கொள்ளுகிறுங்க?

**வள் :** ஆமாம். ஆமாம்.

(இச்சமயம் குடிகாரன் குடிபோதை தலைக் கேற மயங்கிக் கீழே விழுகிறன். ஆனல், அவனை யாரும் விழவொட்டாது தாங்கிக் கொள்ளவில்லை.)

**வள் :** "துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."

**கிள் :** அப்படியே ஓவியமா எழுதிக் காட்டியிருக்கார் இவர் பாடி வருகிற திருக்குறளிலே. இவரு பெரிய கவிஞர்; தெரி யுமா?

**கூட் : 1 :** அப்பிடியா! ஏங்க? ஐயா! இப்பிடிக் கள்ளுக் குடிச்சுக் கெட்டுப் போறவங்களைத் திருத்தவே முடியாதா?

**வள் :** ஏன் முடியாது? வாலாயமாகக் கள் குடிப்பவர்கள் ஒரு நாள் குடிபோதையில் இல்லாமல் இருக்கிற போது, இதோ இந்த ஆள் குடித்து விட்டு வாந்தி எடுத்துக் கூத்தடிக் கிறுனே! இவனைப் போன்றவர்களைப் பார்க்கச் செய்தால் போதும். உடனே குடிப்பதை நிறுத்தி விடுவார்கள்.

(போதையால் கீழே விழுந்தவன் வெகு நேரமாகியும் எழுந்திருக்காமல் போகவே மக்கள் அவன் இருக்குமிடத்திற்குப் போய் சூழ்ந்து கொள்கின்றனர். இச்சமயத்தில் வயதான மாது ஒருத்தி அப்பக்கமாக வந்தவள் கூட்டங் கூடி இருப்பதைப் பார்த்து விட்டு அது என்ன வென்று அறிய ஆவலோடு கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே பார்க்கிருள்.)

கிழவி : (பதறி) அட பாவி! குடிச்சுட்டு நீ இங்கேயா விழுந்து கிடக்கிறே?

கிள் : இவனை உங்களுக்குத் தெரியுமா? பாட்டி!

கூட் : 2 : இவன் உங்களுக்கு என்ன வேணும்?

கிழவி : தெரியுமாவா? இவன் என் பாழும் வயித்திலே பிறந்த பிள்ளே, ஐயா!

வள் : (எல்லோர் காதிலும் விழும்படியாக)

ஈன்ருள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்ருேர் முகத்துக் களி.''

கிழவி : உன்னைப் பெற்ற வயிற்றிலே பெரண்டையை வச்சிக் கட்டாமே போயிட்டேனே!

வள் : (பரிதாபமாக) பார்த்தீர்களா? பத்து மாதம் சுமந்து பெற்ற தாயே மனம் நொந்து பழித்துப் பேசுகிற அளவுக்கு இழிவான நிலை உண்டாகிறது என்ருல் இந்தக் குடி பெரியவர்களுடைய உள்ளங்களை எவ்வளவு புண்படுத்தும் என்று எண்ணிப் பாருங்கள். உங்களில் யாரும், மறந்தும் கூட இந்தக் குடிப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள், ஐயா!

ஒருவர் : ஐயையோ! சாமி! இந்த ஆளுக்கு ஏற்பட்டிருக்கிற அவலத்தைக் கண்ணுலே பார்த்த பின்னும் கூடவா மனுஷனுப் பிறந்தவனுக்கு, கள் குடிக்கத் தோணும்?

வள் : இந்த உண்மை எல்லோருக்கும் தெரிந்துவிட்டால் அவர்கள் உய்ந்து போவார்கள்.

[அவர் மெல்லக் கூட்டத்தை விட்டு அகல் கிருர்.]

கிழ : (கீழே விழுந்திருக்கும் மகனைப் பார்த்து) தூ! (காரி உமிழ்ந்து விட்டு) நீ எக்கேடுங் கெட்டுப் போ!

(வேகமாகப் போகிருள்.)

ஒரு : சாமியார் சொன்னதுபோல இந்தத் தாய்க்கு எவ்வளவு வெறுத்துப் போச்சு? பாத்தீங்களா! குடிச்சிக் கிடக்கும் மகன் மேலே?

(கூட்டம் மெல்ல மெல்லக் கலைகிறது.)

## காட்சி—28

காலம் : மாலை

இடம் : ஏலேலசிங்கர் இல்லம்

உறுப்பினர் : ஏலேலசிங்கர், வள்ளுவர், குப்பத்துச் செம்படவர்கள்.

(செம்படவர்கள் சிலர் ஒரு பெரிய பொன் கட்டியைச் சிரமத்துடன் தூக்கிக்கொண்டு வருகிருர்கள். உள்ளே வீட்டுக் கூடத்தின் நடுவே வள்ளுவர் வீற்றிருக்க அவருடைய காலடியில் ஏலேலசிங்கர் பணிவாக அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கிருர்.)

செம் 1: ஐயா! செட்டியார் ஐயா!

(பேச்சு மும்முரத்தில் செம்படவர்கள் கூப் பிடுவது ஏலேலசிங்கர் செவியில் விழ வில்லை.)

செம் 2: ஐயா இல்லீங்களா? அம்மா!

(அடுக்களையிலிருந்து தற்செயலாக வெளியே வந்த மரகதம்மாள் செம்படவர்கள் கூப்பிடுவதைக் கேட்டு விட்டு கணவருக்குத் தெரிவிக்கிறார்.)

**மர :** உங்களை யாரோ கூப்பிடுறாங்க போலிருக்கே?

**ஏலே :** ஊம். யாரது?

**செம் :** நான்தாங்க சாமி.

**ஏலே :** இதோ வந்துவிட்டேன். (வள்ளுவரைப் பார்த்து) ஐயா! ஒரு நிமிடம் யாரென்று பார்த்துவிட்டு வருகிறேன். (எழுந்து வாயிலுக்குப் போகிறார்.)

**செம் :** நாங்கள் காலையிலே மீன் பிடிக்கப் போனப்போ பெரிய வலையிலே ஒரு சுறுமீன் அகப்பட்டுது. அதன் வயிற்றிலே இந்தப் பொன் கட்டி இருந்ததுங்க; ஐயா!

**ஏலே :** (வியப்புடன்) அப்படியா!

**செம் :** ஆமாங்க.

(தாங்கள் கொண்டு வந்த கட்டியை ஏலேல சிங்கர் முன்னிலையில் வைக்கிறார்கள். ஏலேலசிங்கர் அதைக் கூர்ந்து பார்க்கிறார்.)

**ஏலே :** (தமக்குள்) நாம் சிலநாட்களுக்கு முன்னே கடலில் எறிந்த பொன் கட்டியல்லவா? இது.

**செம் 1 :** இந்தப் பொன்கட்டி மேலே ஏதோ செதுக்கிக்கூட இருக்குங்கய்யா!

**ஏலே :** ஆமாம். நான் பொறித்ததுதான். (உடனே எழுந்து உள்ளே வள்ளுவரிடம் போகிறார்.) அதிசயத்தைப் பார்த்தீங்களா? ஐயா! நீங்கள் சொன்னபடி கடலில் போட்ட பொன் கட்டி மறுபடி நம்மிடமே திரும்பி வந்திருக்கிறது. நம்ம செம்படவர்கள் பிடித்த சுறுமீனின் வயிற்றி லிருந்ததாம்.

**வள் :** (புன்னகை செய்து) அது திரும்பி வரும் என்று எனக்குத் தெரியும்.

**ஏலே :** (பேராச்சரியத்துடன்) அப்படிங்களா? ஐயா!

**வள் :** ஆம். நாம் உண்மையாக உழைத்துச் சம்பாதித்ததாயிருந்தால் எப்படியும் நம்மிடமே திரும்பி வரும். அறவழியில் சம்பாதித்த பொருள் ஒருகாலும் பிற வழியில் போகாது. தெரிந்து கொள்ளுங்கள்.

**ஏலே :** இப்போது தான் எனக்கு உண்மை தெரிந்தது, ஐயா! இப்பேருண்மையை நீங்கள் முன்னொரு நாள் சொல்லாமல் சொல்லிக் காட்டி விட்டீர்கள். கள்ளர் கண்ணிலிருந்துந் தப்பி விட்டதே! என் அறியாமையைப் போக்கி வரும் உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?

**வள்** பொன்கட்டியைத் திருப்பிக் கொண்டு வந்தவர்களுக்கு ஏதாயினும் பரிசு கொடுத்தனுப்புங்கள்.

**ஏலே :** கொடுக்க வேண்டியது தான். (எழுந்து போகிறார்.)

## காட்சி—29

**காலம் :** காலை

**இடம் :** மயிலாப்பூர் வீதி

**உறுப்பினர்கள் :** கிள்ளுவன், மக்கள்.

(வீதியில் மக்கள் சிலர் பேசிக்கொண்டே போகின்றனர்.)

**மக் 1:** உங்களுக்குத் தெரியுமா? ஐயா! நம்ம ஊரிலே வள்ளுவருன்னு ஒரு நெசவாளி இருக்காரே! அவர் ஒரு நீதி நூல் இயற்றி வருகிறாராமே?

**மக் 2:** வள்ளுவரை எனக்குத் தெரியும். அவரிடம் வேட்டி, சீலைகூட வாங்கியிருக்கேன். ஆனால் அவர் பாட்டுப் பாடி வருகிறார் என்று தெரியாது.

மக் 3: நம்ம ஊர் பிரபுவான ஏலேலசிங்கரே அவரை உச்சி மேல் வைத்துப் பூசிக்கிறார் என்றால், ஏதோ சரக்கு இருக்கத்தான் செய்யும்.

(இச்சமயம் வழியே போய்க் கொண்டிருந்த ஒருவன் வாய்விட்டு ஒரு குறளைச் சொல்லிக் கொண்டு போகிறான்.)

வழிப்போக்கன் : அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? புன்கணீர் பூசல் தரும். [ஆர்வலர்

மக் 4: அதோ பாடிக்கொண்டு போகிறானே ஒரு ஆள். அவன் பாடும் பாட்டுக்கூட வள்ளுவர் பாடிய பாட்டுதான்.

மக் 1: இவரைப் போல எல்லோருக்கும் பொருந்துவதான பொது நீதியை இதுவரை யாரும் பாடியதில்லை என்றும் அந்தப் பொருளைக் கூறுவதற்குக் கருவியாகக் கையாண்டுள்ள குறள் வெண்பாவில் நூலை யாரும் பாடியதில்லை என்றும் அறிஞர்களெல்லாம் வியந்து பேசுகிறார்கள்.

(கிள்ளுவன் இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே வருகிறான்.)

கிள் : என்ன? ஒரேயடியாப் பிரமாதப் படுத்துறீங்க? அந்தப் பித்துக்குளியின் பாட்டைப்பற்றி. அனுபவத்துக்கு ஒத்து வராததையெல்லாம் வார்த்தைகளாக் கொட்டி அளந்திருக்கிறான். அவன் நெய்யும் துணிகள் விலை போவதில்லை. இப்பிடிப் பாட்டுப் பாடினுவானு ஜவுளி செலாவணியாகுமான்னு சாகசஞ் செய்யறான்.

மக் 2: கிள்ளுவா! எங்களண்டையே உன் வாய்ச் சவடாலைக் காட்டத் தொடங்கி விட்டாயே? வள்ளுவர் போன்ற மெத்தப் படித்தவர்களைப் பற்றியெல்லாம் இப்படி வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசாதே! தம்பி! கெட்டுப் போவே.

மக் 3: ஆமாம்; பெரியவங்க மனசை நோவ வைப்பது நல்லதல்ல.

**கிள் :** அந்த வள்ளுவனைப் பற்றி உங்க எல்லோரையும் விட எனக்கு நன்றாத் தெரியும். ஐயா! என் வீட்டுக்குப் பக்கத்திலேதான் அவனும் குடியிருக்கிறான். இந்த ஊரிலேயே நான்தான் அவனுக்கு முதல் சிநேகம். செட்டியாரிடங்கூட நான்தான் அறிமுகப்படுத்தினேன்.

**மக் 2 :** இருக்கலாம். தவளை கூடத்தான் தாமரைக்குப் பக்கத்திலே இருக்கு. அதுக்கு அந்தப் பூவின் மணம் தெரிந்துட்டது எனச் சொல்ல முடியுமா?

**மக் 3 :** கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

**கிள் :** (கோபத்தோடு) என்னங்க ஐயா! கிறுக்கா பேசறீங்க?

**மக் 1 :** நீ மட்டும் மக்களுக்கு அறிவு புகட்டி வரும் அறிவாளியைப் பற்றி அவதூறாகப் பேசலாமா?

**கிள் :** வள்ளுவன் சாயத்தை வெளுக்க வச்சி காட்டறேன் நான் ஒரு வம்பனை அனுப்பி. அப்பத்தான் உங்களுக்குத் தெரியும் அவனுடைய அளப்பைப்பற்றி.

**மக் 3 :** போ; போ. வம்பை விலைக்கு வாங்கி மடியிலே கட்டிக்கோ.

(அவர்கள் போகின்றனர். கிள்ளுவன் அவர்களுக்கு 'வெவ்வே' என்று அழகு காட்டுகிறான்.)

## காட்சி—30

**காலம் :** பிற்பகல்

**இடம் :** வள்ளுவர் வீடு

**உறுப்பினர் :** வள்ளுவர், கிள்ளுவன், வம்பன்.

(கிள்ளுவன் வம்பனொருவனைக் கூட்டிக் கொண்டு வந்து வள்ளுவர் வீட்டிற்குப் போக விட்டு தான் வெளியே ஒளிந்து நிற்கின்றான்.)

கிள் : டேட, மாடசாமி! வள்ளுவர் வீட்டிற்குள்தான் இருக்கிருர். நான் சொன்னபடி போய்க் கேளு; பயப்படாதே!

வம் : எனக்குச் சொல்லித் தருகிருயா? நீ போ. பார்த்துக் கொள்கிறேன். அவர் என்னை விழுங்கி விடுவாரா? என்ன!

கிள் : வாய் வீரம் பெரிசில்லே, மாடா? நான் சொல்லிக் கொடுத்த குறளெல்லாம் ஞாபகமிருக்கட்டும். ஒன்னுக் கொன்னு உளறிக் கொட்டிடாதே!

வம் : சரிதான்; போ கிறுக்கண்ணேன்!

(வம்பன் வள்ளுவர் வீட்டினுள் எட்டிப் பார்க்கிருன். அதே சமயத்தில் வள்ளுவர் தறியை விட்டு எழுந்து வருகிருர்.)

வம் : ஐயா! ஐயா!

வள் : யாரது? என்ன வேணும்?

வம் : வேட்டித் துணி வாங்க வந்தேனுங்க.

வள் : அப்படியா? இரு. இதோ எடுத்துக்கொண்டு வருகிறேன். எத்தனை முழ வேட்டி வேணும்? மேல் துண்டும் வேணுமா?

வம் : நாலு முழம் வேட்டி வேணும். அதுக்குத் தகுந்தாப் போல மேல் துண்டும் வேணும்! உங்களிடம் இருப்பதையெல்லாம் கொண்டாங்க; பார்ப்போம்.

(வள்ளுவர் அறைக்குள் சென்று சில வேட்டிகளையும் மேல் துண்டுகளையும் கொண்டு வருகிருர்.)

வள் : இதோ பார்; தம்பி! விதவிதமான கரை போட்ட வேட்டிகளும், துண்டுகளும் இருக்கு. இவற்றில் எது பிடித்திருக்கிறதோ அதைப் பொறுக்கி எடுத்துக்கோ.

(வம்பன் தன்முன் வள்ளுவர் வைத்த வேட்டிகளையும், மேல் துண்டுகளையும் கண்டபடி பிரித்துப் பார்த்து தாறுமாருகக்

கீழே போடுகிறன். வள்ளுவர் பொறுமை யாக இதையெல்லாம் பார்த்துக் கொண்டி ருக்கிறர். வம்பன் குறும்புச் சிரிப்புடன் வள்ளுவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே துணிகளைத் திருப்பித் திருப்பிப் பார்க் கிறன். கடைசியாக அவன் ஒரு வேட்டி யை எடுத்து வள்ளுவர் முன் காட்டி விலை கேட்கிறன்.)

வம் : இந்த வேட்டியின் விலை என்ன? ஐயா!

வள் : ஐந்து பணம்.

வம் : (அவ்வேட்டியை இரண்டாகக் கிழித்து ஒரு பாதியை வள்ளுவரிடம் காட்டி) இதன் விலை என்ன சொல்லுங்க?

வள் : (அப்போதும் பொறுமையாகவே) மூன்று பணம்.

வம் : (குறும்பை விடாமலே அப்பாதி வேட்டியையும் பாதி யாகக் கிழித்து) இதன் விலை?

வள் : (சினம் பொங்க) இதன் விலையா? இது தான்.

(கன்னத்தில் ஓங்கி அறைகிறர். அறை யின் சப்தங் கேட்டு கிள்ளுவன் கிடுகிடுத் துப் போகிறன். வம்பன் கன்னத்தைக் கையால் பிடித்துக் கொள்ளுகிறன்.)

வம் : (திகைத்துப் போய்) என்னய்யா! இப்படி அறைந்து விட்டீங்க. உங்களைப் பொறுமையின் பொக்கிஷம் என் ருங்களே. நீங்கள் பொறுமையைப் பற்றி பத்துக் குறள் கள் கூடப் பாடியிருக்கிறீங்களாமே!

வள் : ஆமாம். பாடியிருக்கிறேன்.

வம் : மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல்.

என்று சொல்லியிருக்கும் நீங்கள் இப்பிடிப் பொறுமை யிழந்து என்னை அடிக்கலாமா?

வள் : (கோப நகை செய்து) ஓ! நான் எழுதியிருக்கிற குறள் கூட உனக்குத் தெரிந்திருக்கிறதே! அதைப் படித்து விட்டுத் தான் இப்படிப் பேரம் பண்ண வந்தாயா?

வம் : ஆமாம். உங்களுடைய பொறுமையைச் சோதிக்கத் தான் கிள்ளுவன் என்னை அனுப்பிவைத்தான்.

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே! வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

என்று கூடப் பாடியிருப்பதாகச்சொன்ருனே, அந்த மாங் காய் மடையன். நீங்க என்னடான்ரு.........?

(தன்னைப் பற்றிச் சொல்வதைக் கேட்டுப் பயந்து தப்பியோட முயல்கிருன் கிள்ளுவன்).

வள் : ஓ! இது கிள்ளுவனின் குறும்புதானு?

வம் : ஆமாம்; அவன் விஷமஞ் செய்ய நான் வாங்கிக் கட்டிக் கொண்டேன் உங்களிடம்.

வள் : அது மட்டுமா சொன்னேன்?

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்.

என்று கூடத்தான் விளக்கமாகப் பாடியிருக்கிறேன். ஆனல், அது எந்த அளவு வரை? எதற்கும் ஒரு அளவு உண்டல்லா? அது போல பொறுமை காட்டுவதற்கும் ஒரு அளவு உண்டு. நான் இன்னென்றையும் சொல்லி யிருக்கிறேன். அதைக் கிள்ளுவன் உனக்குச் சொல்ல வில்லை போலிருக்கிறது.

வம் : அது என்ன? ஐயா!

வள் : கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின் ஆற்றுபவர் கண்இழுக்கு.

என்றும் நான் சொல்லியிருக்கிறேன். இன்னொரு குறளை யும் தெரிந்து கொண்டு போ.

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றுதார் இன்னா செயல்.

(இது கேட்டுக் கிள்ளுவன் வம்பனும் வள்ளுவரும் தன்னை வந்து பிடித்துக் கொள்வார்களோ என்று அஞ்சித் தலை தெறிக்க ஓடுகிறான்.)

வம் : இவ்வளவு விஷயம் இருக்கா? இதெல்லாந் தெரிஞ்சிருந்தா நான் கிள்ளுவன் பேச்சைக் கேட்டுட்டு இப்பிடிக் கிறுக்குத்தனஞ் செய்திருக்க மாட்டேன். நீங்க செவிட்டில் அறைந்த அறை என் புத்தியைத் தெளிவிச்சுட்டுது. இனி நான் யாருடைய கயமைப் பேச்சையும் கேட்க மாட்டேன். என்னைப் பெரு மனசு வச்சு மன்னிச்சிடுங்க, ஐயா!

வள் : ஆண்டவன் உன்னை மன்னிக்கட்டும். இனி நீ எடுப்பார் கைப் பிள்ளையா யிராதே; தம்பி! போய் வா.

வம் : இனி புத்திசாலித்தனமா யிருந்து பிழைச்சுக்குவேன். வருகிறேன்; ஐயா! (போகிறான்).

வள் : (தனக்குள்) எய்தவன் இருக்க அம்பை நோவானேன்! பாவம்! அவனை அடித்து விட்டேன். (இரக்கத்தோடு அவனைப் பார்க்கிறார்.)

## காட்சி—31

காலம் : பிற்பகல்

இடம் : ஏலேலசிங்கர் வீடு

உறுப்பினர் : வள்ளுவர், ஏலேலசிங்கர், பொது மக்கள் சிலர்.

(ஏழைகள் சிலர் வீடு வீடாக நுழைந்து பிச்சை கேட்கின்றனர். வள்ளுவர் இக் காட்சியைப் பார்த்துக் கொண்டே அவ்வழி யாக வருகிறார்.)

ஏழை 1 : பசி காதை அடைக்குது. சோறு இருந்தால் ஒரு கவளம் போடுங்கன்னுட்டு கரடியாய்க் கத்தினாலும் எந்த மகராஜியும் போடறதாய்க் காணோம்.

ஏழை 2 : அவங்கதான் எங்கே போவாங்க? பருவ மழை பெய்யாம தான், மானம் சதி பண்ணிடுதே? விளைஞ்சு வந் தாத்தானே எல்லார் வாய்க்கும் சோறும் கறியும் தாரான மாய்க் கிடைக்கும்.

ஏழை 3 : நம்ம ஊர்லே மட்டும் இந்த நிலைமைன்னு நினைக் காதீங்க. தெற்கத்தி சீமையெல்லாம்கூட அப்பிடித்தான் இருக்காம், பஞ்சம், பட்டினி, பசி என்று. குறை காலத்தை நாம எப்படித்தான் காலந் தள்ளப் போறமோ! வருகிற அறுவடையிலும் மகசூல் இல்லேன்னா நம்ம கதி அதோ கதிதான்.

ஏ 1 : கண்ணை இருட்டிக்கினே போவுது. உப்புப் போட்ட தண்ணி தான் கிடைக்கல்லே. பச்சதண்ணியாச்சும் ஒரு வாய் கிடைக்குமா? (கேட்டுக் கொண்டே சுருண்டு கீழே விழுகிறான்.)

ஏ 2 : அடடே! ஆள் மயங்கி விட்டாரே! ஓடிப்போய் ஒரு குவளையில் தண்ணி கொண்டாங்கய்யா.

(இது கேட்டு ஒருவர் எதிரில் உள்ள ஒரு வீட்டுக்கு ஓடுகிறார். இக்காட்சியைக் கண்ட

வள்ளுவர் கண்ணீர் உகுக்கிறார். பின் ஏதோ நினைத்துக்கொண்டு ஏலேலசிங்கர் வீடு நோக்கி விரைவாகப் போகிறார். அதே சமயத்தில் எதிரிலிருந்து ஏலேலசிங்கரே வருகிறார். அவர் வள்ளுவரைப் பார்த்து விட்டு வேகமாக வருகிறார்.)

ஏலே : எங்கே போகிறீர்கள்; ஐயா?

வள் : (ஏறிட்டுப் பார்த்து) ஓ! நீங்கள் தானா? உங்களைத்தான் பார்க்கப் போய்க்கொண்டிருக்கிறேன்.

ஏலே : என்னைப் பார்க்க நீங்களே வரவேண்டுமா? என்ன! யாரிடமாயினும் ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா? நான் ஓடோடி வருவேனே!

வள் : அது இருக்கட்டும். நம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக் கிறதே! மக்கள் பட்டினி கிடந்து பசிப்பிணியால் வாடு கிறார்களே? உங்களுக்குத் தெரியுமா?

ஏலே : நன்றாகக் கேட்டீர்களே? ஐயா! வாணிபம் செய்பவ னுக்கு நாட்டு நடப்புத் தெரியாமல் இருக்கமுடியுமா? ஒரு சிறு மாறுதலையும் நிகழ்ச்சியையும் அவன் கணித்து வைத்திருப்பானே!

வள் : இந்த ஊரில் நீங்கள் தானே பெரிய மனிதர், பெரிய பணக்காரர், எல்லாம். நீங்களே நான் என்ன செய்ய முடியும் என்று சொன்னால், மற்றவர்கள் என்ன செய் வார்கள்?

ஏலே : இதெல்லாம் அரசன் கவனித்துச் செய்யக்கூடிய காரி யங்கள், ஐயா! என்ன செல்வமிருந்தாலும் என் போன்ற வர்களால் சாத்தியமானவையல்ல.

வள் : எல்லாவற்றையுமே அரசன் செய்வான், அரசாங்கம் செய்யும் என்று நாம் கை கட்டிக் கொண்டிருந்து விட் டால் காரியம் எப்படி நடக்கும்? நீங்கள் நிலபுல வசதிகள்

நிரம்ப உடையவர்கள். செல்வம் படைத்தவர்கள். இங் கில்லாத பொருளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய் தும் நம் நாட்டில் மிகுதியாக விளையக்கூடிய பொருள்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் கொள்ளை லாபம் சம் பாதிப்பவர்கள். ஆதலால், உங்களைப் போல் சகல வசதி களும் படைத்தவர்கள் மனம் வைத்தால், எப்பேர்ப்பட்ட பஞ்சத்தையும் போக்கிவிட முடியும். பட்டினியைத் தீர்த்து மக்களின் பசிப்பிணியை உடனடியாக மாற்ற முடியும்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற உண்மையை அறிந்து நடவுங்கள்.

ஏலே: இப்போது நான் என்ன செய்யவேண்டும்? அதைச் சொல்லுங்கள், ஐயா! நான் உடனே செய்கிறேன்.

வள் : நீங்கள் வேறொன்றும் செய்யவேண்டாம். ஏலேல சிங் கரே! உங்கள் கையிருப்பில் வைத்திருக்கும் நெல்லையும் அரிசியையும் பட்டினியாலும் பசியாலும் வாடிக் கொண்டு இருக்கும் மக்களுக்கு எவ்வளவு குறைந்த விலைக்குக் கொடுக்க முடியுமோ, அவ்வளவு கொடுத்து உதவுங்கள். அதுபோதும்.

ஏலே: இப்போதே போய் நீங்கள் சொன்னபடியே செய் கிறேன்; ஐயா! ஆபத்துக்குதவா விட்டால் அப்புறம் என்ன இருக்கிறது?

## காட்சி—32

காலம் : காலை

இடம் : ஏலேலசிங்கர் வீடு

உறுப்பினர் : ஏலேலசிங்கர், வள்ளுவர், ஏழை மக்கள்.

(ஏலேலசிங்கர் மிகக் குறைந்த விலைக்கு நெல்லையும் அரிசியையும் ஏழை மக்களுக்கு

விற்பனை செய்கிறார். இவர் அரிசியையும் நெல்லையும் அளந்து போடப் போட (அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபியைப் போல) நெற்களஞ்சியத்தில் நெல்லும், அரிசியும் சிறிதும் குறையாமல் பெருகிக் கொண்டே போகிறது. கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்த வள்ளுவர் இதைக் கண்டு புன்முறுவல் செய்கிறார். ஏலேல சிங்கர் பேராச்சரியத்தால் திகைத்துப் போகிறார். காசை வாங்கிக் கொண்டு நெல்லையும் அரிசியையும் அளந்து போடும் அவரது ஆட்களும் கை சளைத்துக் களைப்புற்று நிற்கின்றனர்.)

ஏலே : என்ன இது? வியப்பாயிருக்கிறதே!

வள் : (முன் வந்து) இதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை, ஏலேலசிங்கரே! உங்கள் மனதைப்போல நெற்களஞ்சியமும் விரிவடைந்து விட்டது. இரக்கத்தால் உங்கள் நெஞ்சில் அன்பு ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடுவது போல, நெற்களஞ்சியமும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிக் கொண்டே போகிறது. உங்கள் கஜானாவும் பொருளால் நிரம்புகிறது. ஏழை மக்கள் வயிறும் சோற்றால் நிரம்புகிறது.

ஏலே : எல்லாம் ஐயா அவர்களுடைய அறிவுரையைக் கேட்டதால் ஏற்பட்ட நல்ல விளைவு இது. நான் இப்பிறவி எடுத்ததின் பயனை இன்று அடைந்து விட்டேன்.

வள் : மக்களிடம் ஜீவதயை காட்டுபவர்கள் ஆண்டவனுடைய அருளை நிச்சயம் பெறுவார்கள். இந்த ஜீவகாருண்யத் தொண்டைத் தொடர்ந்து நடத்தி வாருங்கள்.

ஏலே : அப்படியே! ஐயா! (ஆட்களைப் பார்த்து) நெற்களஞ்சியத்தைத் திறந்து விட்டுவிடுங்கள். இனி வருபவர்கள்

அவர்களாகவே தங்களுக்கு வேண்டிய அரிசியையும் நெல்லையும் இலவசமாக எடுத்துக் கொண்டு போகட்டும்.

**வள் :** உங்களுடைய தயாவுள்ளத்துக்கு என் மனமார்ந்த பாராட்டு.

**ஏலே :** நன்றி; ஐயா!

(மக்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்கின்றனர். ஏலேல சிங்கர் எல்லோரையும் பார்த்துக் கை கூப்பி வணங்குகிறார்.)

## காட்சி—33

**காலம்:** பிற்பகல்

**இடம்:** திருவொற்றியூர்

**உறுப்பினர்:** வள்ளுவர், வேதியர்கள், ஊர் மக்கள்

(திருவொற்றியூர் கோயில் வெளி மண்டபத்தின் எதிரில் அமைக்கப்பட்டிருக்கும் யாக குண்டத்தில் ஓமப்புகை புகைந்து கொண்டிருக்கிறது. அதைச் சுற்றி வேதியர்கள் சிலர் அமர்ந்து வேத மந்திரங்களை ஓதிக் கொண்டிருக்கின்றனர். சிலர் யாக குண்டத்தில் சமுத்துக்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றனர். சிலர் எரிகிற நெருப்பில் நெய்யை ஊற்றிக்கொண்டு இருக்கின்றனர். யாக சாலையின் ஒரு கம்பத்தில் சில ஆடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மக்கள் சிலர் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். வீதி வழியாக வள்ளுவர் வருகிறார்.)

**மக் 1 :** இதெல்லாம் என்ன? ஐயா!

**மக் 2 :** யாகம் நடக்குது.

மக் 3 : ஆடுகளை ஏன் கட்டி வச்சிருக்காங்க?

மக் 1 : இது தெரியாதா உனக்கு? யாகத்துலே ஆவுதி செய்யறத்துக்காவ.

மக் 2 : அப்படின்னு?

மக் 3 : ஆடுகளை வெட்டி அதன் உறுப்புகளை எரிகிற நெருப்பில் போட்டுப் பொசுக்குவாங்க.

மக் 2 : அய்யய்ய! அப்புறம்?

மக் 1 : அப்புறம் என்ன? நெருப்பில் வெந்த இறைச்சியை இவங்க பங்கு போட்டுகிட்டுத் தின்பாங்க.

மக் 2 ; கோயில் மண்டபத்து முன்னுலா இந்த அசிங்கத்தையெல்லாம் செய்யருங்க? கோயில் அதிகாரிங்க இதை எப்பிடி அநுமதிக்கிருங்க?

மக் 1 : உலக க்ஷேமத்துக்காவ அல்லவா யாகம் செய்யருங்களாம்? அதை யார் ஆட்சேபிக்க முடியும்?

மக் 2 : வாயில்லா ஜீவன்களை வதைச்சா யாகம்?

மக் 3 : மெள்ளப் பேசய்யா! காதுலே விழப் போவுது.

(இச்சமயம் வள்ளுவர் யாகம் நடக்கும் இடத்துக்கு வருகிருர். யாக குண்டத்துக்கு அருகிலிருந்து இரண்டு வேதியர்கள், ஆடு கட்டியிருக்கும் இடத்திற்கு வருகிருர்கள்.)

வேதியர் 1 : இங்கென்ன வேடிக்கை? போங்க! போங்க! கூட்டம் போடாதீங்க.

வே 2 : ஆமாம்; போங்கய்யா! உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு.

வள் : (வேதியர்களைப் பார்த்து) ஏதோ செய்கிறீர்களே! அது என்ன என்று தெரிந்து கொள்ளணும் என்கிற ஆசையாலே பார்க்கிருர்கள்.

வே 1 : பெரிய யாகம் செய்கிறோம். பார்த்தாலும் அது உங்களுக்குப் புரியாது.

வள் : எதற்காகவோ இது?

வே 2 : லோக க்ஷேமத்துக்காகச் செய்கிறோம். புத்திர சம்பத்து முதலியன பெறுவதற்காகவும் இதைச் செய்யலாம்.

வள் : அது சரி! இதோ கட்டியிருக்கிறீர்களே ஆடுகள்! அவை எதற்காக?

வே 1 : யாகத்துக்காகத்தான்.

வள் : நீங்கள் செய்கிற யாகத்துக்கு இந்த ஆடுகள் எப்படிப் பயன்படுகின்றன?

வே 2 : தேவர்களைப் பிரீதி செய்வதற்காக அவைகளைப் பலி கொடுப்போம்.

வள் : தேவர்கள் ஆடுகளைக் கேட்கின்றார்களா?

வே 2 : ஆடுகளை மட்டுமல்ல. அசுவம் முதலியவைகளையும் கூட. உங்களைப் பார்த்தால் படித்தவர் மாதிரி தெரிகிறது. நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அஜமேத யாகம், அசுவமேத யாகம் என்று?

(யாக குண்டத்தண்டை மந்திரம் ஓதிக் கொண்டிருந்தவர்களில் மற்றும் சில வேதியர்களும் எழுந்து அங்கே வருகின்றனர்.)

வே 1 : அங்கே என்னய்யா பேச்சு? அலுவல்களைக் கவனிக்காமல்.

வே 2 : யாரது?

வே 3 : யாரோ தெரியல்லே. படித்தவர் மாதிரி இருக்கு. என்ன செய்கிறீங்கன்னு கேட்டார்; சொல்லிக் கொண்டிருந்தேன்.

வள் : ஆமாம்; ஐயா! நான்தான் கேட்டேன். வேள்வி செய்வதற்கு ஆடு, மாடு, குதிரைகள் எல்லாம் எதற்கு? வெறும்

மந்திரம் ஓதுவது, பிரார்த்தனை செய்வது போதாதா என்ற சந்தேகம் எனக்கு.

வே 1 : கண்டவர்களிடம் வாய் கொடுத்துப் பேசக்கூடா தென்று சொல்லியிருக்கிறேனே! கேட்டால்தானே? கேள்வி எப்படி வருகிறது பார்த்தாயா? (ஏளனமாக) ஐயா கேட்கிறாரு. பதில் சொல்லு.

வள் : ஏன் அவரை அப்படிக் கோபிக்கிறீர்கள்? நான் கேட்டதில் ஏதாயினும் தப்பிருந்தால் சொல்லுங்க.

வே 1 : (கோபமாக) என்ன ஐயா! மகா கேள்வி கேட்டு விட்டீர் பிரகஸ்பதி மாதிரி? விதண்டா வாதமாகப் பேசிக் கொண்டு.........

வே 2 : காலம் கெட்டுப் போச்சு. கலி பிறந்து விட்டதோ இல்லையோ?

வள் : காலத்துக்கும் மனிதன் கண்டபடி செய்வதற்கும் என்ன சம்பந்தம்? ஐயா!

வே 3 : நீங்கள் என்னத்தைக் கண்டு விட்டீர்களோ? வேதங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற வேள்விகளைத்தான் நாங்கள் செய்கிறோம்.

வே 2 : அதுவும் எங்களுக்காகவா? எல்லா மக்களுடைய க்ஷேம நலத்துக்காகவே.

வள் : வாயில்லா ஜீவன்களைப் பலி கொடுத்து நமக்கு என்ன க்ஷேமம் வேண்டியிருக்கு? மனிதர்களுக்காக அவை ஏன் உயிர்களை இழக்கணும்? தேவதைகள் ஆடுமாடுகளின் உயிர்களை எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்கின்றனவா?

வே 1 : (ஆத்திரமாக) நீங்கள் யார் ஐயா? எங்களைப் பார்த்து வாய்க்கு வந்தவாறு கேள்வி கேட்டுக் கொண்டிருப்பது? உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகப் போகிறீர்களா? இல்லையா!

மக் 1 : என்ன ஐயா! அவரை மிரட்டறே? நியாயத்தைக் கேட்டா?

வன் : (கையமர்த்தி) நீங்கள் இருங்கள்.—வேதியரே! விலங்குகளை நாலு பேர் கண்முன்னால் கொலை செய்தால் அதை இரக்க நெஞ்சமுள்ள யாரும் கேட்கத்தான் செய்வார். நம்ம மூதாதையர்கள் காலத்திலேயே புத்தர் பிரானும் மகா வீரரும் இந்தக் கொலை வேள்வியை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்; எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். எத்தனையோ யாகங்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். தெரியாதா உங்களுக்கு?

வே 1 : ஓ! நீர் அந்த வேத வேள்வியை நிந்தனை செய்து பரம நாத்திகர்களாகத் திரிந்த புத்தன், அருகன் வகையராவைச் சேர்ந்தவரோ? இது தெரியாமல் இவ்வளவு நேரம் உம்மிடம் பேசியிருந்து விட்டோமே! மகா பாவந்தான் வந்து சேரும் எங்களுக்கு.

வன் : (சீற்றத்துடன்) இந்த ஆடுகளின் ஆவிகளைப் போக்கப் போகிறீர்களே. அவைகளைத் துடிக்கப் பதைக்க வைக்கப் போகிறீர்களே. இக்கொடுஞ் செயல்தான் உங்களுக்குப் பாவத்தை உண்டாக்கும்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று."

என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

வே 1 : அட! இவரு கவி பாடுகிறாரு.

வன் : என்னைக் கேலி செய்வது இருக்கட்டும். முதலில் இந்தக் கொலை பாதகத்தை நிறுத்துங்கள். உங்களை இந்த ஆடுகள் மட்டும் அல்லாமல் எல்லா உயிர்களுமே நீங்கள் இருக்கும் திக்கு நோக்கி கைகூப்பித் தொழும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

மக் 1 : ஐயா சொல்றது நியாயந்தான், ஐயன்மாரே!

வே 1 : ரொம்ப நியாயத்தைக் கண்டுவிட்டீர்கள்? வேத-சாஸ்திரம் படித்துப் பாண்டித்தியம் பெற்றுள்ள எங்களை விட உங்களுக்கு தரும நியாயம் தெரிந்துபோச்சோ?

வே 2 : அவர்களோடு என்ன பேச்சு? ஓய்! நீர் ஆடுகளை அவிழ்த்துக்கொண்டு வாரும்.

(இரு வேதியர்கள் ஆடுகளை அவிழ்க்கப் போகிருர்கள்.)

வள் : (வருத்தமாக) எவ்வளவு சொல்லியும் இவர்கள் கேட்க-வில்லையே?

மக் 1 : மரியாதையாகச் சொன்னல் கேட்க மாட்டாங்க. ரெண்டுபேர் எங்களோடு வாங்கய்யா?

மக் 2 : இதோ வந்துட்டோம்.

(ஆடு மாடுகளை அவிழ்த்துக் கொண்டு இருந்த வேதியர்களிடம் மக்கள் வேகமாகப் போகின்றனர். போய் அவர்கள் பிடித்திருந்த ஆடுகளை விடுவித்துத் துரிதமாக ஓட்டிக் கொண்டு செல்கின்றனர். வள்ளுவர் இது கண்டு மகிழ்ச்சி கொள்ளுகிருர்.)

வள் : நல்ல வேலை செய்தீர்கள். உங்களுக்கு ஆண்டவன் அருள் நிச்சயம் கிடைக்கும்.

வே 1 : ஐயையோ! சூத்திர பசங்க செய்யற அக்கிரமத்தைப் பார்த்தீங்களா? கேள்வி கேட்பார் இல்லையா?

வே 2 : இவன்கள் ரௌரவாதி நரகத்துக்குத்தான் போவான்கள்.

மக் 2 : சரிதான் போங்கய்யா! நாங்க நரகத்துக்குப் போறோம். நீங்க இப்போதே மோட்சத்துக்குப் போங்க.

(கேலி செய்து கொண்டே போகின்றனர். வேதியர்கள் அவர்களை வசை பாடிக்

கொண்டே கம்புகளைத் தூக்கிக் காட்டுகிறார்கள். வள்ளுவர் இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகல்கிறார்.)

## காட்சி 34

காலம் : இரவு முதல் சாமம்

இடம் : கோவூர் கிழார் வீடு

உறுப்பினர்கள் : கிள்ளுவன், பூதகி, நக்கண்ணன், வள்ளுவர், மக்கள்.

(கிள்ளுவன் தன் வீட்டுத் திண்ணையில் சாய்ந்திருக்கிறான். எதிர் வரிசையில் நக்கண்ணன் இருட்டில் பம்பிப்பதுங்கிப் போகிறான். இதைக் கவனித்துவிட்ட கிள்ளுவன் திண்ணையில் இருந்து பரபரப்பாக இறங்குகிறான்.)

கிள் : (வீட்டினுள்ளே பார்த்தவாறு) பூதகி! பூதகி! யாரோ திருடன் போலிருக்கு. எதிர் வீட்டுப்பக்கமாப் போறான். ஓடி வாயேன்.

பூத : (உள்ளிருந்தவாறே) உனக்கு இதே வேலையா போச்சு, ஐயா! யார் எங்கே போறாங்க, வாறாங்கன்னு கணக்கெடுக்கிறது? திருடன் நம்ம வீட்டிலே நுழையலையே?

கிள் : எதிர்த்த வீட்டுலே நுழையறவன் நம்ம வீட்டுக்கு வர எவ்வளவு நாழியாகும்? ஏதானு காணாமே போயிட்டா மட்டும் 'லபோ திபோ'ன்னு கத்தத் தெரியும் உனக்கு.

பூத : (ஆத்திரத்தோடு வெளியே வந்து) நீ இப்போ என்ன செய்யணுமிங்கிறே?

கிள் : கோவூர்கிழார்கூட ஊரிலே இல்லே. ஏதோ ஜோலியா காலையிலேதான் குன்றத்தூருக்குப் போயிட்டு வரேன்னு

சொல்லிட்டுப் போனுர். எதிர்த்தாப் போலிருக்கிற நம்மெ நம்பித்தான் அவரு பொஞ்சாதியைத் தனியா விட்டுட்டுப் போயிருக்கார். இந்த மாதிரி சந்தர்ப்பத்துலே நாம ஒத்தாசையா இல்லேன்னு, நாளை நமக்கு ஒன்னு ஆனு மற்றவங்க எப்பிடி உதவியா வருவாங்க?

பூத : (எரிச்சலாக) அதுதான் என்ன செய்யணும்னு கேக்கறேனே?

கிள் : வா! நாம ரெண்டுபேரும் போய்ப் பார்க்கலாம். அங்கே யாரு போனது? திருடன்தானுன்னு.

பூத : (ஏளனமாக) பொம்மனுட்டி நான் உன்கூட வரணுமா? போய்ப் பார்த்துட்டுவர உனக்குத் தைரியமில்லே? நீயும் ஒரு ஆம்பிளையா வந்து பொறந்துட்டியே மீசையெ வைச்சிக்கினு...?

கிள் : என்ன பூதகி! அப்படி சொல்லிட்டே? (மீசைமீது கை வைத்து) நான் ஆம்பிள்ளே சிங்கம். தெரிஞ்சுக்கோ! எனக்கொன்னும் பயமில்லே. இதோ போறேன். திருடனு இருந்தா அப்பிடியே பிடிச்சுத் தள்ளிக்கினு வந்துடுறேன், பாரு.

பூத : (சிரித்து) அதுதான் வேணுங்கறேன். போயிட்டு வா! என் ஆம்பிளே சிங்கமே!

(கிள்ளுவன் மிடுக்காகப் போகிருன். சிறிது தூரம் போனதுமே அச்சத்தால் அவன் நடை தயங்குகிறது. இதற்குள் சிறிது முன் சென்ற ஆள் மதில் மீதேறிப் புறக்கடையில் குதித்து விடுகிருன். கிள்ளுவன் மதிலோரம் போய் உற்றுக் கவனிக்கிருன். சிறிது நேரம் வரை எவ்வித சந்தடியும் கேட்காமலிருக்கவே, அவன் திரும்ப முயல்கிருன். இச்சமயம் புறக்கடைக் கதவு திறப்பது போல ஓசை கேட்கிறது. ஆண்குரலொன்று மெல்லப் பேசும் ஒலியும் கேட்கிறது.)

சுக் : (மெல்லிய குரலில்) பெருந்தேவி! பெருந்தேவி!

பெ : (அதட்டலாக) யாரது?

சுக் : நான் தான் பெருந்தேவி! தெரியலையா?

பெ : நான் தான் என்றால்?

சுக் : என்ன இப்படிக் கேட்கிறாயே? நான் உன்னை நாடி வந்திருப்பது தெரிந்துதானே கதவைத் திறந்துகிட்டுக் கொல்லைப்புறம் வந்தே? என்னைத் தெரியாதது போல யாரு யாருன்னு அதட்டறியே!

பெ : பொம்மனாட்டி புழக்கடைக்கு வந்தா நீ யாருய்யா திருட்டுத் தனமா வந்து வாய்க்கு வந்தபடி பேசறது? நீ எந்தப் பக்கமா உள்ளே வந்தே? எதுக்கு வந்தே? அதுவும், ஆம்பிளை வீட்டுலே இல்லாத சமயமாப் பார்த்து.

சுக் : உன் ஆம்படையான் வெளியூருக்குப் போயிருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டுத்தான் நான் வந்தேன். இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமான்னு எதிர்பார்த்து எத்தனை நாளா ஏங்கிக்கிட்டிருந்தேன்.

பெ : சீ! என்ன பேச்சய்யா பேசறே? இருட்டுலே உன் மொகரக்கட்டை தெரியலே காறித் துப்புறதுக்கு.

சுக் : நான் யாருன்னு தெரிஞ்சா இப்படியெல்லாம் பேச மாட்டே? பெருந்தேவி! அதிர்ஷ்டம் நம்மெத் தேடி வந்திருக்குதுன்னு உச்சி குளிர்ந்து போயிடுவே. என்னை இரண்டு கையையும் நீட்டி வரவேற்பே.

பெ : ஒருத்தர் வூட்டுலே அத்துமீறி அர்த்த இராத்திரியிலே திருடன்போல நுழையறவன் எப்படிப் பெரிய மனுஷனா இருக்க முடியுமின்னு தெரியலையே!

சுக் : விஷயம் தெரியாமே பேசறே! உன் அழகுதான் என்னை என் பெருமை, அந்தஸ்து, பணம் எல்லாத்தையும் மறந்துட்டு வர வைச்சிருக்கு. உன்னை முதல் முதலா எப்பப் பார்த்தேனோ அப்போதிருந்தே என் மனசெ உன்னிடம்

பறி கொடுத்திட்டேன். இரவும் பகலும் உன் நினைவே என்னை வாட்டி வதைச்சிக்கிட்டு இருக்கு. நீ தண்ணீர் மொண்டு வர குளத்துக்குப் போகிற போதும் வருகிற போதும், சாமி கும்பிடக் கோயிலுக்குப் போய் வருகிற போதும் பைத்தியக்காரன் போல அல்லவா உன்னைப் பின் தொடர்ந்துகிட்டு இருக்கிறேன். உன்னைத் தனியா சந்திச்சு என் ஆசையைத் தெரிவிக்கலாமின்னு நீ தனியா வர்றதே இல்லையே? உன்னோடு சதா பொம்மனாட்டிங்க நாலுபேர் வந்துகிட்டே இருக்காங்க.

பெ : உன்னைப்போல கயவாலிப் பயல்கள் யாரானும் வம்பு தும்பு பண்ணப் போறாங்கன்னுதான் நாங்க எங்கே போனாலும் கும்பலாப் போறோம்; வாறோம்.

கக் : அப்படியெல்லாம் சொல்லாதே; பெருந்தேவி! நான் சில துக்கிரிகளைப்போல கண்ட கண்ட பொண்ணுங்களையெல்லாம் பார்த்துப் பல்லை இளிக்கிறவன் இல்லே. முன்பிறவி தொடர்போ என்னமோ உன்னைப் பார்த்துத்தான் என் மனம் பித்துப் பிடித்துப் போயிருக்கு.

பெ : என்னய்யா! வாய்க்கு வாய் பெருந்தேவி, பெருந்தேவின்னு கூப்பிட்டுக்கிட்டு. தாலி கட்டினவர்கூட அப்படிக் கூப்பிடறதில்லே பேரிட்டு. நீ என் பேரைக்கூடல்ல தெரிஞ்சு வைச்சிருக்கே? நீ எங்கிருக்கிறவன்னு தெரியலையே?

கக் : எல்லாம் உங்க வீட்டுப்பக்கத்திலே இருக்கிறவன் தான்; இப்ப உன் பக்கத்துலே இருக்கிறது மாதிரி.

(அவளை நெருங்கி நிற்கிறான்.)

பெ : (கோபத்துடன்) என்னய்யா! நெருங்கி நெருங்கி வர்றே! உடனே இந்த இடத்தை விட்டுப் போறையா? இல்லை; விளக்குமாத்துப் பூசை வேணுமா?

(ஏதோ எடுக்கத் தடவுவது போலச் சத்தம் கேட்கிறது.)

நக் : மரியாதையில்லாமே பேசறே; பெருந்தேவி! நீ என்னை யாருன்னு தெரிஞ்சிக்காமே.

பெ : நீ யாராயிருந்தாலும் என் கால் தூசுக்குச் சமம். போ! வெளியே உடனே! இல்லேன்னு கூச்சல் போட்டு ஊரைக் கூட்டிடுவேன்.

நக் : என்ன! பயங் காட்டுறையா? இது பனங்காட்டு நரி; உன் சலசலப்புக்குப் பயப்படாது. நீயா என் குறிப்பறிந்து இணங்கி வந்திடுவேன்னு இந்நேரம் இதமாப் பேசிக்கிட்டிருந்தேன். இல்லையானு......

பெ : உன் நரித்தனம் இந்தப் பெண் புலி கிட்டே நடக்காது, தெரிஞ்சுக்கோ. நீ மரியாதையா போகல்லேன்னு உன் மண்டையைப் பிளந்துடுவேன் உலக்கையைத் தூக்கி வந்து.

நக் : மயிலே! மயிலே! இறகு போடுன்னு போடாது. அதன் தோகையைப் பிடித்து இழுத்துப் பிடுங்கறுப்பலே, உன்னையும்......

(நக்கண்ணன் பெருந்தேவியைத் தாவிப் பிடித்து இழுக்கிறுன். உடனே அவள் பதறிப் போய்க் கதறுகிறுள்.)

பெ : அட பாவி! நீ ஆணோடு பெண்ணோடு பிறந்தவன் இல்லையா? உனக்கு அக்கா தங்கைகள் கிடையாதா?

(பெருந்தேவி தன் கைகளால் நக்கண்ணனின் முகத்திலும் மார்பிலும் குத்தி அவன் பிடியிலிருந்து விடுபட முயல்கிறுள். அவன் அவளை மேலும் பலமாகக் கட்டிப் பிடிக்கிறுன்.)

பெ : ஐயோ! இந்த அக்கிரமத்தைக் கேட்பாரில்லையா? யாரோ அயோக்கியன் என்னை வலுவந்தப் படுத்துகிறுனே!

(பெருந்தேவியின் கத்தல் கிள்ளுவனைக் கிடு கிடுக்க வைக்கிறது. அவன் நடு நடுங்கு கிறன்.)

கிள் : ஐயையோ! யாரோ திருடன்! கோஹூரார் வீட்டுலே புகுந்து கலாட்டா செய்யருன். ஓடி வாங்க! எல்லோரும் ஓடி வாங்க!

பூத : ஆமாம்; வாங்க, வாங்க. சீக்கிரம்.

(இருவருடைய கூக்குரலையும் கேட்டு அக்கம் பக்கம் வீட்டுக்காரர்களெல்லாம் கதவுகளைத் திறந்துகொண்டு ஓடோடி வருகின்றனர்.)

மக் 1 : என்ன? என்ன?

மக் 2 : யாரு? யாரு?

மக் 3 : எங்கே? எங்கே?

(கிள்ளுவன் ஓடிப்போய் அவர்களை அழைத்து வந்து புறக்கடை மதிலைக் காட்டுகிறன்.)

கிள் : திருடன் இந்த மதிலைத் தாண்டித்தான் குதிச்சான். உள்ளே போய் ஏதோ உருட்டறுப் போலிருக்கு. பெருந்தேவியம்மா கூவினது கேட்டது.

(உடனே சிலர் புறக்கடைக் கதவைத் திறக்க முயல்கின்றனர். சிலர் வெளிக் கதவைப் போய்த் தட்டுகின்றனர். சிலர் மதில்மீது ஏறி உள்ளே குதிக்கின்றனர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வெளிவாயில் கதவு திறக்கிறது. புறக்கடைக் கதவும் திறக்கிறது. எல்லோரும் உள்ளே புகுகின்றனர்.)

கின் : (உரக்க) இதோ! இவன் தான். இவன்தான். நம்மை யெல்லாம் பார்த்ததும் ஓடப்பார்க்கிறான். விடாதீங்க.

மக் 1 : ஓடி விடுவானா? காலை வெட்டிடமாட்டோம்?

மக் 2 : அவனைத் தப்பியோட விடுறதற்கா நாமெல்லாம் வந்திருக்கோம்.

(கூட்டத்தைக் கண்டு விதிர் விதிர்த்துப் போய் நக்கண்ணன் பெருந்தேவியைவிட்டு விலகி ஓட முயல்கிறான். இதற்குள் சிலர் நக்கண்ணனைக் கட்டிப்பிடித்துக் கொள்கின்றனர். பெருந்தேவி பூதகியைக் கட்டிக் கொண்டு அழுகிறாள். கோபத்தோடு சிலர் நக்கண்ணனைக் கைகொண்ட மட்டும் அடிக்கின்றனர். அவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு மௌனமாக அடிகளைத் தாங்கிக் கொள்ளுகிறான். ஒருவர் ஓடிப்போய் விளக்கை யெடுத்துக்கொண்டு வருகிறார்.)

மக் 1: விளக்கை இந்தத் திருட்டுப்பயல் மூஞ்சிகிட்டக் காட்டுங்கய்யா! யாருன்னு பார்ப்போம்?

(நக்கண்ணன் தன்னைப் பிறர் இனங் கண்டு கொள்ளாதபடி, தப்பியோட முயல்கிறான்.)

மக் 2 : ஆமாம்! உள்ளூர்க்காரனா? வெளியூர்க்காரனா? தெரிந்து கொள்வம்.

மக் 3 : இன்னும் நையப்புடைங்கையா! அவன் திமிருவதைப் பார்த்தீங்களா?

மக் 1 : நம்ம ஊருக்குள்ளே வந்துகூடத் திருட ஒருத்தனுக்குத் தைரியம் வந்துட்டதே!

(விளக்கை வைத்துக் கொண்டிருந்தவர் நக்கண்ணன் முகத்துக்கருகே விளக்கைத் தூக்கிக் காட்டுகிறார். வெளிச்சத்தில் நக்

(கண்ணனை அடையாளங் கண்டு கொண்டதும் பலர் ஆச்சரியத்தால் கூவுகின்றனர். அதே சமயம் வள்ளுவர் அங்கு வருகிறார்.)

கின் : (நக்கண்ணனைப் பார்த்து) அடடா! இவரு மேட்டுக்குடி நாகப்பப் பிள்ளையின் மகனல்லவா? இவரெங்கே இங்கே வந்தாரு?

மக் 3 : யாரு? நம்ம நாட்டாண்மைக்காரரின் மருமகனா?

மக் 2 : ஆமாம்.

(அடித்தவர்க ளெல்லாம் அயர்ந்து போய் நிற்கின்றனர். அவமானம் தாங்காமல் நக்கண்ணன் தலைகுனிகிறான். அவன் உடம்பு முழுதும் நடுநடுங்குகிறது.)

மக் 1 : (மெல்ல) ஓ! விஷயம் வேறயா அல்ல போச்சி. ஐயா இரா வேட்டைக்கு வந்திருக்காரு.

மக் 3 : வேலியே பயிரை மேயத் தொடங்கிவிட்டது. இனி என்ன?

மக் 1 : வீட்டிலே ஆம்பிள்ளை இல்லாத சமயத்திலே ஒருத்தன் வரான்னா அதுக்கு என்ன அர்த்தம்?

மக் 2 : பெருந்தேவி உத்தமமான பொண்ணாச்சே!

மக் 3 : நெருப்புக்கிட்டேயா விளையாட வந்தான்? பாவி பஸ்மீகரமாய்ப் போயிடுவானே! விளக்கில் விழுந்த விட்டில் பூச்சி மாதிரி!

(இச்சமயம் பூதகி கிள்ளுவன் காதில் இரகசியமாகக் கிசுகிசுக்கிறாள்.)

கின் : வலுக்கட்டாயமா இவரு பெருந்தேவியின் கையைப் பிடித்து இழுத்தாராம்.

மக் 1 : அப்பிடியா! அந்தக் கையை முறிச்சுடணும்.

மக் 2 : பெரிய இடத்துப் பிள்ளைன்னா என்ன அக்கிரமம் செய்தாலும் விட்டுட முடியுமா?

மக் 3 : சரியான பாடம் கற்பித்து அனுப்பிச்சாதான் இவன் வேறு எங்கும் போய் இனி வாலாட்டமாட்டான். இவனைப் போன்ற துச்சாரிகளுக்கும் இது எச்சரிக்கையாய் இருக்கும்.

கின் : கோவூராருக்குத் தெரிஞ்சா ஒரே வெட்டா வெட்டிப் போட்டுட்டுத்தான் மறுவேலை பார்ப்பாரு.

மக் 3 : அவர் வரும் வரைக்கும் காத்திருப்பானேன். நாம் எதுக்காக இருக்கிறோம்? ஐயாவைச் சரியாகக் கவனித்து அனுப்புவோம்.

மக் 2 : தாட்சணியம் பார்த்து சும்மா விட்டோமானா, இன்னைக்கு கோவூரார் வீட்டுலே நடந்தது, நாளை நம்ம வீட்டிலேயும் நடக்கும்.

(நக்கண்ணனை மறுபடியும் அடிக்கச் சிலர் நெருங்குகின்றனர். வள்ளுவர் அவர்களைத் தடுக்கிறார்.)

வள் : ஆத்திரப் படாதீர்கள்! பொழுது விடியட்டும்; விசாரிப்போம். ஊரில் பஞ்சாயத்து எதற்கு இருக்கு? இப்போது அந்தப் பிள்ளையைப் போக விடுங்கள்.

(எல்லோரும் விலகிக் கொள்கின்றனர். ஆனாலும், போகத் தைரியமில்லாமல் நக்கண்ணன் தயங்கி அங்கேயே நிற்கிறான். வள்ளுவர் அவன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வெளியே போகிறார். பெருந்தேவி குமுறிக் குமுறி அழும் ஓசை அவர் காதில் விழுகிறது.)

வள் : ஐயோ! பாவம். அந்தப் பெண் எப்படி அழுகிறாள் பார்த்தாயா? கேவலம் உணர்ச்சி வசப்பட்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் களங்கப்படுத்தப் பார்த்தாயே? தம்பி!

(நக்கண்ணன் வாய் திறக்காமல் நடுக்கத் துடன் நடக்கிறான்.)

வள் : தறிகெட்டு அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தாத தனால் உன் கௌரவமும் குடும்ப கௌரவமும் செல்வம் செல்வாக்கும் எல்லாம் ஒரு நொடியில் பாழாய்ப் போய் விட்டது, தெரிந்து கொண்டாயா?

(நக்கண்ணன் கண்ணீர் விடுகிறான்.)

வன் : நீ திருமணம் ஆனவன் என்று சொன்னார்களே! மனைவி கூட அழகாய் இருப்பாளாமே?

(நக்கண்ணன் கூனிக் குறுகியவாறு தள் ளாடி நடக்கிறான்.)

வன் : தம்பி! உன் மனைவியை ஒருவர் இப்படிக் கெட்ட எண் ணத்தோடு நெருங்கினால் நீ எப்படி ஆத்திரப்படுவாய்? பிறருக்குரிய பொருள் மீது நாட்டம் செலுத்தலாமா? இந் தக் கூடா ஒழுக்கத்தால் நீ என்ன இன்பத்தைக் கண்டு விடப் போகிறாய்? ஒவ்வொரு கட்டத்திலும் பயமும் பகை யும் ஆபத்தும் அல்லவா உன்னை ஆட்டிப் படைக்கும்? அது மட்டுமா? இதனால் ஏற்படும் பழியும் பாவமும் என் றென்றும் அல்லவா உன் குடும்பத்தை அலைக்கழித்துத் துன்பத்தில் ஆழ்த்தும். பிறருடைய பெண்டிரை நயந்து எத்தனையோ பேர் நாசமாயிருக்கிறார்கள்; தெரியுமா?

கிள் : இவருக்கு நன்றா புத்தி சொல்லியனுப்புங்க, ஐயா!

வள் : தம்பி! ஆண்மையென்றால் ஆடவன் பல பெண்களைக் கட்டியாள்வது என்று தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார் கள். புலன்களைப் பொறிவழி செல்லவிடாமல் கட்டுப்படுத்து வதுதான் ஆண்மை. மனைவியிடமன்றி மற்ற மகளிர்பால் இச்சை செலுத்தாமல் இருப்பதுதான் ஆண்மை. பிற பெண்களைத் தாய்மாராகவும் சகோதரிமாராகவும், மகள்க ளாகவும் மதித்துப் போற்ற வேண்டும்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு.

இம்மொழியை எப்போதும் உன் உள்ளத்தில் வைத்துக் கொள். என்ன!

(நக்கண்ணன் திருவள்ளுவரின் திருவடிகளில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து விடுகிறான்.)

நக் : ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள். கேவலம் மோகத்தால் மதியிழந்து கள்ளனைவிடக் கேடுகெட்டவனாகி விட்டேன். இனி என் வாழ்நாளில் இதுபோன்ற இழிவான இச்சைக்குச் சிறிதும் இடங் கொடுக்க மாட்டேன்.

(வள்ளுவருடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுகிறான்.)

வள் : எழுந்திரு; தம்பி! எப்போது உன் தவறை உணர்ந்து விட்டாயோ, அதற்காக உண்மையில் வருந்துகிறாயோ அப்போதே மன்னிப்புக்கு உரியவனாகி விட்டாய். இனி நீ நிச்சயம் திருந்தி விடுவாய். உன் மனைவிக்கு உண்மையான கணவனாக இருந்து அன்பு செலுத்தி நல்வாழ்க்கை வாழ்வாயாக!

(மற்றவர்கள் இக்காட்சியை கண்டு மகிழ்ச்சி கொள்கின்றனர். கிள்ளுவன் பூதகியை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போல பெருமிதத்துடன் மிடுக்காக நடக்கிறான். நக்கண்ணன் வள்ளுவருடைய அருள் ஒழுகும் முகத்தைக் காண விரும்புகிறான். ஆனால் அச்சம் அவனை அழுத்துகிறது.)

வள் : போய் வருகிறேன், தம்பீ!

ஐக் : (அவர் முகத்தைக் கனிவுடன் நோக்கி) போய் வாருங்கள். தேவரீருடைய அறிவுரை எப்போதும் என் நினைவில் இருக்கும்.

(வணங்கி வழியனுப்புகிருன்.)

## காட்சி—35

காலம்: பிற்பகல்

இடம் : வள்ளுவர் இல்லம்.

உறுப்பினர் : வள்ளுவர், வாசுகி, ஏலேலசிங்கர்.

(வாசுகி நோய்ப் படுக்கையில் இருக்கிருள். வள்ளுவர் அவளுக்கு மருந்து புகட்டிக் கொண்டிருக்கிருர். ஏலேலசிங்கர் வருகிருர்.)

ஏலே : (உள்ளே வந்தவாறு) அம்மாவுக்கு இப்போது எப்படியிருக்கிறது? ஐயா!

வள் : (துயரக் குரலில்) அப்படியே தான் இருக்கு; ஏலேலசிங்கரே! சிறிதுகூடக் குணங் காணவில்லை.

ஏலே : உள்ளூர் வைத்தியத்திஞல் தான் உபயோகம் தெரியவில்லையே! தலைநகரிலிருந்து பெரிய மருத்துவரை அழைத்து வந்து காட்டிஞல் என்ன? நான் வேண்டுமாஞல் காஞ்சிபுரத்துக்குப்போய் வருகிறேன். அப்படியே உங்கள் மாமஞரான தலைமை அமைச்சருக்கும் தகவல் சொல்லிவிட்டு வருகிறேன்.

வள் : (மனைவியின் முகக்குறிப்பைக் கவனித்தவாறு) சுவாமிநாத பண்டிதர் இன்று காலை மருந்தை மாற்றிக் கொடுத்

திருக்கிறார். இதனால் குணந் தெரிகிறதா எனப் பார்த்து விட்டுப் பிறகு உங்கள் யோசனைப்படியே செய்வோம்.

ஏலே : வேறு ஏதேனும் வேண்டுமானால் சொல்லுங்கள். நான் உடனே வாங்கி அனுப்புகிறேன்.

வன் : இப்போது ஒன்றும் வேண்டியதில்லை, ஏலேலசிங்கரே!

ஏலே : அம்மாவைக் கவனித்துக் கொள்ள மரகதத்தை அனுப்பி வைக்கிறேனே!

வன் : அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்; ஏலேலசிங்கரே!

ஏலே : தறிவேலையையும் செய்துகொண்டு நீங்கள் அம்மாவை யும் எப்படிக் கவனித்துக் கொள்ளுவீர்கள்? சில நாட் களுக்குத் தறியை நிறுத்தி வையுங்களேன். குடும்பச் செலவைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

வன் : நீங்கள் ஒன்றும் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம்; ஏலேலசிங்கரே!

ஏலே : ஐயா! ஒன்றுக்கும் இடந் தர மாட்டேன் என்கிறீர் களே!

வன் : உங்களுக்குச் சிரமம் எதற்கு?

ஏலே : எனக்குச் சிரமமா? அப்படித்தான் சிரமமென்றாலும் யாருக்குச் செய்கிறேன்? என் அன்னைக்குத் தானே! உங் கள் விருப்பத்தை மீறி எது செய்யவும் எனக்குத் துணிவு ஏற்படவில்லை.

வன் : உங்களுக்கு அலுவல் இருக்குமே! போய் வாருங்கள்.

ஏலே : போய் வருகிறேன்; ஐயா!

(ஏலேலசிங்கர் செல்கிறார். வள்ளுவர் வாசுகியைக் கவனிக்கிறார்.)

வள் : வாசுகி! கொஞ்சம் கஞ்சி சாப்பிடுகிருயா?

வா : (தலையசைத்துவிட்டு மெல்லிய குரலில்) வேண்டாம். நாதா! நீங்கள் என் பக்கத்தில் வந்து இப்படி உட்காருங்கள்.

வள் : (அருகில் அமர்ந்து வாசுகியின் முகத்தில் விழுந்திருந்த கூந்தலை ஒதுக்கிவிட்டு நெற்றியைத் தொட்டுப் பார்த்த வாறே) என்ன வாசுகி? என்ன வேண்டும்?

வா : எனக்கு ஒன்றும் வேண்டாம்; நாதா!

வள் : உன் பெற்ருேருக்கு இப்போதாயினும் தகவல் சொல்லி யனுப்பட்டுமா? அவர்கள் உன்னை வந்து பார்த்தால், உனக்குத் தெம்பாகக்கூட இருக்கும். ஏன் வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிருய்?

வா : நீங்கள் என்னுடன் இருக்கும் போது வேறு யார் வந்து பார்க்க வேண்டும்? ஒத்தாசை செய்ய வேண்டும்?

வள் : என்ன இருந்தாலும், அவர்கள் உன்னைப் பெற்ற தாய் தந்தையரில்லையா? அவர்களுடைய அன்பும் ஆதரவும் உனக்குப் புத்துயிர் அளிக்கக்கூடும்.

வா : உங்களுக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன்; நாதா! நான் என்று உங்களுக்கு மாலையிட்டு வாழ்க்கைத் துணைவியாக வந்துவிட்டேனே, அன்றே நீங்கள் என் கணவர் மட்டுமல்ல; தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லா மாக மதித்துப் போற்றி வழிபட்டு வருகிறேன் என்று. அப் படியிருக்க, பற்றறுந்து போன பழைய பந்த பாசத்தைப் பற்றி நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கிறீர்களே? நீங்கள் என் மனநிலையைச் சோதிக்கிறீர்களா? என்ன!

வள் : சே! சே! அதெல்லாம் இல்லை. நோயாயிருக்கையில் உற்ருர் உறவினரைப் பார்க்கனும் என்ற தாபம் இருப்பது மனித இயற்கை. அதனுல் சொன்னேன்.

வா : (உறுதியான குரலோடு) உங்களுடைய அன்பும் அரவணைப்பும் அருமைத்துணையும் இருக்கும் வரை நான் வேறு யாரையும் பார்த்து ஆறுதல் பெற வேண்டிய அவசியமில்லை.

வள் : வாசுகி! நீ அதிகம் பேசி உடம்பை அலட்டிக் கொள்ளாதே.

வா : நீங்கள் பயப்படாதீர்கள். நான் உங்களை விட்டுச் சீக்கிரம் போய்விட மாட்டேன்.

வள் : நீ என்ன பேசுகிருய்? வாசுகி!

வா : நான் உள்ளதைத்தான் சொல்லுகிறேன்; நாதா! எனக்கு எப்போதோ முடிவு வந்து விட்டது என்று தெரியும். உங்களுடைய உண்மையான அன்புதான் என் உயிரைப் பிடித்து நிறுத்தி வைத்திருக்கிறது.

வள் : (உருக்கமாக) வாசுகி! உன் அன்புக்கு அடைக்குந் தாழே கிடையாது என்பதை நான் நன்கு அறிவேன். நான் இந்தப் பரந்த உலகில் ஒரு மனிதனுக உலாவுகிறேன் என்ருல், பெற்றவளை விட என்னைப் பல வகையிலும் பேணி வளர்க்கும் உன்னுடைய தயா உள்ளந்தான் காரணமாகும். அப்படிப்பட்ட உன்னை நான் எப்படிப் பிரிந்திருப்பேன்? பிரிந்து வாழ முடியும்?

வா : நீங்கள் எல்லாம் உணர்ந்தவர்கள். இவ்வுலகில் பிறந்தவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாயிருந்தாலும், என்ருயினும் ஒரு நாள் மரண மடைவது தவிர்க்க முடியாதது; இது இயற்கை என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். என் பிரிவு குறித்து நீங்கள் இவ்வளவு கவலைப்படலாமா? நாதா!

வள் : ஈருயிரில் ஓருயிர் பிரிந்து தனித்திருக்க முடியுமா? வாசுகி!

வா : பிரிய வேண்டி நேர்ந்து விட்டால் இயற்கையின் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஒரு சில ஆண்டுகளே உங்களுடன் வாழ்க்கை நடத்தினாலும், நான் நிறை வாழ்வு வாழ்ந்து விட்டேன் என்ற நிம்மதி எனக்கு இருக்கிறது, நாதா!

வள் : அது உண்மைதான், வாசுகி! நம் வாழ்வில் குறைப் படுவதற்கு ஒன்றுமேயில்லை.

வா : ஆனால், நமக்கு பிள்ளை இல்லாததை ஊரார் சுட்டிக் காட்டி அது நம் வாழ்வில் பெருங்குறை என்கிறார்களே!

வள் : அது என் செவியிலும் விழுந்திருக்கிறது.

வா : என்னைப் பொறுத்த வரையில் நமக்கு கால்வழி சேய் எதுவும் இல்லையே என்ற கவலை சிறிதும் கிடையாது. கால் வழிசேயை விடப் பலவகையிலுஞ் சிறந்ததான நூல்வழி சேய் ஒன்றை பெற்றுக் கொடுத்திருக்கிறீர்களே! அது போதும் எனக்கு, மறுபிறப்பிலும் மகிழ்ச்சி கொள்வதற்கு.

வள் : ஓ!

வா : கால் வழி சேய்களுக்குக் கால வரையறையுண்டு. ஆனால், நீங்கள் அரிதின் ஈன்று புறந்தந்துள்ள நூல் வழி சேயோ ஊழி ஊழிக்காலம் அழியாது இருக்கக் கூடியது. அதற்குப் பெற்றோர் நாம் என்று எண்ணும்போது எனக்கு எவ்வளவு பெருமையும் பூரிப்புமாய் இருக்கிறது தெரியுமா? நாதா!

வள் : வாசுகி! உன் மேதைமையை நான் எப்படி வியப்பேன்? நான் இயற்றியுள்ள திருக்குறளை உலகமெல்லாம் பாராட்டிப் புகழ்ந்தாலும், நீ இப்போது தெரிவித்த புகழ்ச்சிக்கு அவை எதுவும் இணையாகாது. நீ என் இலக்கியப் படைப்பை எவ்வளவு நன்றாக எடை போட்டு வைத்திருக்கிறாய்?

வா : நான் புகழ்ந்துரைத்து என்ன பயன்? நாதா! உண்மையில் இதைச் சீர்தூக்கிப் பார்த்துப் பாராட்டிப் புகழ வேண்டியவர்களுடைய கவனத்துக்கு உங்களுடைய ஒப்பற்ற நூலான திருக்குறள் போகவில்லையே?

வள் : ஊம்.

வா : நான் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன்; ஏலேலசிங்கரும் இவ்வூர் அறிஞர்களும் உங்களை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்; இறையனார் தலைமை வகிக்கும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு இந்நூலை எடுத்துக் கொண்டு போய் அரங்கேற்றி விட்டு வாருங்கள் என்று. என்ன காரணமோ! நீங்கள் 'ஆகட்டும்; பார்க்கலாம்' என்று காலம் கடத்திக் கொண்டு வருகிறீர்கள்.

வள் : நீண்ட நேரம் பேசியதனால் உனக்கு மூச்சுத் திணறுகிறது; பார், வாசுகி! அமைதியாயிரு. நான் போய்க் கஞ்சி கொண்டு வருகிறேன். ஒரு வாய் பருகி அயர்ச்சி நீங்கு.

வா : (கையமர்த்தி) எனக்கு இப்போது ஒன்றுமே வேண்டியிருக்கவில்லை; நாதா! இருங்கள்; என் இறுதி வேண்டுகோளை அமைதியாய்க் கேளுங்கள். நீங்கள் கூடிய சீக்கிரம் திருக்குறளை எடுத்துக் கொண்டு போய் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றி விட்டு வருவேன் என்று எனக்கு வாக்குறுதி அளியுங்கள். நான் நிம்மதியாக உயிர் விடுவேன்.

வள் : இப்படியெல்லாம் சொல்லலாமா? வாசுகி! எனக்கும் மதுரைத் தமிழ் சங்கத்திற்குப் போக வேண்டும்; சங்கத் தலைவரான இறையனாரையும் மற்றப் புலவர் பெருமக்களையும் பார்க்க வேண்டும்; அவர்களிடம் திருக்குறளைப் படித்துக் காட்டி அரங்கேற்றம் செய்யவேண்டும் என்ற ஆசைதான். அதற்கான சந்தர்ப்பத்தைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், இது ஏன் உன்னுடைய இறுதி வேண்டுகோளாக இருக்க வேண்டும்?

வா : உங்கள் திருவாயிலிருந்து மலர்ந்துள்ள ஒவ்வொரு திருக்குறளும் விலைமதிக்க முடியாத மாணிக்கம். 1330 அருங்குறள்களும் உலகம் முழுவதும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒப்பற்ற நீதிநெறி முறைகளைக் கொண்டவை. உலகில் உள்ள ஒவ்வொரு சாதி, சமய, இன, மொழி, நாட்டு மக்களுமே ஏற்றுக் கொள்ளக் கூடிய பொது மறை. அது மட்டுமன்று, இது ஒரு பேரற நூல் ஆகும். இதன் சிறப்பை உலகமுழுதும் அறிந்து பெரும் பயன் அடைய வேண்டும் என்பது என்னுடைய தணியாத ஆசை. இந்த ஆவலைத்தான் என்னுடைய இறுதி வேண்டுகோளாக உங்கள் முன் வைக்கிறேன். இந்தப் பிரார்த்தனையை மனப் பூர்வமாக ஏற்று நிறைவேற்றினீர்களானுல் அதுவே நான் பிறந்த பயனை அடைந்து விட்டதாக எண்ணி மகிழ்ச்சி கொள்வேன்.

வள் : வாசுகி! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நான் திருக்குறளை எடுத்துக் கொண்டு போய் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றிவிட்டு வருவேன். உன் ஆசையை நிச்சயமாக நிறைவேற்றுவேன். இதை நீ உறுதியாக நம்பலாம். முதலில் உன் நோய் சீக்கிரம் குணமடையட்டும்.

வா : நாதா! இன்னென்று உங்களைக் கேட்க வேண்டும். இந்த எண்ணம் நீண்ட நாளாக என் மனதைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

வள் : அது என்ன? வாசுகி!

வா : வேறென்றுமில்லை. நாதா! நாம் இல்வாழ்க்கை தொடங்கிய பின்னர் நான் உங்களுக்கு உணவு பரிமாறும் போதெல்லாம் ஒரு வள்ளத்தில் நீரும் ஊசியொன்றும் கொண்டு வந்து வைக்குமாறு தவருமல் சொல்வீர்களே! அது எதற்கு? எதற்காகக் கேட்கிறீர்கள்? என்பது இத்தனை ஆண்டுகளாகியும் புரியவில்லை. அன்பு கூர்ந்து அதற்குரிய காரணத்தை எனக்கு விளக்க வேண்டும். ஐயனே!

வள் : இச்சிறு விஷயத்தை உன் மனத்தில் வைத்து இத்தனை ஆண்டுகள் ஏன் உலப்பிக் கொண்டிருக்க வேண்டும். முன்பே கேட்டிருக்கலாமே?

வா : கணவன் கட்டளை எதுவானாலும் அதை உடனே நிறைவேற்றுவது மனைவியினுடைய தலையாய கடமையாகும்; அது பற்றி வினவுவது முறையல்ல என்று மௌனமாயிருந்தேன் நாதா!

வள் : ஓ! அப்படியா? வள்ளத்தில் நீரும் ஊசியும் கேட்டதற்குக் காரணம் நீ தாலத்தில் உணவைப் பரிமாறுகையில் சோற்றுப்பருக்கை வெளியே சிந்திவிட்டால், அதை ஊசியால் குத்தி எடுத்துக் கிண்ணத்தில் உள்ள நீரில் கழுவி உணவுடன் கலந்து கொள்வதற்காகத்தான். ஆனால், இத்தனை ஆண்டுகளில் ஒருநாளும் சோறு கறிகளை உண்கலத்திலன்றி வெளியே சிந்தும் படியாக நீ பரிமாறியதே இல்லை. ஆகவே, வள்ளத்தில் உள்ள நீருக்கும் ஊசிக்கும் வேலையே ஏற்படவேயில்லை.

வா : அப்படியா? நாதா! நான் பெரும் பேறு பெற்றுவிட்டேன்.

(வாசுகி நிம்மதியாக கண்களை மூடுகிறாள். வள்ளுவர் பரபரப்புடன் அவளுடைய நாடியைப் பிடித்துப் பார்க்கிறார்.)

வா : (மெல்லிய குரலில்) நாதா! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து புகட்டுங்கள்.

(வள்ளுவர் விரைந்து சென்று தண்ணீர் கொண்டு வந்து புகட்டுகிறார்.)

வா : (தண்ணீரை மெல்ல அருந்திவிட்டு) நாதா! தயவு செய்து நீங்கள் தலைமாட்டில் அமர்ந்து என் தலையை எடுத்து உங்கள் மடிமீது வைத்துக் கொள்கிறீர்களா?

வள் : ஓ!

(தலைமாட்டில் அமர்ந்து வாசுகியின் தலையை மெல்லப் பிடித்து தம் மடிமீது வைத்துக்கொண்டு விசிறியால் விசிறுகிறார். அடுத்த கணம் வாசுகி தன் கன்னத்தை ஆதரவாகப் பற்றிக் கொண்டிருந்த கணவருடைய கரங்களைப் பற்றியவாறே அமைதியாக உயிர் விடுகிறாள். இதைக் கண்டதும் வள்ளுவர் துயருடன் மனைவியினுடைய முகத்தைப் பார்க்கிறார். அவருடைய கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் வாசுகியின் முகத்தின் மீது விழுகிறது.)

வள் : (துயரத்தோடு பாடுகிறார்)

அடிசிற் கினியாளே! அன்புடை யாளே!
படிசொல் தவறாத பாவாய்! — அடிவருடிப்
பின்தூங்கி முன்எழுந்த பாவையே! போதியோ?
என்தூங்கும் என்கண் இரா.

(இத்துயர ஒலியைக் கேட்டுக் கொண்டே வந்த ஏலேலசிங்கர் வாசுகி அம்மை இயற்கை எய்திவிட்ட நிலையைக் கண்டு கண் கலங்குகிறார்.)

## காட்சி—36

காலம் : முற்பகல்

இடம் : மதுரை செல்லும் வழி

உறுப்பினர் : வள்ளுவர், இடைக்காடர், ஔவையார்.

(பெருமழை பெய்து கொண்டிருக்கிறது. சிறிது தூரம் நனைந்து கொண்டே சென்ற வள்ளுவர் எதிரில் கண்ட ஓர் ஆலமரத்தின்

அடியில் போய் ஒதுங்குகிறார். அவருக்கு முன்பே அவ்விடத்தில் இடைக்காடர் ஒதுங்கியிருக்கிறார்.)

இடை : வாரும், ஐயா! புத்தகத்துப் பேயரே! ஏன் மழைத் தூறலில் நிற்கிறீர்? உள்ளே தள்ளி வந்து இந்தச் சிற்றிலையின் கீழ் நில்லும்.

(வள்ளுவர் இக்குரல் கேட்டு இடைக்காடரைத் திரும்பிப் பார்க்கிறார்.)

வள் : மிக்க நன்றி, ஐயா!

இடை : நீர் எங்கிருந்து வருகிறீர்? எங்கே போகிறீர்?

வள் : மயிலையிருந்து வருகிறேன்; மதுரைக்குப் போகிறேன்.

இடை : ஓ!—உம் கையிலிருக்கும் சுவடி என்ன?

வள் : இது ஒரு நூல்; ஐயா!

இடை : நீர் எழுதியதா?

வள் : ஆமாம்; ஐயா!

இடை : எது பற்றி எழுதியிருக்கிறீர்?

வள் : மக்கள் வாழ்க்கை குறித்து மக்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எப்படி யெப்படியெல்லாம் ஒழுங்குடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இலக்கணம் வகுத்து அறநூல் ஒன்று ஆக்கியிருக்கிறேன்.

இடை : இந்நூலுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்?

வள் : திருக்குறள் என்று பெயர் வைத்திருக்கிறேன்; ஐயா!

இடை : நல்ல பெயர் தான். நீர் இதை அரங்கேற்றுவதற்காகத் தான் போகிறீர் என்று நினைக்கிறேன்.

வள்: ஆமாம்; ஊகித்துக் கொண்டீர்களே!

இடை : மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருக்கும் புலவன்களெல்லாம் பொல்லாதவன்கள். தங்களைவிட உலகில் படித்தவர்கள் இல்லை; பெரும் புலவர்கள் இல்லை என்ற ஆணவம் அவர்களுக்கு அதிகம்.

வள் : இந்த அறிவாற்றல் ஒருவருக்கு மட்டும் உரியதல்ல; வல்லவர்களுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்று அவர்களுக்குத் தெரியாது போலிருக்கிறது.

இடை : நீர் அவர்களைச் சமாளித்து விடுவீர்; ஆனாலும், நானும் உம்மோடு துணைக்கு வருகிறேன்.

வள் : நல்லவர்கள் துணை நன்மை பயக்கும்; ஐயா! உங்கள் அலுவலுக்குக் குந்தகம் இல்லையென்றால், என்னுடன் வாருங்கள்.

(இருவரும் சிறிது தூரம் சென்றதும் ஔவையார் எதிர்ப்படுகிறார்.)

இடை : ஔவையார் போலிருக்கே?

வள் : தம் ஒப்பற்ற பாடல்களால் உலகின் பெருமதிப்பைப் பெற்றுள்ள ஔவை மூதாட்டியா?

ஔ : ஆமாம். கோலையும் கூனையும் பார்த்துக் கூடவா தெரியவில்லை? இடைக்காடர் எப்போதும் இடக்காகப் பேசுவார் எல்லாவற்றையுந் தெரிந்து கொண்டே.

வள் : (வியப்போடு) இவர் இடைக்காடரா? இது வரை இவரைத் தெரிந்து கொள்ளாமலே என்னென்னவோ பேசிக் கொண்டிருந்து விட்டேனே!

ஔ : கைக்கோலையும் போர்வையையும் முண்டாசையும் பார்த்து விட்டு, யாரோ ஆடு மாடு மேய்க்கும் இடையன் என்று எண்ணி விட்டீர் போலிருக்கு?

வள் : நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை; அம்மா! வெறும் வெளித்தோற்றத்தைப் பார்த்து விட்டு ஆளை மதிப்பிடுகிறவன் இல்லை நான். உருளும் பெரிய தேருக்கு அச்சாணி

போன்றிருக்கும் மிகப் பெரியவர்களும் சாதாரணமாகக் காணப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன்.

இடை : நீர் அழுத்தமான ஆள் தான். ஔவை மூதாட்டியாரே! இவரைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வில்லையே! இவர்......(வள்ளுவர் பக்கம் திரும்பி) ஐயா! ஊரைக் கேட்டேனே ஒழிய, உம் பெயரை கேட்கவில்லை. வம்பாக ஏதேதோ உரையாடிக் கொண்டிருந்ததில்..................

வள் : என்னை வள்ளுவன் என்று அழைப்பார்கள்.

இடை : புதுமையான பெயராயிருக்கே?

ஔ : இவர் வள்ளுவக் குடியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். நாஞ்சில் வள்ளுவன் என்று ஒருவன் கூட நாஞ்சில் மலைநாடு என்ற நாட்டை ஆண்டு கொண்டிருந்தான்.

இடை : நீங்கள் எல்லா நாடுகளுக்குஞ் சென்று மன்னர்களிடம் பொற்கிழி வாங்கி வருபவராயிற்றே! நீங்கள் சொன்னால் சரியாய்த் தானிருக்கும்.

ஔ : பாண்டி நாட்டு மேற்குப் பகுதியில் இருக்கும் மலைத்தொடர்களின் நடுவே நாஞ்சில் மலை என்று ஒரு குன்று இருக்கிறது. அதைச் சூழவுள்ளது தான் நாஞ்சில் நாடு. அதைத்தான் நாஞ்சில் வள்ளுவன் ஆண்டு வந்தான். அவனுடைய மரபினர் பல அரசாங்கங்களில் பெரிய பதவிகளை வகித்து வருகிறார்கள். இக்குடிப் பெயரையே இவர் தம் இயற்பெயராக வைத்துக் கொண்டார் போலிருக்கு.

வள் : நான் பிறந்த குடியைப் பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாது, அம்மா! அதுமட்டுமல்ல; என் தாய் தகப்பனார் யார் என்று கூடத் தெரியாது. நான் குழந்தைப் பருவத்திலேயே அநாதையாகி விட்டவன். துள்ளுவர் என்ற வேளாளர் என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கியிருக்கிறார். நான் கொஞ்ச காலம் தொண்டைமான் இளந்திரையன்

என்ற தொண்டை மண்டலப் பேரரசனிடம் கரும காரியம் பார்த்து வந்தேன். அவர் 'இராயசேகரன்' என்ற சிறப்புப் பட்டத்தை எனக்கு வழங்கினார்.

இடை : உங்களுக்குப் பின்னே இவ்வளவு வரலாறு இருக்கிறதா?

வள் : செயலுக்குத்தான் சிறப்பேயொழிய, பிறப்புக்குச் சிறப்பில்லை.

இடை : அதிருக்கட்டும்; சிறிது முன்னே உருவத்தைப் பார்த்து ஒருவரை மதிப்பிடக்கூடாது என்பதற்கு ஒரு உதாரணம் சொன்னீரே! அதை உங்கள் நூலில் குறிப்பிட்டிருக்கிறீரா?

வள் : குறிப்பிட்டிருக்கிறேன்! ஐயா! கேளுங்கள்.

உருவுகண்டு எள்ளாமைவேண்டும் உருள்பெரும் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.

ஔ : மிக நன்றாக இருக்கிறதே! வாக்கும் வளமாயிருக்கிறது. குறள் வெண்பாவில் பாடியிருக்கிறீரா?

வள் : ஆம்; அம்மா!

இடை : அதனால்தான், இவர்தம் நூலுக்குத் திருக்குறள் என்று பெயர் வைத்திருக்கிறார்.

ஔ : இடைக்காடரே! இவரை எங்கு சந்தித்தீர்கள்?

இடை : சிறிது நேரத்துக்கு முன் மழைக்கு ஒதுங்கிய இடத்தில் இருவரும் சந்தித்துக் கொண்டோம். இவர் மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.

ஔ : நானும் அங்குதான் போகிறேன். வழித்துணை கிடைத்து விட்டது. ஆமாம்; இடைக்காடரே! நீர் எங்கு......?

இடை : என் சமாசாரந்தான் உங்களுக்குத் தெரியுமே! ஒரு குறிக்கோளில்லாது கால் சென்ற வழியில் காடு மேடு சென்று கொண்டிருப்பவன் என்று. ஆனால், வள்ளுவரைச் சந்தித்த பின்னர் என் பாதை மாறி விட்டது. நானும்

அவருக்குத் துணையாக மதுரைக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன். நாம் மூவருமாகப் போய் தலைகனம் கொண்ட சங்கப் புலவர்களைத் தட்டிக் கேட்டு விட்டு வருவோம்.

ஒள : எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு தான். வள்ளுவரின் திருக்குறள் அரங்கேற்றத்தையும் காணலாம் அல்லவா?

இடை : திருக்குறள் அரங்கேறுவதற்கு உங்கள் உதவி வேண்டும்; ஒளவைப் பெருமாட்டியே!

வள் : ஆமாம்; அம்மா! கலைமகள் போல் விளங்கும் நீங்கள் என் நூல் அரங்கேற்றத்துக்குப் பேருதவி புரிய வேண்டும்.

ஒள : கட்டாயம் செய்வேன். ஒரு நல்ல நூலை நானிலமும் அறியச் செய்விக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். ஐயா!

வள் : மிக்க நன்றி; அம்மா! இடைக்காடரே! என்னுடைய மூத்த சகோதரி போலுள்ள ஒளவை மூதாட்டியை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததற்காக உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன்.

இடை : நமக்குள் உபசார வார்த்தை எதற்கு? வாருங்கள்; விரைந்து செல்வோம். மீண்டும் மழை வருவதற்கு முன்.

ஒள : (மேலே வானத்தைப் பார்த்துவிட்டு) வானம் வெளி வாங்கி விட்டது. இனி மழை வராது. ஆனாலும், பொழுது சாய்வதற்குள் நகர எல்லையை அடைந்து விடவேண்டும்.

(மூவரும் வேகமாக நடக்கின்றனர்.)

## காட்சி—37

காலம் : காலை

இடம் : மதுரைத் தமிழ்ச்சங்கம்

உறுப்பினர் : வள்ளுவர், இடைக்காடர், ஒளவையார், மற்றும் புலவர்கள்.

(மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நக்கீரர் முதலியவர்கள் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர். சங்கப் பணியாளன் ஒருவன் வந்து வள்ளுவர், ஔவையார், இடைக்காடர் ஆகிய மூவரும் வந்திருப்பதை அறிவிக்கிருன்.)

பணியாளன் : ஐயா! யாரோ மூவர் வந்திருக்கிருர்கள். உங்களைப் பார்க்கணுமாம்.

நக் : யார்? எதற்காக நம்மைப் பார்க்கணுமாம்?

சிறுமேதாவியார் : புலவர்கள் என்று சொல்லிக் கொண்டு யாராயினும் வந்திருப்பார்கள்.

வெள்ளிவீதியார் : ஏதாயினும் ஏடுகள் எடுத்துக் கொண்டு வந்திருக்கிருேம் என்று சொல்லியிருப்பார்களே!

பணி : புலவர்கள் என்றுதான் சொன்னுர்கள். ஒருவருடைய கரத்தில் ஒரு பெரிய சுவடி கூட இருந்தது.

நக் : சரி! சரி! போய் அவர்களை வரச்சொல்லு.

கபிலர் : தலைவர் இறையனுரும் அரசர் உக்கிரப் பெருவழுதி யாரும் இல்லையே! அவர்கள் நூலை ஆராய்வதற்கு.

நக் : நாமே பார்த்து அனுப்பிவிட்டால் போகிறது.

(பணியாள் போகிருன். சில விநாடிகளில் ஔவையார் முன்னே வர, இடைக்காடரும் வள்ளுவரும் உள்நுழைகின்றனர். நக்கீரர் ஔவையாரைப் பார்த்து விட்டுத் திடுக்கிடு கிருர். கபிலரும் பரணரும் மகிழ்ச்சி கொள்ளு கின்றனர்.)

வள் : வணக்கம், ஐயா!

நக் : நீங்கள் யார்? எந்த ஊர்?

வள் : (பாடுகிருர்)

எந்தஊர் என்றீர்? இருந்தஊர் நீர்கேளீர்!
அந்தஊர் செய்தி அறியீரோ! — அந்தஊர்
முப்பாழும் பாழாய் முடிவில்ஒரு சூனியமாய்
அப்பாழும் பாழாய் அறும்.

நக் : என்ன! குறும்பாகப் பதில் சொல்கிறீர்?

இடை : நீங்கள் நாடறிந்த நல்லிசைப் புலவர்களல்லவா! நான் ஒரு செய்தி சொல்லுகிறேன். அதை ஒரு பாடலாகப் பாடிக் காட்டுவீர்களா?

சிறுமேதாவியார் : அது என்ன சொல்லும்?

இடை : ஒரு ஆற்றங்கரை. அதில் ஒரு மாமரம். அதன் கிளையில் ஒரு காக்கை உட்கார்ந்திருக்கிறது. அது 'கா! கா!' எனக் கரைகிறது. அவ்வழியாக இடைச்சிறுவன் ஒருவன் வருகிறான். காக்கையை ஓட்ட அவன் கையில் கோலில்லை. ஆனால், ஒலிக் குறிப்பாலேயே அதை ஓட்ட முயல்கிறான். அவன் ஒலித்த ஒலி எவ்வாறு இருக்கும் என்பதை அந்த ஒலிக்குறிப்புத் தோன்ற ஒரு பாட்டுப் பாடுங்கள்; பார்க்கலாம்.

(புலவர்கள் ஒருவரை யொருவர் திகைப்புடன் பார்க்கின்றனர்.)

இடை : (ஏளனமாக) என்ன! தெரியவில்லையா? நான் பாடட்டுமா?

நக் : நீர் கூடப் பாடுவீரோ?

இடை : கேளும்; பாடுகிறேன்.

ஆற்றங் கரையின் அருகிருந்த மாமரத்தில்
காக்கை யிருந்து 'கஃகஃ'எனக் - காக்கைதனை
எய்யக் கோலில்லாமல் "இச்! இச்! இச்!" என்றான்
வையக் கோனார்தம் மகன்.

கபி : பலே! மிக நன்றாயிருக்கிறதே!

(நக்கீரர் முதலிய புலவர்கள் அவமானத்தால் தலை குனிகின்றனர்.)

நக் : (வள்ளுவரை நோக்கி) நீங்கள் வந்த காரியம் என்னவோ?

வள் : நான் இயற்றியுள்ள நூல் ஒன்றைச் சங்கத்தில் அரங் கேற்ற வேண்டும்.

நக் : எங்கே? அதைக் காட்டும்; பார்ப்போம்.

வள் : சங்கத்தலைவர் யாரென அறியலாமோ? நீங்கள்......

சிறு : இவர்தான் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றங் குற்றமே என்று சிவபெருமானிடமே வாதாடிய நக்கீரர். இவரே தலைவர் மா திரிதான்.

வள்: நான் இறையனாரைக் காண விரும்புகிறேன். மன்னர் பெருமானும் ஒரு புலவர் என்று அறிகிறேன். அவரும் இருக்க வேண்டும். முறையாக என் நூல் சங்கத்தில் அரங்கேற்றம் பெற வேண்டும்.

நக் : அப்படியானால், நாளை வாரும். அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்வோம்.

வள் : நாங்கள் போய் வருகிறோம். நாளை அரங்கேற்றத் திற்கு வந்து விடுகிறோம்.

(மூவரும் வெளியேறுகின்றனர். புலவர்கள் மௌனமாக அவர்களைப் பார்க்கின்றனர்.)

## காட்சி—38

காலம் : காலை

இடம் : மதுரைத் தமிழ் சங்கம்

உறுப்பினர் : இறையனார், உருத்திர சன்மர், உக்கிரப் பெருவழுதி, வள்ளுவர், ஔவையார், இடைக்காடர், நக்கீரர் முதலியோர்.

(சங்கத் தலைமை ஆசனத்தில் இறையனார் அமர்ந்திருக்கிறார். வலப்பக்கம் அரசன் உக்கிரப் பெருவழுதியும், இடப்பக்கம்

உருத்திரசன்மர், நக்கீரர் முதலிய புலவர்கள் புடை சூழ வீற்றிருக்கின்றனர். அவர்களுக்கு முன்னால் ஔவையார், வள்ளுவர், இடைக்காடர் உட்கார்ந்திருக்கின்றனர். அவையோருந் திரண்டிருக்கின்றனர்.)

வள் : வணக்கம், தலைவர் இறையனார் அவர்களே! அரசர் பெருமானே! புலவர் பெருமக்களே!

இறை: அரசர்: வணக்கம்; வாருங்கள்; ஐயா! ஔவை மூதாட்டியாரும் வந்திருப்பது எங்களுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. அம்மையாருடைய வருகை அரிதாகி விட்டதே!

ஔ : தலைவரும் மன்னரும் கூழுக்குப் பாடும் இந்தக் கிழவிக்குக் காட்டும் அன்புக்கும் மதிப்புக்கும் மிக்க நன்றி.

இறை : வள்ளுவரே! உம் நூலைக் கொண்டு வந்திருக்கிறீரா?

வள் : (சுவடியை எடுத்து நீட்டியவாறு) கொண்டு வந்திருக்கிறேன்; இந்தாருங்கள்; ஐயா! (இறையனாரிடம் தருகிறார்.)

உக் : நேற்று இந்த நூலைப் பார்வை இடுவதற்குத் தர மறுத்து விட்டாராமே! வள்ளுவரே! முன்னதாகப் பார்த்திருந்தால் அரங்கேற்றத்துக்கு எளிதாக இருக்கும் அல்லவா?

இடை : (குறுக்கிட்டு) தந்திருக்கலாம். ஆனால்......?

இறை : ஏன் தயங்குகிறீர்கள்? சொல்லுங்கள்.

இடை : இங்கு எவர் நூல் எழுதிக் கொண்டு வந்தாலும் 'இது பழைய நூல்; பழைய ஏடுகளைப் பார்த்து எழுதி வந்தது' எனக் கூறி விரட்டி விடுவார்கள் என்றும், அரங்கேற்ற வந்தவர் தம் நூலைப் படித்துக் காட்டிக் கொண்டு வரும் போதே சிலர் தலைவர் ஆசனத்துக் கடியில் மறைந்திருந்து பழைய ஏடுகளில் அதை எழுதிக் கொண்டே வந்து, 'இதோ பாருங்கள்; அந்தப் பழைய ஏட்டுப்பிரதி'

என்று எடுத்துக் காட்டி மருள வைத்து விடுவார்கள் என்றும் கேள்விப்பட்டிருந்ததால்தான், வள்ளுவர் நக்கீரரிடம் அதை முன் கூட்டித் தருவதற்குப் பயந்தார்.

நக் : (ஆத்திரமாக) இது யாரோ பொறுமையால் கட்டிவிட்ட பொய்க் கதை. இத்தகைய வஞ்சனைச் செயல் வேறு எந்தச் சங்கத்திலாயினும் நிகழ்ந்திருக்கலாம். இறையனாரே தலைவராயிருக்கும் தமிழ்ச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் நல்லிசைப் புலவர்களாகிய நாங்கள் நல்ல நூல்களாயிருந்தால் உவகையோடு ஏற்றுக் கொள்வோம்.

உக் : நமது சங்கத்தில் இருப்பவர்கள் நல்லியல்புடையவர்கள் என்பதை நானிலம் அறியுமே!

இறை : நாவிருப்பவர்கள் நாலுஞ் சொல்வார்கள். நாம் அதைப் பொருட்படுத்தக் கூடாது. இப்போது நாம் அரங்கேற்றத்தைக் கவனிப்போம். வள்ளுவரே! இந்தாருங்கள்; நீங்கள் தந்த சுவடி. படித்துச் சொல்லுங்கள்.

வள் : ஓலைச்சுவடி உங்களிடமே இருக்கட்டும். நீங்கள் ஏதாயினும் பார்த்துக் கேட்பதற்கு வசதியாயிருக்கும். நான் நினைவு ஏட்டில் அனைத்தையும் பதித்து வைத்திருக்கிறேன்.

உரு : அதிசயிக்கத் தக்க அறிவாற்றல் இது; ஐயா!

உக் : அதில் என்ன ஐயம்?

இறை : வள்ளுவரே! நம் சங்கப் பலகையில் வந்து அமர்ந்து உம் நூலை அரங்கேற்றும்.

ஔ : ஆமாம்; அதுதான் முறை.

நக் : சங்கப் பலகையில் வள்ளுவரோடு யார் இருப்பது?

உக் : ஆமாம்; யார் உடன் இருப்பது?

(இறையனார் புன்முறுவல் செய்துவிட்டு மௌனமாக இருக்கிறார். மற்றப் புலவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கின்றனர். வானிலிருந்து ஒலி எழுகிறது.)

**அசரீரி :** திருவள்ளுவரோடு சங்கப் பலகையில் உருத்திர சன்மர் உடனிருப்பாராக!

**இறை :** உருத்திரசன்மரே! அசரீரியின் வாக்குப்படி நீங்கள் போய் திருவள்ளுவருடன் சங்கப் பலகையில் அமருங்கள். அவர் அரங்கேற்றட்டும்.

(உடனே உருத்திரசன்மர் எழுந்து திருவள்ளுவரைக் கைப்பிடித்து அழைத்துச்சென்று சங்கப்பலகையில் அமர்த்தித் தாமும் அவருடன் அமர்கிருர்.)

**இறை :** (சுவடியைப் பிரித்துப் பார்த்தவாறு) இந்நூலை நீங்கள் எழுதியதன் நோக்கம் என்ன? வள்ளுவரே!

**வள் :** அறியாமை என்னும் இருட்டில் சரியான தடந் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் மக்களுக்கு அறிவொளி ஊட்டி நன்னெறி காட்டவே திருக்குறளை இயற்றினேன்; ஐயா!

**நக் :** இந்நூலில் எப்பொருள் குறித்து விவரித்திருக்கிறீர்கள்?

**வள் :** முதன்மையாக அறத்தை. அடுத்து பொருளுக்கும் இன்பத்துக்கும் இடந் தந்திருக்கிறேன்.

**கபி :** வீடுபேற்றைப்பற்றி நீங்கள் எதுவும் சொல்லவில்லையா?

**வள் :** அதைத் தனியாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அறத்திலேயே அடங்கி விடுகிறது.

**நக் :** அறம் என்ருல் என்ன? விளக்க முடியுமா?

**வள் :** மனத்தில் மாசு எதுவும் இல்லாமல் இருப்பதுதான் அறம். அறனெனப்பட்டது இல்வாழ்க்கையே; அதனுல் வருவதுதான் உண்மையான இன்பம்.

**நக் :** நீங்கள் அறத்தின் வழி பொருளை ஈட்டமுடியுமா? பொய் புரட்டு இல்லாமல் அதைச் சேர்க்க முடியாது என்கிருர்களே?

வள் : சரியல்ல; பொருளை அற வழியிலேயே ஈட்ட முடியும். அதற்கு மன உறுதி வேண்டும்.

கபி : நீங்கள் சொல்லும் பொருள் அருளுக்கு வழி காட்டுமா? பொருள் வந்துவிட்டால் மக்கள் மருளில் ஆழ்ந்து விடுவார்கள் என்பதை நடைமுறையில் பார்க்கிறோமே!

வள் : அதெல்லாம் இல்லை. பொருள் என்னும் பொய்யா விளக்கம் மருளாகிய இருளையெல்லாம் அடியோடு விரட்டி விடும். ஆனால், அது அன்போடும் அருளோடும் வரவேண்டும். அருள் என்னும் அன்பு பெற்ற குழந்தை பொருள் என்னும் செல்வச் செவிலியால்தான் நன்றாக வளர முடியும். தீய வழியில் பொருளைத் திரட்டினால் அது நிலைத்து நிற்காது என்றும் நான் இந்நூலின் வாயிலாக எச்சரித்து இருக்கிறேன்.

நக் : பொருளைப்பற்றிப் பேசியது போதும். இன்பத்தைக் கவனிப்போம்.

பர : (நகைத்து) எல்லா உயிர்களுமே இன்பத்தைத் தானே அவாவிக் கொண்டிருக்கின்றன? அறம், பொருளைப் பற்றியெல்லாம் அவைகளுக்கு அதிக அக்கறையில்லை.

வள் : அப்படிச் சொல்வதற்கில்லை. இன்பத்தை முற்றுகத் துய்ப்பதற்குங்கூட அறத்தின் சார்பு அவசியம். பொருள் அதற்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

இறை : அப்படியா?

ஔ : என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? இறையனுருக்குத் தெரியாததா?

வள் : அறத்தால் வருவது தான் உண்மையான இன்பம் என்பது என் கருத்து. அன்பும், அறமும் துணையாக இருந்தால் தான், இல்வாழ்க்கை வாயிலாக ஆணும் பெண்ணும் துய்க்கும் இன்பம் பண்பும் பயனும் உடையதாய் இருக்கும். இவைகளையெல்லாம் நான் முப்பாலிலும் நன்கு விரித்துரைத்திருக்கிறேன்.

இறை : வேறு ஏதேனும் கேட்க வேண்டுமா? நக்கீரரே!

நக் : இல்லை. நான் கேட்க வேண்டியதையெல்லாம் கேட்டு விட்டேன். வள்ளுவர் தந்த விளக்கம் எனக்கு மன நிறைவை யளித்து விட்டது.

உக் : நக்கீரரே இப்படிச் சொல்லிவிட்ட பின்னர் வேறு யாருக்கு என்ன கேள்வி கேட்க வாயெழும்?

உரு : வள்ளுவத்தை நாம் இன்னும் உரைத்துப் பார்க்க முற் பட்டோமானல், நம்முடைய அறிவின் மாற்றுத்தான் குறைந்து போகும்.

சிறுமேதாவியார் : ஒரேயடியாக அப்படிச் சொல்லி விடுவதற் கில்லை நாம் வள்ளுவர் குறளை இதுவரை உரைத்துப் பார்த்தது ஒருபுறமிருக்கட்டும். சங்கப்பலகை இந்நூலை எப்படி எடை போடுகிறது என்று பார்ப்போம்.

பர : (பரிகாசமாக) அட! நாம் வேறு; சங்கப்பலகை வேறு? மேதாவியார் மூளை குறுக்கில் பாய்கிறதே!

இறை : விளக்கமாகச் சொல்லுங்கள் உங்கள் கருத்தை. அடுத்து நாம் என்ன செய்யவேண்டும்?

சிறு : சங்கப் பலகையைக் கொண்டு போய் பொற்ருமரைக் குளத்தில் மிதக்க விடுவோம். அதில் நாம் 49 புலவர்களும் அமர்ந்து திருக்குறளையும் வைக்கச் செய்வோம். சங்கப் பலகை அதை ஏற்றுக் கொண்டால், திருக்குறள் ஒப்பற்ற நூல் என்று நாம் ஒப்புக் கொள்வோம். இல்லையானல்...

இறை ; சங்கப்பலகை ஏற்றுக் கொண்டால்தான் நீர் வள்ளு வர் குறளை ஒப்புக் கொள்வீர். அவ்வளவு தானே! (அரசனை நோக்கி) மன்ன! சிறுமேதாவியார் சொல்கிறபடியே செய்து விடுவோமா?

உக் : செய்து விடுவோம்.

உருத் : எனக்கு வேலையில்லாமல் போய்விட்டது.

(சங்கப்பலகை மீது இருந்து எழுந்து வரு கிறார். வள்ளுவரும் அவரைப் பின் தொடரு கிறார். உடனே பணியாளர்கள் சங்கப் பலகையைத் தூக்கிக்கொண்டு போய்ப் பொற்றாமரைக் குளத்தில் மிதக்க விடுகின்ற னர். பின்னே சென்ற சங்கப் புலவர்கள் அதில் போய் வரிசையாக அமருகின்றனர். ஔவையாரும் இடைக்காடரும் உடன் வரச் சென்ற வள்ளுவர் தம் திருக்குறள் சுவடியை சங்கப்பலகையில் புலவர்களுக்கு மத்தியில் வைக்கிறார். உடனே சங்கப் பலகை திருக்குறளின் சுவடி மட்டும் இருக் கும்அளவுக்குச் சுருங்கி, புலவர்களைக் குளத் தில் தள்ளி விட்டுத் திருக்குறளுக்கு மட்டும் இடந்தருகிறது. இதைக்கண்டு அனைவரும் ஆச்சரியத்தால், 'ஆகா!' என ஆரவாரம் செய்கின்றனர். சங்கப்புலவர்கள் ஆடை நனைய குளத்தில் இருந்து வெளியேறி அவ மானத்தால் தலைகுனிந்து நிற்கின்றனர்.)

**இறை :** சிறு மேதாவியார் இப்போது என்ன சொல்கிறார்?

**சிறு :** தலைவர் அடியேனை மன்னிக்க வேண்டும். ஆணவம் அறிவுக் கண்ணை மறைத்துவிட்டது.

**இறை :** வள்ளுவருடைய திருக்குறள் இதுவரை வெளிவந் துள்ள அறிவு நூல்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது; உலகிலேயே ஒப்பற்ற ஒரு நூல் என்று நாம் அறிஞர் உல குக்கு அறிவிக்கின்றோம். வள்ளுவர் புகழ் வையகமெங் கும் பரவுக என்றும் வாழ்த்துகின்றோம்.

**எல்லோரும் :** திருவள்ளுவர் வாழ்க! வாழ்க!!

(வாழ்த்தொலி எதிரொலிக்கிறது. சங்கப்புல வர் அனைவரும் திருவள்ளுவரைச் சூழ்ந்து கொண்டு வாயார வாழ்த்துகின்றனர்.)

இறை : திருவள்ளுவரே! உம்முடைய ஒவ்வொரு குறளும் தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளில் அர்ச்சிக்கத்தக்க பொன்மலர்கள். செந்தமிழ்க் கற்பகத்தின் தேன் பிலிற்றும் தெய்வத் திருமலர்.

உக் : நான்மறையின் மெய்ப்பொருளை முப் பொருளாக உரைத்த நீர் பிரம்ம தேவரே! உமக்கு சென்னி தாழ்த்துகிறேன்.

கபி : உம்முடைய குறளில் உலகமுழுவதையுமே காட்டிவிட்டீர்! ஐயா!

பர : திருமால் வாமனராய் வந்து உலகை ஈரடியால் அளந்தது போல், வள்ளுவரே! நீர் குறள் வெண்பாவால் மக்கள் உள்ளத்தை முழுதும் அளந்து விட்டீர்.

மாமூலனார் : அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் திறந்தெரிந்து செப்பிய தேவர் நீர்!

அரிசில் கிழார் : பரந்த பொருளையெல்லாம் பாரறிய சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லும் உம்முடைய ஆற்றலை வேறு யாரிடமும் இதுவரை நான் காணவில்லை.

வெள்ளிவீதியார் : செய்யா மொழிக்கும் வள்ளுவரே! நீர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றுதான் என்று தெரிந்து கொண்டோம்.

மாங்குடி மருதனார் : ஓதற்கு எளியதாய் உணர்தற்கு அரிதாகி வேதப் பொருளாய் மிக விளங்கி உள்ளுதொறும் உள்ளுதொறும் உம்முடைய வாய்மொழி எங்கள் உள்ளத்தை உருக்குகின்றது, ஐயா!

தமிழ்நாகனார் : எல்லாப் பொருளுமே குறள் பாவில் இருக்கின்றன. இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லை.

களத்தூர்கிழார் : வள்ளுவர் குறளை ஓதிவிட்டால் அருமறைகள் ஐந்தையும், சமய நூல் ஆறையும் கூடப் படித்தறிய வேண்டியதில்லை என்பது என் கருத்து.

கவுணியனார் : வள்ளுவரே! உம்முடைய இன் குறள் சிந்தைக்கு இனியது! செவிக்கு இனியது. வாய்க்கு இனியது. வந்த இருவினைக்கு மாமருந்து; ஐயா!

இடை : (சங்கப் புலவர்களைப் பார்த்து) நீங்கள் எல்லாம் புகழ்ந்துரைத்து விட்டீர்கள் அல்லவா? வள்ளுவர் குறளுக்கு என் பாராட்டைக் கேளுங்கள்:

கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்.

ஔ : கடுகு கூட பெரிது, ஐயா! இடைக்காடரே! வள்ளுவர் தம் ஆற்றலால் அணுவையும் துளைத்து விட்டார்.

அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்.

உரு : (நகைத்தவாறு) எல்லாரும் சேர்ந்து வள்ளுவரைப் புகழ் மழையில் குளிர்வித்து விட்டீர்கள். என்னைக் கேட்டால் இதுகூடக் காணாது என்பேன்.

உக் : வள்ளுவரே! நீரும் எங்கள் தமிழ்ச்சங்கத்தில் புலவராய் வீற்றிருந்து சிறப்புச் செய்யவேண்டும்.

நக் : ஆமாம். எங்களுடன் இருந்து நீங்களும் நம் தாய் மொழியை வளப்படுத்துங்களேன்.

வள் : உங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கமுடியாத நிலையிலிருப்பதற்கு வருந்துகிறேன். எனக்கு இன்னும் சில கடமைகள் இருக்கின்றன. நான் உடனே ஊருக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.

இறை : வள்ளுவரை வற்புறுத்தாதீர்கள். அவர் வையகம் முழுவதற்கும் உரியவர். நாம் மதுரைத் தமிழ்ச்சங்க மண்டபத்துக்குள் அவரை அடைத்துவிடக் கூடாது. ஐயா! நீங்கள் உங்கள் விருப்பப்படியே போய் வாருங்கள்.

உரு : நீங்கள் உங்கள் ஊருக்குத் திரும்புவதற்கு முன் சிரமம் பார்க்காது பொதிய மலைக்குச் செல்ல வேண்டும். அங்கு

நம் தமிழ் வளத்துக்காகவே தவம் புரிந்து கொண்டிருக்கும் அகத்திய முனிவரிடம் திருக்குறளைக் காட்டி அவருடைய வாழ்த்தையும் பெற்றுக்கொண்டு செல்லுங்கள், ஐயா!

வள் : உங்கள் யோசனைக்கு நன்றி; உருத்திர சன்மரே! நீங்கள் கூறியபடியே தமிழ் தந்த தவ முனிவரைத் தரிசித்து திருக்குறளை அவருடைய திருவடிகளில் வைத்து அருள் ஆசி பெற்றுத் திரும்புவேன். (மற்ற எல்லோரையும் பார்த்து) நான் போய் வருகிறேன். எல்லோருக்கும் என் அன்பு வணக்கம்.

ஔ : } இடை : } நாங்களும் விடை பெற்றுக் கொள்ளுகிறோம், புலவர்களே!

இறை : போய் வாருங்கள்; நலமே! ஐயன்மீர்!

வள் : (தமக்குள்) வாசுகி! உன் இறுதி வேண்டுகோளை நிறைவேற்றி விட்டேன். உன்னுடைய ஆன்மா அமைதி அடைவதாக!

எல்லோரும் : திருவள்ளுவர் வாழ்க! திருக்குறள் வாழ்க! தமிழ் வாழ்க! வாழ்க!!

(வாழ்த்தொலி முழங்குகிறது.)

முற்றுப் பெற்றது.



திருவாளர் நாரண—துரைக்கண்ணன் அவர்கள் 1906-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24-ந் தேதியன்று திருமயிலாப்பூரில் பிறந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றவர். 'எழுதுகோல் தெய்வம்; எழுத்தும் தெய்வம்' என்று நம்பி இலக்கிய வாழ்வு நடத்திவருபவர். 'எனது தொழில் இலக்கியம் படைப்பது' என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்பவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வருகிறார். லோகோபகாரி, தேசபந்து ஆகிய வாரப் பத்திரிகைகளில் துணை ஆசிரியராகவும், திராவிடன், இந்தியா ஆகிய தினசரிப் பத்திரிகைகளில் துணை ஆசிரியராகவும் எட்டு ஆண்டுகளும், ஆனந்த போதினி, பிரசண்ட விகடன் ஆகிய இரு இதழ்களுக்கு ஆசிரியராக முப்பத்திரண்டு ஆண்டுகளும் பணியாற்றியவர். சிறுகதை, நாவல், நாடகம், இலக்கியக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள் என இலக்கியத்தின் பல துறைகளிலும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இயற்றியிருக்கிறார். ஜீவா, லியோ, வேள் மைவண்ணன், துலாம் முதலிய புனைப்பெயர்கள் இவருக்கு உண்டு. தமிழ் இலக்கிய உலகில் ஒரு சிறப்பான தகுதி பெற்றிருப்பவர். 'தமிழகத்தின் தலைசிறந்த இலக்கியக் கலைஞர்' என, பேரறிஞர்கள் இவரைப் புகழ்ந்து பாராட்டியிருக்கின்றனர். தமிழ்நாடு நாடக சங்கீத சங்கமும், தமிழ் எழுத்தாளர் சங்கங்களும் இவருக்கு விருதுகள் வழங்கிப் பெருமைப்படுத்தி இருக்கின்றன.